227075

D
1211,31 Pob
Pob.3.3
227075

13/11/06

**31–5–2006**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| **1. தகவல் கோரல்—** | |
| (அ) எதிர்க்கட்சித் தலைவர் தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டி | 215 - 222 |
| (ஆ) புகையிலையின் நச்சுத் தன்மை குறித்து மக்களிடத்திலே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் | 222 - 223 |
| (இ) தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதி முந்தைய அரசில் சரிவர செலவிடப்படாதது | 223 - 227 |
| **2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடிகளுக்கு (தனியார் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டுச்) சட்டமுன்வடிவு, 2006 | 227 - 228 |
| (ஆ) தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டமுன்வடிவு, 2006 | 228 - 229 |
| **3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடை (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2006 | 229 - 250 |
| மாண்புமிகு திரு. இ. பெரியசாமி | 229, 244 - 248, 250 |
| திரு. கு. ஜெயக்குமார் | 230 - 236 |

பக்கங்கள்

**3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி

(அ) தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடை (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2006—தொடர்ச்சி

*திருமதி ரா. லீமாரோஸ் 236-238

திரு. கி. ஆறுமுகம் 239-240

திருமதி பி. பத்மாவதி 241-242

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 248-249

(ஆ) தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2006 250-252

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி 251, 252

(இ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடிகளுக்கு (தனியார் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டுச்) சட்டமுன்வடிவு, 2006 254-256

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி 254-256

(ஈ) தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டமுன்வடிவு, 2006 256-275

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு 257, 263, 270-275

திரு. விடியல் எஸ். சேகர் 257-259

திரு. ஜி.கே. மணி 259-262, 264, 265, 268

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் 265

திரு. எஸ். இராஜசேகரன் 265-267



பக்கங்கள்

**3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டமுன்வடிவு, 2006—தொடர்ச்சி

திரு. எச். வசந்த குமார் 267-269

திரு. ப. டில்லி பாபு 269-270

**4. அரசினர் தீர்மானங்கள்**—

(அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல் 253

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல் 303

**5. அரசினர் தனித் தீர்மானம்**—

உயர் கல்வி நிலையங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்க மத்திய அரசைக் கோருதல் 275-302

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் 275-280

திரு. வை. சிவபுண்ணியம் 281-285

திரு. என். நன்மாறன் 285

திரு. ஜி.கே. மணி 285-292

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் 293-298

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 299-301

**6. அறிவிப்பு**—

ஓய்வுபெறும் சட்டமன்றப் பேரவை அலுவலருக்குப் பாராட்டு 303

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 304

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வைகாசி 17, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 மே 31, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு"

காலம் தாழ்த்தாத விரைவான நடவடிக்கைகளும், அறிவுடைமையும், துணிவும் நாடாளுகின்றவர்களுக்குத் தேவையானவையும், நீங்காமல் நிலைத்திருக்க வேண்டியவையுமான முப்பண்புகளாகும். (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. தகவல் கோரல்

### (அ) எதிர்க்கட்சித் தலைவர் தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டி

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய பத்திரிகைகளைப் பார்க்கிறபோது, நம்முடைய மாமன்றத்தில் இருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், 30–05–2006 ஆம் நாள், நம்முடைய சட்டமன்ற வரலாற்றிலே ஒரு கறுப்பு தினம் என்றும், இங்கே ஜனநாயகப் படுகொலை நேற்று நடந்தது என்றும், தன்னைப் பேச அனுமதிக்கவில்லை என்றும் பேட்டியிலும் கூறியிருக்கிறார், அறிக்கைகளிலும் கூறியிருக்கிறார். ஆகவே, நான் அறிய

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227075
சென்னை 600 008
நூலகம்

விரும்புவதெல்லாம், இந்த அவை, அதேபோல நாட்டு மக்கள் அறிய விரும்புவதெல்லாம், பொதுவாக ஓர் எதிர்க்கட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னால், நீங்கள் அதை அங்கீகாரம் செய்து, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும்—எங்களுக்கெல்லாம்கூட இரவு 8½ மணியளவிலே தகவல் வந்துவிட்டது. அவர்களுக்கு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய இருக்கைக்கு நேர் எதிரே இருக்கக்கூடிய இருக்கை அளிக்கப்பட்டுவிட்டதாகவும், அதற்குப் பக்கத்திலே முன்னாள் முதல்வரும், பிறகு பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கு துணைத் தலைவர் இருக்கையும், அதற்குப் பக்கத்திலே கொறடாவாக இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்களுக்கு இருக்கையும் அளிக்கப்பட்டிருப்பதாகவும் எங்களுக்குத் தகவல் அப்போதே வந்துவிட்டது, அங்கீகாரம் என்று வந்துவிட்டது. பிறகு ஓர் எதிர்க்கட்சித் தலைவர், பொதுவாக அவைக்கு வருவார் என்றுதான் நாடே எதிர்பார்த்துக் கொண்டிருந்தது; பத்திரிகைகளும் பரபரப்பாக எழுதின. முன்னாள் முதல்வர் அவர்கள் அவைக்கு வரப்போகிறார் என்று பரபரப்பான செய்திகள் எல்லாம் இருந்தன. ஆனால், அவர்கள் ஏனோ இங்கே வரவில்லை.

நம்முடைய முதல்வர் அவர்கள், நிறைய பெரும்பான்மையைப் பெற்று, இப்போது தமிழகத்திலே ஒரு நல்லாட்சியை அமைத்த பின்னாலும்கூட, நம்முடைய முதலமைச்சரை வரவேற்பதற்கு அப்படிப்பட்ட ஆரவாரமோ, படாடோபமோ, பந்தாவோ இல்லையென்பதை நாமும், இந்த அவையும், நாட்டு மக்கள் நன்றாகவே உணர்ந்திருக்கிறார்கள் என்பதை பார்த்துக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இப்போது எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்களைப் பார்த்தோமென்று சொன்னால், அவர்களை வரவேற்பதற்குப் பெரிய அ.தி.மு.க. கூட்டம், அதேபோல எம்.எல்.ஏ.-க்கள், அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம், ஏதோ முதலமைச்சரை வரவேற்பதுபோல அவர்கள் முன்னாலே நின்றுகொண்டு, அதற்கு ஒரு பெரிய பரபரப்பு, காவல் துறையுடன் மோதல்; உண்மையில் நான் இன்னொன்றையும் அறிய விரும்புகிறேன்.

தாங்கள், 120—வது விதிப்படி, இந்த அவையிலே யாராவது இடைநீக்கம் செய்யப்பட்டுவிட்ட உறுப்பினர் என்று சொன்னால், அவர்கள் உள்ளே வருவதற்கு அனுமதி உண்டா என்பதை நான் முதலிலே அறிய விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், நீங்கள் முதல் Section,



அத்தியாயம் 1-ல் பார்த்தீர்களென்றால், Precincts – சட்டமன்ற வளாகம் என்பது எது என்பது இங்கே மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

"Precincts of the House" Means–

'In the case of Members of the Legislative Assembly, the Assembly Chamber, Lobbies and the rooms in which the associated offices are situated, the ministers rooms, the Library, the Canteen and the Committee room in Fort St. George, the Committee room in the Old Legislator's Hostel and the Legislature Library in the Government Estate, Anna Salai and such other places or buildings as might be named by the Speaker from time to time together with verandahs and steps to these buildings and the pathways leading from the Assembly Chamber to the other aforesaid buildings and shall be applicable only while the Assembly or any of its Committee or sub–committee sits and one hour before and after such a sitting;'

என்று முதல் அத்தியாயத்திலேயே Precincts of the House – சட்டமன்ற வளாகம் என்று சொன்னால், அதற்கு என்ன இலக்கணம் என்பதை வகுத்து, அதிலே நம்முடைய St. George கோட்டையும் இருக்கிறது; Canteen–னும் இருக்கிறது; வெளியிலே வரக்கூடிய verandah–வும் இருக்கிறது; படியும் இருக்கிறது; இதுமட்டுமல்ல; இங்கேயிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவிலே இருக்கக்கூடிய எம்.எல்.ஏ. ஹாஸ்டலும் சரி, பழைய எம்.எல்.ஏ. ஹாஸ்டலும் சரி, அங்கிருக்கக்கூடிய Committee Room–க்குக்கூட வரக்கூடாது என்பதுதான் விதி.

*முற்பகல் 9–35*

உங்களுக்கு முன்னாலே இருந்த, இந்த ஆசனத்தை அலங்கரித்த நம்முடைய முன்னாள் பேரவைத் தலைவர், அமரர் ஆகிவிட்ட பெருந்தகை, நம்முடைய பழனிவேல் ராஜன் அவர்கள்கூட, தாமரைக்கனி அவர்கள் ஹாஸ்டலிலேயே தங்கக்கூடாது என்றுகூட அவர்கள் ஓர் உத்தரவைப் போட்டு, அங்கிருந்து காலி செய்தார்கள். ஏனென்று சொன்னால், அங்கே அவ்வளவு பிரச்சினை வருகிறது என்று. இப்படி மிகத் தெளிவாக விதி இருக்கிறபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு உள்ளே வர உரிமையிருக்கிறது என்று காவல் துறையிடம் பெரிய களேபரம்—எங்களைத்தான் அடித்துவிட்டு, மைக்கை உடைத்துவிட்டு பெரிய கலவரத்தை, அமளி துமளியை இந்த அவையிலே உருவாக்கி விட்டுப் போய்விட்டார்கள். பிறகு, காவல் துறையிடம் அவர்கள்

[திரு. சி. ஞானசேகரன்] [2006 மே 31

மோதுகிறார்கள். பத்திரிகைகளும், ஏதோ அவர்களுக்கு உரிமை இருப்பது போலவும், இந்த ஆட்சிதான் அவர்களை உள்ளே வரத் தடுப்பது போலவும், ஒரு பிரமையை, பாவனையை, ஒரு தோற்றத்தை இந்த நாட்டிற்கு கொடுத்துக்கொண்டிருக்கின்றன. அதையும் தாங்கள் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, இன்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இது ஒரு கறுப்பு தினம் என்றும், அதேபோல ஜனநாயகப் படுகொலை நடந்துவிட்டது என்றும், தன்னைப் பேச அனுமதிக்கவில்லை என்றும் கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே, ஆளுநர் உரையிலே அவர்கள் ஒருமுறை பேசிவிட்டார்கள். அதுவும், ஆளுநர் உரையிலே ஒரு தடவைக்கு மேல் ஓர் உறுப்பினர் பேச முடியாது என்பது நன்றாகத் தெரிந்த விதி, பேசவே முடியாது. சரி, அவர் எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுவிட்டார். மீண்டும் அந்த உரிமையைக் கோருகிறார் என்று சொன்னாலும்கூட, ஏதாவது Video Conferencing–லோ அல்லது தொலைபேசியிலோ பேசுவதெல்லாம் பேச்சல்ல. இந்த அவையிலே நாங்களும் அவரைப்போல சட்டமன்ற உறுப்பினர்கள். நானேகூட பலமுறை கேட்டிருக்கிறேன். உரிமையை நீங்கள் மறுத்து உட்காருங்கள், உட்காருங்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள்; ஆய்விலே இருக்கிறது என்று சொல்கிறீர்கள். நாங்களும் விடாப்பிடியாக எப்படியாவது உங்களிடம் கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டால், பிறகு நீங்கள் மனமிறங்கி எங்களுக்கு வாய்ப்பைத் தருகிறீர்கள்.

அப்படி நேற்றுகூட இங்கே பார்த்தோம் என்று சொன்னால், மாண்புமிகு முதல்வர் உள்ளிட்டு அனைவரும் எதிர்க்கட்சித் தலைவர் வரப்போகிறார் என்றுதான், எல்லோருமே காத்திருந்தார்கள். பத்திரிகைகளும் ஆவலாக அதைப்பற்றி எழுதினார்கள். ஆனால், இங்கே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையை 12.36–க்கே முடித்துவிட்டார்கள். ஆனால், அவர்கள் வந்திருந்தால்கூட ஒரு மணி நேரம் கொடுத்திருப்பீர்கள், கேட்டிருந்தால் நிச்சயமாக. ஏனென்றால் ஒன்றரை மணிக்கு அவை முடிகிறது. ஆனால், இவர்கள் வராமலேயே, இந்த அவையில், தான் ஓர் உறுப்பினர் என்ற முறையில் வந்து, தனக்குப் பேச வாய்ப்பு வேண்டும் என்று கேட்க வேண்டுமேயொழிய, ஏதோ தங்களுக்கு உங்களுடைய செயலகத்திலிருந்து ஒரு கடிதம் வரும், தங்களுக்கு அழைப்பு வரும் என்று பிரத்யேகமாக ஏதோ உரிமையை எதிர்பார்க்கிறாரா? அப்படி ஏதாவது உரிமையை நீங்கள் வழங்கியிருக்கிறீர்களா? அதுமாதிரி உரிமை எங்களுக்கும் வழங்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



2006 மே 31] [திரு. சி. ஞானசேகரன்]

இப்படி அவர்கள் கறுப்பு தினம் என்றும், ஜனநாயகப் படுகொலை என்றும் அவைக்கு வராமலேயே சொல்வது—இந்த மன்றத்திற்கு இரண்டு நாளைக்கு முன்னால் உறுப்பினர் இங்கே வந்தார். பிறகு பேசினார், பாதுகாப்போடு சென்றார். இப்படியெல்லாம் போனவர்கள், இந்தச் சட்டமன்றத்திற்கு வராமலேயே தனக்கு வாய்ப்பு தரப்படவில்லை, கறுப்பு தினம் என்றெல்லாம் சொல்வது, ஜனநாயகப் படுகொலை என்று சொல்வதெல்லாம், இந்த அவை உரிமையை மீறிய ஒரு செயலாகும். இது நிச்சயமாக அவையை அவமதிப்பதாகும். அவர்களுக்குத் தகுந்த வாய்ப்பு கொடுக்கப்பட்டிருந்தும்கூட, அதைப் பயன்படுத்திக் கொள்ளாமல், அவர்கள்—அதி.மு.க சட்டமன்ற உறுப்பினர்களே வருவார், வருவார் என்று காத்துக்கிடக்கிறார்கள். ஏனோ, திடீரென்று அவர்களுக்கு மனம் மாறிவிடுகிறது, வருவதில்லை. இப்படி ஏடாகூடமாக இருந்து கொண்டிருக்கக்கூடிய அவர்கள் நிலையைப் பார்க்கிறபோது நம்முடைய நாட்டு மக்களையும் குழப்பி, அவர்களுக்கு இருக்கக்கூடிய உரிமையை நீங்கள் பறித்துவிட்டதுபோல, அவர்கள் சொல்வது எந்தவிதத்தில் நியாயம்? அவை உரிமையை மீறிய செயலை, எப்படி நீங்கள் இங்கே பரிசீலித்து, அதற்கான ஒரு தண்டனை வழங்கப் போகிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

அதேபோல், எதிர்க்கட்சிகள் வராமலேயே பிரதான எதிர்க்கட்சிக்கு வாய்ப்பு கொடுக்கப்படாமல், ஆளுநர் உரை இன்று pass செய்யப்பட்டிருக்கிறது என்ற ஒரு கருத்தை சொல்லியிருக்கிறார். இதே அவையில் அவர்கள் ஆட்சி செய்த காலத்திலே 10–2–2004–லே அப்போது பிரதான எதிர்க்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இல்லாமலேயே ஆளுநர் உரைபற்றி அப்போது பேசி பதிலுரை சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல 31–1–2003 அன்றும் பிரதான எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இல்லாமலேயே அன்றும் பதிலுரை சொல்லப்பட்டு அது முடிக்கப்பட்டிருக்கிறது. ஏன், நிதிநிலை அறிக்கையில் எல்லா எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இல்லாமலேயே நிதிநிலை அறிக்கை அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இந்த அவையிலே pass செய்யப்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் செய்துவிட்டு இன்று அவர்கள் ஒரு மாயையை, ஒரு தோற்றத்தைக் கொடுத்து, நாட்டு மக்களைக் குழப்புவது சரியா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், நீங்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதுகுறித்து எனது முடிவினை இப்போது அறிவிக்கிறேன்.

*30–5–2006* ஆம் தேதி மாலை ஏடுகளில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அளித்த அறிக்கையில், தன்னை சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகாரம் அளிக்கப்பட்ட செய்தி குறித்த தகவல் தனக்கு *29–5–2006* ஆம் தேதி இரவு *12–00* மணிக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும், தனக்கு *30–5–2006* ஆம் தேதி சட்டமன்றத்தில் உரையாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படுமா இல்லையா என்பதைத் தெரிவிக்கவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார். எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை *29–5–2006* ஆம் நாள் பிற்பகல் முதல் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக அவரை அங்கீகரித்து, தகவல் *29–5–2006* ஆம் நாளன்றே அவரது இல்லத்தில், வழக்கமாக அவருக்குத் தபால் எடுத்துச் செல்லும் சட்டமன்றச் செயலக அலுவலக உதவியாளர்மூலம் நேரடியாகவே கொடுக்கப்பட்டது.

*முற்பகல் 9–40*

சட்டமன்றத்திற்கு வருவதற்கு முன்பாகவே எந்தவொரு உறுப்பினருக்கும் அவர் சட்டமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பு உண்டா, இல்லையா என்பதையும், பேசுகின்ற நேரத்தையும் தெரிவிப்பது மரபு இல்லை. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தில், எதிர்க்கட்சித் தலைவர், முதலமைச்சர் உரையாற்றுவதற்கு முன்பு உரையாற்றுவது என்ற மரபு இருந்தாலும்கூட, சட்டமன்றத்திற்கே வராமல், அவர் தனக்குப் பேச வாய்ப்பு மறுக்கப்பட்டதாக பத்திரிகைக்கு அறிக்கை கொடுத்திருப்பது உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தியாகும். எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகரிக்கப்பட்ட தகவல் முந்தைய தினமே கிடைத்தது என்பதை அவரே ஒப்புக்கொண்டுவிட்டு, மறுநாள் சட்டமன்றத்திற்கு வந்து உரையாற்றாது, தனது ஜனநாயகக் கடமைகளைத் திட்டமிட்டு ஆற்றத் தவறவிட்டுவிட்டு, சட்டமன்றப் பேரவைத் தலைவர்மீது பழியைப் போட்டு, அவர் தப்பிக்க நினைப்பது எந்தவகையிலும் நியாயமற்றதும், உண்மைக்குப் புறம்பானதுமாகும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கருத்தை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். *31–01–2003* ஆம் தேதி அப்போதைய முதல்வர் இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இந்தச் சட்டமன்றத்தில் அவர்கள் பேசியது:

"இங்கே காலியாக இருக்கின்ற இந்த வரிசைகளைக் கண்டு நான் சிறிதும் கவலைப்படவில்லை. காலியான இந்த எதிர்க்கட்சி வரிசைகள்



எதனைக் காட்டுகின்றன? இரண்டு விஷயங்களை எல்லோருக்கும் காட்டுகின்றன. ஒன்று நம்மை எதிர்ப்பதற்கு தமிழ்நாட்டில் யாருமே இல்லை என்பதைக் காட்டுகின்றன. நம்மை எதிர்க்கும் திறமையோ, திராணியோ, துணிவோ, தகுதியோ யாருக்கும் இல்லை என்பதை இந்தக் காலியான வரிசைகள் காட்டுகின்றன.

இரண்டாவதாக, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள், தங்கள்மீது நம்பிக்கை வைத்து அவர்களுக்கு வாக்களித்து இந்த அவைக்கு அனுப்பிய தொகுதி மக்களுக்கு துரோகம் இழைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையே இந்தக் காலியான இருக்கைகள் காட்டிக்கொண்டிருக்கின்றன.

இங்கே நான் எனது உரையை ஆற்றிக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னால் யாருக்காக இந்த உரையை ஆற்றிக்கொண்டிருக்கிறேன். நம்மீது நம்பிக்கை வைத்திருக்கின்ற தமிழ்நாட்டு மக்களுக்காக இந்த உரையை ஆற்றிக்கொண்டிருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர்கள் இங்கே வந்து அமர்ந்தால் என்ன? அமராவிட்டால் என்ன? எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவைக்கு வந்தால் என்ன? வராவிட்டால் என்ன? அவர்களுக்காக நான் இங்கே பேசவில்லை. தமிழ்நாட்டு மக்களுக்காக நான் பேசுகிறேன். என்னுடைய பேச்சு தொலைக்காட்சிமூலமாக மக்களுக்குப் போய்ச் சேரும். தொலைக்காட்சி மூலமாக என்று ஏன் சொல்லுகிறேன்? பத்திரிகைகளில் பல வகை உண்டு.

பத்திரிகைகளில் அவர்களுடைய உரிமையாளர்களின் policy– கொள்கை என்னென்னவோ அதற்கேற்பதான் செய்திகளை வெளியிடுவார்கள். நான் நிருபர்களைக் குறை சொல்வதே கிடையாது. நிருபர்கள் பாவம். அவர்கள் என்ன செய்வார்கள்? நிருபர்கள் பல பேருக்கு இந்த அரசு மீது நல்லெண்ணம் உண்டு. என்மீது நன்மதிப்பும் உண்டு. அவர்கள் நல்ல செய்திகளை, உண்மையான செய்திகளை உள்ளபடியே எழுதிக்கொடுக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய பத்திரிகை அலுவலகத்தில், editorial desk–ல் எல்லாம் மாறிவிடுகிறது. ஆகவே, பத்திரிகைகள்மீது நான் என்றைக்கும் நம்பிக்கை வைத்தது இல்லை. இப்போதும் வைக்கவில்லை. தொலைக்காட்சி இருக்கின்றது. அந்தத் தொலைக்காட்சிமூலமாக இங்கே நான் ஆற்றுகின்ற உரையும், சொல்லுகின்ற கருத்துகளும் மக்களுக்குப் போய்ச் சேரும். அதுதான் நமக்குத் தேவை. அது எனக்குப் போதும்."

என்று முன்னாள் முதல்வரும் இன்றைய எதிர்க்கட்சித் தலைவரும் கூறியிருக்கிறார்கள். ஆகவே, எதிர்க்கட்சி வரிசையில் அன்று நாங்கள்

எல்லாம் அமரவில்லை என்பதை கேலியும் கிண்டலும் செய்துவிட்டு, அவர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்காக உரையாற்றவில்லை. தமிழ்நாட்டு மக்களுக்காக உரையாற்றுகிறேன், அதுவும் இந்த பத்திரிகையாளர்களை நான் நம்பவில்லை, தொலைக்காட்சியை நம்புகிறேன் என்று சொன்னார்கள். ஆனால், இன்றைய மாண்புமிகு முதல்வர் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அவரே ஒரு பத்திரிகையாளர். பத்திரிகையாளர்கள்மீது நிறைய நம்பிக்கை வைத்திருக்கிறார். நாட்டு மக்களுக்கு அவர் நேரடியாக நின்று உரையாற்றுகிறார் என்பதில் எப்பொழுதுமே அவரிடம் எந்தவிதமான அகம்பாவமோ எதுவும் கிடையாது.

எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கக் கூடியவர்கள் வரவேண்டும் என்று விரும்பித்தான், அவராகவே, நீங்கள் கூட்டத் தொடர் முழுவதும் அவர்களை நீக்க வேண்டுமென்று கொடுத்த உத்தரவைக்கூட மறுபரிசீலனை செய்யச் சொல்லி, பட்ஜெட் கூட்டத் தொடரிலே அவர்கள் எல்லாம் கலந்துகொள்ள வேண்டுமென்கிற வாய்ப்பை நல்கிய ஓர் உன்னதமான தலைவர்தான் நம்முடைய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை அவர்கள் நிரூபித்திருக்கிறார்கள். ஆகவே, நாட்டு மக்களுக்கு இந்தச் செய்தி நன்றாகவே போய் சேர்ந்து கொண்டிருக்கிறது. அதனால், குழப்பத்தை இனியாவது விளைவிக்க வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 9–45*

## (ஆ) புகையிலையின் நச்சுத் தன்மை குறித்து மக்களிடத்திலே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி.*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று புகையிலை எதிர்ப்பு நாள். புகையிலை என்பது உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கிற, ஊறு விளைவிக்கிற நச்சுத்தன்மை கொண்ட ஒன்று. இதைக் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு நம்முடைய அரசு முன்வர வேண்டுமென்று நான் இந்த அவையின்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.



குறிப்பாக, நம்முடைய இந்தியத் திருநாட்டில் இந்தப் புகையிலையினால் ஏற்படக்கூடிய நோயின் ஆபத்தினால் ஒரு நாளைக்கு 2,200 பேர் உயிர் இழக்கிறார்கள். தமிழ்நாடு அளவில் ஒரு நாளைக்கு 135 பேர் உயிரிழக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் நம்முடைய மருத்துவர் சின்ன அய்யா அன்புமணி அவர்கள், நாடாளுமன்றத்திலே இதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மக்கள் மத்தியிலே விழிப்புணர்வை உண்டாக்க வேண்டும். குறிப்பாக, மிகப்பெரிய ஊடகமான திரைப்படங்களில்கூட, அதற்குத் தடை விதிக்க வேண்டும். அதேபோல, பொது இடங்களில் புகைப்பிடித்தலை ஊக்குவிக்கக்கூடாது, தடைசெய்ய வேண்டுமென்ற அந்த வேண்டுகோளையெல்லாம் மத்திய அரசு விடுத்துக் கொண்டிருக்கிற இந்த வேளையில், நம்முடைய தமிழக அரசு பொது இடங்களில் புகைப்பிடித்தல் கூடாது என்ற வகையில், அதைச் சட்டமாகக் கொண்டுவந்தாலுங்கூட, நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. அதை அமலாக்குவதற்கு, விழிப்புணர்வை உண்டாக்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்ற வேண்டுகோளை இம்மாமன்றத்தின் மூலமாக வைத்து அமர்கிறேன்.

## (இ) தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதி முந்தைய அரசில் சரிவர செலவிடப்படாதது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களுடைய அனுமதியோடு இந்த அவையினுடைய கவனத்திற்கும், தமிழக மக்களுடைய கவனத்திற்கும் ஒரு முக்கியமான செய்தியைச் சொல்ல ஆசைப்படுகிறேன். மத்தியிலே ஆளுகின்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, தனது குறைந்தபட்ச செயல் திட்டத்திலே, இந்த தேசத்திலே கிராமப்புறங்களிலே வாழ்கின்ற மக்களுக்கு ஒரு மிகப்பெரிய வேலைவாய்ப்பினை உருவாக்குகின்ற வகையில், மத்திய அரசினுடைய தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தை நிறைவேற்றித் தந்து, அதன்மூலமாக இந்தியாவிலே வாழ்கின்ற தகுதியுள்ள, உடல்நலமுள்ள, ஆண், பெண் அத்தனை பேருக்கும், வருடத்தில் கண்டிப்பாக 100 நாட்களுக்கு வேலைவாய்ப்பினை உறுதி செய்து கொடுத்திருக்கிறது. அப்படி, வேலைவாய்ப்பு கொடுக்கப்படவில்லை

என்று சொன்னால், அந்தத் திட்டத்தின் பயனாளிகளாக இருக்கின்றவர்களுக்கு வேலையே கொடுக்காமல், தினசரி அவர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டும் என்பதை, வரலாற்றிலே இல்லாத அளவிற்கு ஒரு மிகப்பெரிய புரட்சிகரமான சட்டமாக இயற்றி அதைத் தந்திருக்கிறது.

இந்தச் சட்டத்தினுடைய பயனை தமிழகம் எப்படிப் பெற்றிருக்கிறது என்பதை நாம் பார்க்கின்றபோது, எங்களுக்கு மிக அதிர்ச்சியாக இருக்கிறது. அன்னை சோனியா காந்தி அவர்களும், பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களும் இந்தத் திட்டம் தமிழகத்தில் எப்படிச் செயல்படுகிறது என்பதை ஆராய்ச்சி செய்வதற்காக, எங்கள் இயக்க நண்பர்களைப் பணித்து, இந்த அவையிலே உறுப்பினராக இருக்கின்றவரும், தமிழக மகளிர் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவியுமாக இருக்கின்ற டாக்டர் காயத்திரி அவர்களும், மற்றவர்களும் ஆறு மாவட்டங்களிலே சுற்றுப்பயணம் செய்து, இந்தத் திட்டம் எப்படிச் செயல்படுகிறது என்கிற அந்த விவரங்களைச் சேகரித்தபோது, நாங்கள் நெஞ்சமெல்லாம் கனத்துப்போனோம். இந்தத் திட்டம், கடலூர், நாகப்பட்டினம், திருவண்ணாமலை, திண்டுக்கல், விழுப்புரம் மற்றும் சிவகங்கை ஆகிய ஆறு மாவட்டங்களுக்கு இப்போது விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆறு மாவட்டங்களிலே கடந்த ஆண்டு எனக்குத் தரப்பட்ட தகவல்கள் சரியாக இருந்தால், 66 கோடி ரூபாய், இதற்காக போன ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மூன்று கோடி ரூபாய் மட்டும்தான் பயன்படுத்தப்பட்டு, மீதி 63 கோடி ரூபாய் பயன்படுத்தப்படாமலே இருக்கிறது என்பதை நாங்கள் அறிகிறோம்.

அதுமட்டுமல்ல, உதாரணமாக, கடலூர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், 2,41,912 பேர் மனுச் செய்திருக்கிறார்கள். ஆனால், வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டது 5,871 ஆண்களுக்கும், 7,041 பெண்களுக்கும். 10 விழுக்காடுகூட அந்தப் பயனாளிகளுக்கு வேலை வழங்கப்படவில்லை. இதைப்போல, ஒவ்வொரு மாவட்டத்திலும், நாகப்பட்டினத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, திருவண்ணாமலையை எடுத்துக்கொண்டாலும் சரி, திண்டுக்கல்லை எடுத்துக்கொண்டாலும் சரி, விழுப்புரத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, சிவகங்கையை எடுத்துக்கொண்டாலும் சரி, மொத்தம் இந்தத் திட்டத்தில் பயன்பெற வேண்டிய பயனாளிகள், இலட்சக்கணக்கான பேர் மனுச் செய்திருக்கின்றபோது, அவர்களுக்கு முறையான வேலைவாய்ப்பு கொடுக்க, அதற்குச் சம்பளம் கொடுக்க மத்திய அரசு தயாராக இருக்கின்றபோது, கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்குவதற்கு மத்திய



அரசு தயாராக இருக்கின்றபோது, இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் அந்தத் திட்டத்தின் பயனைப் பெறுகின்றபோது, தமிழகத்திலே பிறந்த ஏழைகளை மட்டும் தள்ளிவைத்து, இந்தத் திட்டத்தின் பலனை அவர்களுக்குக் கிடைக்காமல் செய்திருப்பது, தமிழகத்திற்குச் செய்திருக்கிற மிகப்பெரிய அநீதி. எனவே, நான்கு நாட்களுக்கு முன்னால்கூட, காங்கிரஸ் கட்சியினுடைய தலைவியும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியினுடைய தலைவியுமான அன்னை சோனியா காந்தி அவர்கள், இந்தத் திட்டம் எப்படி நடக்கிறது என்பதை இந்தியா முழுவதும் காங்கிரஸ் தொண்டர்கள் சென்று பார்க்க வேண்டுமென்று எங்களுக்கு உத்தரவு வழங்கியிருக்கிறார்கள்.

*முற்பகல் 9–50*

*எனக்கு ஒரு சின்ன நிம்மதி என்னவென்று சொன்னால், மன சந்தோஷம் என்னவென்று சொன்னால், இந்த ஊரக வளர்ச்சித் துறைக்கு, இன்று தமிழகமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய இளைஞர்களின் தலைவராக (மேசையைத் தட்டும் ஒலி) ஆக்க சக்தியின் உருவமாக இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு அமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றிருக்கின்றார்கள். நான் அவர்களை மிகப் பணிவோடு கேட்டுக்கொள்வேன், நீங்கள் இந்தத் திட்டத்தை உங்கள் தனிப்பட்ட பொறுப்பிலே எடுத்து, தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களையெல்லாம் இதிலே இணைத்து ஒவ்வொரு கிராமத்திலும் வேலைவாய்ப்பு இல்லாதவர்களே இருக்கக்கூடாது என்கிற நிலையை தமிழகத்திலே உருவாக்கி, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற பணியிலே இந்தியாவிலே உள்ள அனைத்து மாநிலங்களிலும் தமிழகத்தை முன்மாநிலமாக ஆக்கக்கூடிய வகையிலே நீங்கள் செய்வீர்கள் என்கிற நம்பிக்கையோடு, நீங்கள் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையோடு நான் அமைகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் மத்திய அரசின்மூலமாக, மாநில அரசுக்காக உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு திட்டத்தைப் பற்றி குறிப்பாக, தமிழ்நாடு ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் என்கிற அந்தத் திட்டத்தைப் பற்றி இங்கே விளக்கமாக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

[திரு. மு.க. ஸ்டாலின்] [2006 மே 31

இப்படிப் பல திட்டங்கள். மத்திய அரசின்மூலமாக இன்றைக்கு மாநில அரசுக்கு மானியத் தொகையாக பல கோடி ரூபாய் பல திட்டங்களுக்கு வழங்கப்படுகிறது. குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்று சொன்னால், S.G.S.Y. – SWARNAJAYANTHI GRAM SWAROZGAR YOJANA– பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம். ஆக, இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசு 75 சதவிகிதமும், மாநில அரசு 25 சதவிகிதமும் நிதியை வழங்குகிறது.

அதேபோல S.G.R.Y. – SAMPOORNA GRAMEEN ROZGAR YOJANA– சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம். ஆக, இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒதுக்குகிற தொகை 75 சதவிகிதம், மாநில அரசு அதற்காக 25 சதவிகிதம் நிதியை ஒதுக்குகிறது.

அதேபோல, I.A.Y. – INDIRA AWAAS YOJANA – இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம். இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசு 75 சதவிகிதமும், மாநில அரசு 25 சதவிகிதமும் நிதியை ஒதுக்குகிறது.

அதேபோல T.S.C. – TOTAL SANITATION CAMPAIGN – முழு சுகாதார இயக்கம். இந்தத் திட்டத்திற்குக் குறிப்பிட்டவகைப் பணிகளுக்கு மத்திய அரசு 60 சதவிகிதமும், மாநில அரசு 20 சதவிகிதமும், பொதுமக்கள் தரப்பிலிருந்து 20 சதவிகிதமும் ஒதுக்கப்பட்டு, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

அதேபோலத்தான், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, N.R.E.G.P. – NATIONAL RURAL EMPLOYMENT GUARANTEE PROGRAMME, அது தேசிய ஊரக வேலை உத்தரவாதத் திட்டம். இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசைப் பொறுத்தவரையிலே, 90 சதவிகிதம் மானியத் தொகை ஒதுக்குகிறது. அதாவது தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம் என்பது, செப்டம்பர் மாதம் 2005 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் அடிப்படையிலேதான், தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டம், தமிழக அரசால் 2-2-2006 ஆம் தேதியன்று திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை ஆகிய 6 மாவட்டங்களில் செயல்படுத்த வேண்டுமென்கின்ற அடிப்படையிலே இந்தத் திட்டம் முதலில் உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டத்தினுடைய நோக்கம் என்னவென்று கேட்டால், கிராமப்புறங்களில் தகுதியுள்ள, வேலை கோரும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஓர் ஆண்டிற்கு குறைந்தது 100 நாட்கள் அவர்களுக்கு



2006 மே 31] [திரு. மு.க. ஸ்டாலின்]

வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தந்திட வேண்டும். இதற்கு ஆகக்கூடிய செலவைப் பொறுத்தவரையில், மத்திய அரசு 90 சதவிகிதமும், மாநில அரசு 10 சதவிகிதமும் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

இங்கே உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, 2005–2006 ஆம் ஆண்டிலே இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசு ஒதுக்கிய தொகை 65 கோடியே 71 இலட்சம் ரூபாய், அதற்காக மானியத் தொகையாக ஒதுக்கியிருக்கிறது. ஆனால், மாநில அரசைப் பொறுத்தவரையில் 31-3-2006 வரையிலே, மூன்று கோடி ரூபாய் மட்டுமே செலவு செய்திருக்கிறது. மேற்கண்ட இந்தப் புள்ளிவிவரங்களை எல்லாம் பார்க்கின்ற நேரத்திலே, முந்தைய அரசு இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே தன்னை முழுமையாக ஒப்படைத்துக்கொண்டு இதை நிறைவேற்ற முன்வரவில்லை என்பது கண்கூடாகத் தெரிகிறது. ஆக, முந்தைய அரசைப் பொறுத்தவரையிலே, எந்தத் திட்டத்திலே என்ன percentage வைத்து commission பெறலாம் என்பதிலேதான் அவர்கள் அக்கறை செலுத்தியிருக்கிறார்களே தவிர, வேறல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிலையை உடனடியாக மாற்றி, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், முனைப்போடு செயல்படுத்துவதில் அனைத்து நடவடிக்கைகளையும் கலைஞர் தலைமையில் அமைந்திருக்கக்கூடிய இந்த அரசு நிச்சயமாக ஈடுபடும் என்பதை நான் உறுதியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 9–55*

## 2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடிகளுக்கு (தனியார் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டுச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடிகளுக்கு (தனியார் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டுச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடிகளுக்கு (தனியார் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டுச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஆ) தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டமுன்வடிவு. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

# 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

## (அ) தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடை (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடை (நீக்கச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *11/2006*), மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடை (நீக்கச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *11/2006*) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சட்டமுன்வடிவின்மீது யாரும் பேசுகிறீர்களா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஜெயக்குமார் அவர்கள்.

---

@ 29-5-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[2006 மே 31

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த நல்லதொரு வாய்ப்பினைத் தாங்கள் எனக்கு அளித்தமைக்காக என்னுடைய நன்றியினை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டமன்றத்திலே நான் இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றேன். ஆனால், 13-வது சட்டமன்றத்திலே முதல் முறையாகப் பேசுவதால் இந்தச் சட்டமுன்வடிவின்மீது என்னுடைய கருத்துகளை எடுத்துவைப்பதற்கு முன்பாக இந்தச் சட்டமன்றத்திற்கு இரண்டாவது முறையாக நான் வருவதற்கு உதவிகளைச் செய்தவர்களுக்கும், வழிவகை செய்தவர்களுக்கும், உடன் இருந்தவர்களுக்கும், உழைத்தவர்களுக்கும் நன்றியினைச் சொல்வது சாலப் பொருந்தும் என்ற வகையிலே அவர்களுக்கெல்லாம் நன்றியைச் சொல்லி, என்னுடைய கருத்தை இங்கே எடுத்துவைப்பது சரியாக இருக்கும் என்று கருதி உங்களுடைய அனுமதியைக் கோருகின்றேன்.

பாராளுமன்றத் தேர்தலானாலும் சரி, சட்டமன்றத் தேர்தலானாலும் சரி, தேர்தலிலே நிற்பதற்காக நான் விருப்பப்படுகின்றேன் என்று நான் சொன்னமாத்திரத்திலே, தமிழகத்திலே நீ எந்தத் தொகுதியில் வேண்டுமானாலும் நின்று கொள் என்ற அளவிலே என்மீது அன்பும், பாசமும் வைத்து, நாமக்கல் தொகுதியிலே இரண்டாவது முறையாக நீ நிற்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்த அருமை அன்னை, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் ஒப்பற்றத் தலைவி, இன்றைய அரசியலின் மகா சக்தி, அன்னை சோனியா காந்தி அம்மையார் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மன்றத்திலே, நாமக்கல்லிலே இருந்து இரண்டாவது முறையாக வருவதற்காக எனக்காக உழைத்திட்டவர், இந்தத் தொகுதியிலே இருந்து மீண்டும் இந்தச் சட்டமன்றத்திற்கு வரவேண்டும் என்று விருப்பப்பட்டவர், தன்னால் அந்தத் தொகுதிக்கு வந்து நேரடியாக எனக்கு வாக்குகள் கேட்க முடியாவிட்டாலும், தன்னுடைய மைந்தனை அனுப்பி, அந்தத் தொகுதிக்குச் சென்று ஜெயக்குமாரை நீ வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று ஆணை பிறப்பித்த அன்புள்ளம்கொண்ட, என்னை அரவணைத்துக் கொள்கின்ற, அன்னை உள்ளம் கொண்ட கலைஞர், முத்தமிழ் அறிஞர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினை நான் காணிக்கையாக்குகின்றேன்.



2006 மே 31] [திரு. கு. ஜெயக்குமார்]

*முற்பகல் 10-00*

வேகா வெயிலிலும் என்னோடு வீதி வீதியாக வந்து நாமக்கல் தெருக்களிலே மக்களிடத்திலே கரம் கூப்பி, உங்களுடைய பாதம் தொட்டு கேட்கின்றேன், ஜெயக்குமாரை சட்டமன்றத்திற்கு அனுப்பி வையுங்கள் என்று எனக்காக வாக்கு சேகரித்த தமிழக இளைஞர்களின் தளபதி, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தளபதி, இன்றைய மாண்புமிகு அமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் தேர்தலிலே கதாநாயகன் யார் என்பதை யார் சொன்னார் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். இந்தத் தேர்தலின் கதாநாயகன், தேர்தல் அறிக்கை. அந்தத் தேர்தல் அறிக்கையை திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்தபொழுது, எதிர்க்கட்சியில் இருந்தவர்கள் எல்லாம் ஏளனம் செய்தார்கள். இது எப்படி முடியும் என்றார்கள். இது சாத்தியமா என்றார்கள். இது நடக்குமா என்றார்கள். இவர்களால் நடத்த முடியுமா என்ற கேள்வியைக் கேட்டார்கள். அப்பொழுது ஒருவர் உதித்தார். நான் சொல்கின்றேன், இது கண்டிப்பாக நடக்கும். இதைச் செயல்படுத்த முடியும். இது சாத்தியக்கூறு உள்ள ஒரு தேர்தல் அறிக்கை என்று அந்தத் தேர்தல் அறிக்கைக்கு உயிரோட்டம் தந்தவர் இன்றைய இந்திய துணைக் கண்டத்தின் ஒப்பற்ற பொருளாதார நிபுணர், மத்திய அரசின் நிதியமைச்சர் சிதம்பரம் அவர்கள். என்னுடைய தொகுதிக்கு வந்து எனக்காக வாக்கு சேகரித்தவர். அவருக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

சேலம், நாமக்கல் மாவட்டங்களிலே இருக்கின்ற நம்முடைய முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர்கள் அனைவரும் வெற்றிபெற வேண்டுமென்று அதற்காக வியூகம் வகுத்து வழிவகை செய்த வீரபாண்டியார் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவை மாத்திரம் சொல்லுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** நன்றியை மட்டும் சொல்லிவிட்டு வந்துவிடுகிறேன்.

[2006 மே 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. சட்டமுன்வடிவை மாத்திரம் சொல்லுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** ஆக, தோழமைக் கட்சியைச் சார்ந்த அனைவருக்கும் என்னுடைய நன்றியினைக்கூறி இந்தச் சட்டமுன்வடிவின் மீது என்னுடைய கருத்துகளை இங்கே எடுத்து வைக்கின்றேன்.

பல நெருக்கடிக்கு இடையிலே எந்தச் சட்டத்தை இன்றைக்கு நாம் அகற்ற வேண்டுமென்று முன்வடிவு கொண்டு வந்திருக்கிறோமோ அந்தச் சட்டம் இந்த அவையிலே 31–10–2002 அன்று நிறைவேற்றப்பட்டது. அன்றும்கூட காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்த மன்றத்திலே அந்தச் சட்டமுன்வடிவின்மீது என்னுடைய கருத்துகளை எடுத்து வைக்க நான் முயன்றேன். ஆனால், எனக்கு முழுவதுமாக அவகாசம் அளிக்கப்படவில்லை. ஏன் இந்தச் சட்டம் அன்றைக்குக் கொண்டுவரப்பட்டது என்ற கேள்வியைக் கேட்டேன். அப்பாவி மக்களெல்லாம் கட்டாயமாக மத மாற்றம் செய்யப்படுகின்றார்கள் என்று சொன்னார்கள். நான் புள்ளிவிவரம் கேட்டேன். யாரும் எனக்கு அன்று புள்ளிவிவரம் கொடுக்கவில்லை. நிதியின்மை அன்று இருந்தது. ஆசிரியர்கள் போராட்டம் இருந்தது, தொழிலாளர்கள் போராட்டம் தலைவிரித்தாடியது, மாணவர்கள் போராட்டமும் அன்று இருந்தது, விவசாயிகள், நுகர்வோர்கள் போராட்டம் எல்லாம் இருந்த காலகட்டத்திலே அவை அத்தனையையும் மறந்து, இத்தகையதொரு கருப்புச் சட்டத்தை அன்றைக்கு அந்த அரசு கொண்டுவந்தது. மக்கள் நலனுக்காகச் சட்டம் இயற்றலாம், மக்களுடைய மேம்பாட்டுக்காகச் சட்டம் இயற்றலாம், மக்களுடைய பாதுகாப்பிற்காகச் சட்டம் இயற்றலாம். இந்தச் சட்டம் யாருக்காக இயற்றப்படுகின்றது என்று நான் இந்த அவையிலே அன்று கேட்டபொழுது எனக்குப் பதில் இல்லை. அதற்குப் பதிலாக அன்றைக்கு ஆளும் கட்சியாக இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒரு சிறுபான்மை இனத்தைச் சார்ந்தவரை இந்த அவையிலே பேசச் சொன்னார்கள். பலி கொடுக்க எடுத்துச் செல்லப்படுகின்ற ஆட்டைப்போன்று அவர் இங்கே வந்து சொல்வதைச் சொல்கின்ற பைங்கிளியின் நிலையாக, பல கருத்துகளை எடுத்து வைத்தார். இந்த அவையிலே ஏற்கெனவே உறுப்பினராக இருக்கின்றவர்கள் பலர் இருக்க, ஒரு சிலர் இந்த அவையிலே புதியவராக இருக்கின்ற காரணத்தினால், அன்றைக்கு சபையிலே ஆளும் கட்சியின் சார்பாகப் பேசியவர் எந்த ஒரு கருத்தை எடுத்துச் சொன்னாரோ, அதை நான் திருப்பிச் சொன்னபொழுது, எப்படி எதிர்ப்பு வந்தது என்பதை



2006 மே 31] [திரு. கு. ஜெயக்குமார்]

உங்களிடத்திலே எடுத்து வைப்பது சாலப் பொருந்தும் என்று நான் கருதுகின்றேன். அன்றைக்கு அவர் சொன்னார். அமெரிக்காவிலே இருந்து ஒருவர் வந்தாராம், இந்தியாவிற்கு. நேராக சென்று காஞ்சி காமகோடி பீடாதிபதியைச் சந்தித்தாராம். இந்தியாவிலே இருக்கின்ற, உலகத்திலே இருக்கின்ற மதங்களிலே இந்து மதம்தான் சிறந்த மதம். இந்து மதத்திலே நான் சேர வேண்டும். என்னை அந்த மதத்திலே சேர்த்துக்கொள்ளுங்கள் என்று அவர் மனுக் கொடுத்தாராம். ஆனால், காஞ்சி சங்கராச்சாரியார் அவர்கள் அவருடைய மனுவை பரிசீலனை செய்து, அவருக்கு பதில் சொன்னார். என்ன சொன்னதாக அந்த உறுப்பினர் சொன்னார் தெரியுமா? நல்ல ஒரு கிறித்துவராக இருப்பதே, நல்ல ஒரு இந்துவாக இருப்பதன் பொருள். எனவே, நீங்கள் மதம் மாற வேண்டியதில்லை என்று சொல்லி, ஆக, மதமாற்றம் ஏற்படக்கூடாது என்றவொரு கருத்தை அன்றைக்கு அவையிலே சொன்னார்.

முற்பகல் 10–05

நான் பேசுகின்றபோது சொன்னேன், அந்த சங்கராச்சாரியாரிடம் அவர் சென்றது, பேசியது அத்தனையும் உண்மையாக இருக்கலாம். ஆனால், கடைசியிலே சங்கராச்சாரியார் அவர்கள் சொன்ன பதில் சரியானதாக இல்லை. அவருக்கு ஓர் இக்கட்டான நிலை அன்றைக்கு, கிறித்துவ மதத்திலேயிருந்து இந்து மதத்திற்கு அவர் மாறி வந்திருந்தால் அவரை எந்த இனத்திலே, எந்த ஜாதியிலே சேர்ப்பது என்பதுதான் சங்கராச்சாரியாருடைய இக்கட்டான நிலை. எனவேதான், அவரை சேர்த்துக்கொள்ளவில்லை. அதை இங்கே சொல்லி, நீங்கள் நியாயப்படுத்தாதீர்கள் என்று சொல்லி, அன்றைக்கு நான் பேசியபோது, நான் பேசிய அத்தனை கருத்துகளும் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டன. தந்தை பெரியார் அவர்கள் என்ன சொன்னார்கள் என்றும், பேரறிஞர் அண்ணா அவர்கள் எதைச் சொன்னார்கள் என்றும், கர்ம வீரர் காமராசர் அவர்கள் எதைச் செய்தார்கள் என்றும் நான் சுட்டிக்காட்டியபோது, அவற்றையும் அன்றைக்கு அவைக்குறிப்பிலேயிருந்து எடுத்தார்கள். என்னைப் பொறுத்தமட்டிலே, மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அன்றைக்குக் கொண்டுவரப்பட்ட அந்தச் சட்டம், ஒரு கருப்புச் சட்டம். சமுதாயத்திலே இருக்கிற மக்களுக்குள்ளாக பிளவுகளை ஏற்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம். தமிழ்நாட்டிலே அனைத்து மதத்தைச் சார்ந்தவர்களும், அண்ணன் தம்பியைப்போல் பழகிக் கொண்டிருந்தவர்களுக்கு இடையிலே சர்ச்சைகளை ஏற்படுத்தவும், சமாதானமின்மையை ஏற்படுத்தவும் கொண்டு வரப்பட்ட சட்டம்.

[திரு. கு. ஜெயக்குமார்] [2006 மே 31

அன்றைக்கு நான் இதே சட்டமன்றத்தில், யார் மதம் மாறுகின்றார்கள் என்று கேட்டேன். இன்றைக்கு யாரெல்லாம் மதம் மாறுகிறார்கள் என்று பார்க்கின்றபோது, குறைந்தது 95 சதவிகிதமாவது, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள்தான் மதம் மாறுகிறார்கள். எதற்காக அவர்கள் மதம் மாறுகின்றார்கள்? குறிப்பாக இந்து மதத்தைவிட்டு வெளியேறுகிறார்கள். எதற்காக மதத்தைவிட்டு வெளியேறுகிறார்கள்? அவர்களை மனிதர்களாக நடத்தாமல், அவர்களை தாழ்வானவர்களாகவும், புறத்தே தள்ளிவைக்கப்படுகின்றவர்களாகவும், அவர்கள் ஒதுக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்ற காரணத்தினால்தான், அவர்கள் மதமாற்றத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இங்கே உண்மையைச் சொல்லவேண்டுமென்றால், மலம் தின்னும் நாய்கூட குளநீரை நக்கிடலாம்; பன்றி முதல் எருமை கன்று வரை குளத்தினிலே குளித்து மகிழ்ந்திடலாம்; ஆனால், ஒரு தாழ்த்தப்பட்டவன் அந்த நீரைத் தொட்டுவிட்டாலோ தீட்டு என்ற ஒரு நிலை இந்தச் சமுதாயத்திலே இருக்கின்ற காரணத்தினால்தான், இவர்களெல்லாம் மதம் மாறுகிறார்கள் என்று நான் இந்த அவையிலே சொன்னபோது, என்னுடைய கருத்துகளெல்லாம் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டன.

இந்த மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டுவந்து, மதமாற்றத்தை, சுதந்திரத்தை, அரசியல் அமைப்பின்படி, எந்த மதத்தையும் பின்பற்றலாம் என்ற ஒரு நிலையை மாற்றி, இவர்களையெல்லாம் கொத்தடிமைகளாக வைக்கவே இந்த ஒரு சட்டம் அன்றைக்குக் கொண்டு வரப்பட்டது. ஆடு, மாடு வெட்டுவதற்கு அன்றைக்கு தடைச் சட்டம் கொண்டு வந்தார்கள். எது எதற்காகவோ தடைச் சட்டம் கொண்டு வந்தார்கள். ஆனால், இன்றும் இரட்டைக் குவளை முறை இருக்கின்றது. அதற்கு ஏன் அவர்கள் அன்று தடைச் சட்டம் கொண்டு வரவில்லை? இன்றும் எத்தனையோ சமுதாயக் கோட்பாடுகள் எடுத்தெறியப்பட வேண்டியவைகளாக இருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் சட்டம் கொண்டு வரப்படவில்லை. கடந்த ஆட்சி, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டியிலே ஒரு தேர்தலைகூட நடத்த முடியாத கையாலாகாத ஆட்சியாக இருந்தது என்பதை பலமுறை இந்தச் சட்டமன்றத்திலே நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். தமிழ் மக்களின் உரிமைகளையெல்லாம் புறக்கணிக்கின்ற, அடியோடு கிள்ளி எறிகின்ற ஒரு சட்டமாகத்தான் இந்தச் சட்டம் அன்று கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டம் இவர்களை அடிமைப்படுத்துவதற்காகவும், கொடுமைப்படுத்துவதற்காகவும், சிறுபான்மை மக்களை தனிமைப்படுத்துவதற்காகவும்தான் கொண்டு வரப்பட்ட சட்டம் என்பதை இங்கே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2006 மே 31] [திரு. கு. ஜெயக்குமார்]

இந்தச் சட்டம், இப்படி மக்களைத் தரம் பிரித்துப் பார்ப்பதை உடைத்தெறிவதற்காகத்தான், தன்மானத் தலைவர், முத்தமிழ் அறிஞர் அவர்கள் இன்றைக்கு தமிழ்நாட்டிலே பதவியேற்றவுடனே எந்தச் சமயத்தைச் சார்ந்தவரும், எந்த மதத்தைச் சார்ந்தவரும், இன்றைக்கு தமிழ்நாட்டிலே அர்ச்சகராகலாம் என்றவொரு ஒப்பற்ற சட்டத்தைக் கொண்டுவந்து, தமிழகத்திலே இன்றைக்கு சமத்துவத்தையும், சமதர்மத்தையும் தவழவிட்டிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** சரியாகச் சொல்லவேண்டுமென்றால், 66 வருடங்களுக்கு முன்பாக—இந்தச் சட்டம் 31–10–2002 ஆம் ஆண்டிலே நிறைவேற்றப்பட்டது. அதே தேதியில் கணக்கிட்டால், சரியாக 66 வருடங்களுக்கு முன்பாக—அறிவுலகக் கோமான், அரசியல் மாமேதை, ஈனப் பிறவி என்ற இழிநிலையைப் போக்கிட்ட ஈடற்றச் செம்மல், அஞ்சா நெஞ்சினன், ஆடுகளாக வாழாதீர்கள், சிங்கங்களாக வாழுங்கள் என்று இந்திய துணைக் கண்டத்தில் நான்கில் ஒரு பகுதி மக்களுக்கு தன்மான உணர்வைக் கொடுத்த டாக்டர் பாபா சாகிப் அம்பேத்கர் அவர்கள் சொல்லுகின்றார்கள்."மதமாற்றம் என்பது மக்களை முன்னேற்றுவதற்கு பயன்படுமானால் அதை ஏற்றுக்கொள்ளலாம்; வேறு ஒரு மதத்திற்கு செல்வதன்மூலம் உங்களுக்கு உயர்வு கிடைக்குமென்றால் அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளலாம்; வேறு ஒரு மதம் உங்களை மதிக்கின்றது என்றால் அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளலாம்" என்று அவர்கள் முன்மொழிந்த, அந்தக் கருத்துக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட சட்டம்தான், கடந்த ஆட்சியிலே கொண்டு வரப்பட்ட கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் என்பதைச் சொல்லிக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இந்த கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தை நான் வாபஸ் பெற்றுவிட்டேன் என்று ஒரு தினம் மட்டும் இந்தச் சபைக்கு வந்து சென்ற முன்னாள் முதல்வர் அவர்கள் சொன்னார்கள். அன்றைக்கே நம்முடைய முதல்வர் அவர்கள் சொன்னார்கள். அது மீண்டும் எடுத்துப் பார்த்து, சரியாக இறந்திருக்கின்றதா, எரிக்கப்பட்டிருக்கின்றதா என்று பார்த்து, புதைக்கப்பட வேண்டியது என்று அன்றைக்கே பதில் சொன்னார்கள். நான் அதைவிட ஒருபடி மேலே சென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அன்றைக்குக் கொண்டு வரப்பட்ட அந்தச் சட்டம், விஷத் தன்மையுடைய சட்டம். மக்களைத் தரம் பிரித்துப் பார்க்கின்ற சட்டம்; மக்களை கொத்தடிமைகளாக ஆக்குகின்ற சட்டம்; அந்தச் சட்டம் நச்சுப் பாம்பைப் போன்றது; நல்ல பாம்பின் விஷத்தைப் போன்றது. என் தாயார்கூட சொல்வார்கள். நல்ல பாம்பை அடித்துவிட்டு இறந்துவிட்டது என்று விட்டுவிடக் கூடாது. அது கொளுத்தப்பட வேண்டுமென்று சொல்வார்கள். இன்றைக்கு நாம் எடுக்கின்ற இந்த முடிவு, கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவு, நல்ல பாம்பைப் போன்ற அந்தச் சட்டத்தை அடித்துவிட்டதாக மட்டும் இருந்துவிடாமல், அது கொளுத்தப்படுவதாக இருக்கவேண்டும். அதைக் கொளுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த திரும்பப் பெறுகின்ற, நீக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டமுன்வடிவுக்கு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக அனைத்து ஒத்துழைப்பும் தெரிவித்து அமர்கின்றேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி லீமா ரோஸ்.

***திருமதி ரா. லீமா ரோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட, ஜனநாயக முற்போக்குக் கூட்டணி ஆதரவுடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளராக நிறுத்தப்பட்டு, வெற்றி பெறச் செய்த திருவட்டாறு சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கும், அதற்காக பாடுபட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணி தலைவர்களுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றி கூறி, இந்தச் சட்டமுன்வடிவை ஆதரித்துப் பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்தமைக்காக முதன்முதலில் எனது நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

இந்திய நாடு, பழம்பெருமை வாய்ந்த நாடு, அனைத்து மதங்களும் கொண்ட நாடு என்ற பெருமைக்குரியது. கடந்த ஆட்சியில் கொண்டுவரப்பட்ட கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தை நீக்குவதற்காக ஒரு சட்டமுன்வடிவு இந்த அவையில் கொண்டு வரப்பட்டதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கின்றது. சட்டவிரோதமான இந்தச் சட்டத்தை இரத்து செய்ய அவையில் முன்மொழிந்துள்ள மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் முதன்முதலில் நன்றியை கூறிக்கொள்கின்றேன்.



தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதன்மூலம் சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் அனைவருக்கும் மகிழ்ச்சியை இந்த நடவடிக்கை ஏற்படுத்துகின்றது என்பதை இந்த அவையில் பதிய வைக்க விரும்புகின்றேன். எல்லா மதமும் நல்லதே சொல்கின்றது. அவரவர் விரும்பும் மதத்தில் சேர அவரவர்க்கு உரிமை இருக்கின்றது. இது நமது அரசியல் சாசன கோட்பாடு. அவரவர் விரும்பும் மதத்திற்கு மாறுவதை யாரும் கேள்வி கேட்க முடியாது.

டெஸ்மா, அரசு ஊழியர்களை ஒடுக்க பயன்படுத்திய ஆயுதம். பொடா, அரசியலில் வேண்டாதவர்களை ஒடுக்க பயன்படுத்திய ஆயுதம். அதைப்போன்று மதமாற்றத் தடைச் சட்டம், சிறுபான்மையினரை பயமுறுத்த கடந்த ஆட்சியால் கொண்டு வந்த ஆயுதம் என்பதை இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகின்றேன். தலித் மக்களின் மீதான தீண்டாமைக் கொடுமை, ஆலயப் பிரவேச மறுப்பு போன்ற பிற்போக்கான அணுகுமுறைகளை அப்புறப்படுத்தாமல், சட்டத்தின்மூலமாக மதம் மாறுவதைத் தடுக்க முயற்சிப்பது சட்டவிரோதமாகும். நம்முடைய நாட்டில் மதம் மாறினாலும், தலித் தீண்டாமைக் கொடுமை தொடர்கின்றது என்பது வேறு விஷயம். இந்தச் சட்டத்தை இரத்து செய்வதுடன் பிரச்சினை தீர்ந்துவிடாது. சமூக ஒடுக்குமுறையை முற்றிலும் அகற்றும் போராட்டம் தொடர மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முயற்சிக்கும். இந்த அரசின் நடவடிக்கையும் அதற்கு வலு சேர்க்கும் என்று எதிர்பார்க்கின்றோம். கடந்த அ.இ.அ.தி.மு.க. அரசு, ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி. போன்ற அமைப்புகளைத் திருப்திப்படுத்த சமுதாயத்திலுள்ள அடிப்படை அம்சங்களைப் புறக்கணித்து, கொண்டுவரப்பட்ட சட்டத்திற்கு மக்கள் 2004 தேர்தலிலும், 2006 தேர்தலிலும் பலத்த அடியைக் கொடுத்துள்ளனர்.

முற்பகல் 10-15

அ.இ.அ.தி.மு.க.-வினர் செய்த இந்தக் கொடுஞ்செயல் எதிர்காலத்தில் தொடராமல் சமூக மாற்றத்திற்காகப் பாடுபடுவோம். 2004 ஆம் ஆண்டு தமிழக வாக்காளர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு பேரிடியாக விழ, அன்றைய ஆட்சியாளர்கள் அவசரச் சட்டம் கொண்டுவந்த பின்னும், அதை மசோதாவாக இந்த அவையில் நிறைவேற்றவில்லை. எத்தனையோ வாய்ப்பு இருந்தும், இதர அவசரச் சட்டங்கள் மசோதாக்களாக முன்மொழியப்பட்டபோதும், இந்தச் சட்டம் அப்படியே நீடிக்கச் செய்தது, கடந்த கால அரசின் உள்ளுணர்வை வெளிப்படுத்துகிறது என்பதை இந்த அவையில் பதிய வைக்க விரும்புகிறேன்.

2004–ன் மக்கள் தீர்ப்பிலிருந்து துவங்கிய நடவடிக்கைகள். 2006–ன் தீர்ப்புடன் நிறைவு பெறுவதை வரவேற்கிறேன். பெயரளவில் கட்டாயத்தின் மூலமோ, வயப்படுத்துவதன்மூலமோ, மோசடிகளின் மூலமோ, மத மாற்றம் என்றிருந்தாலும், நடைமுறையில் சிறுபான்மை மதத்தினரை அச்சுறுத்தவும், அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமையை மறுக்கவுமே பயன்படுத்தும் தன்மை கொண்டது மத மாற்றத் தடைச் சட்டம். மத மாற்றத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முதலிலிருந்தே எதிர்த்தது. இந்தியாவில் மதவாத அரசியல் ஆதிக்கம் செலுத்த முயற்சித்தபோது, அதற்கு அனுசரணையாக தமிழகத்தை மாற்ற அன்றைய அரசு மேற்கொண்ட முயற்சியே இந்தச் சட்டம். 15 ஆண்டுகளாக இந்த மதவாதக் கட்சிகளைப்பற்றி, அதன் நடவடிக்கைகளைப்பற்றி எச்சரித்தோம். முதலில் புரிந்துகொள்ளாதவர்கள்கூட பிறகு புரிந்துகொண்டார்கள். தமிழ்நாட்டில் பல பகுதிகளில்... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் முடியுங்கள். சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திருமதி ரா. லீமா ரோஸ்:** குறிப்பாக, குமரி மாவட்டத்தில் சிறுபான்மை வழிபாட்டுத் தலங்களைப் பழையதைப் புதுப்பிக்கவும், புதிதாக வழிபாட்டுத் தலங்களை அமைப்பதற்கும் அனுமதி கேட்டால், சம்பந்தமில்லாத வகுப்புவாத சக்திகள் புகார் கொடுத்தால், அதைக் காரணம் காட்டி மாவட்ட நிர்வாகமும், காவல் துறையும் அனுமதி வழங்குவதில்லை. பட்டா பூமியில் அனுமதி மறுக்கப்படுகிறது. குமரி மாவட்ட நிர்வாகம் சிறுபான்மை மக்களுக்கு எதிராகச் செயல்படுவதாகத் தெரிகிறது. எனவே, அரசு தலையிட்டு சிறுபான்மை மக்கள் நலன் கருதி சம்பந்தமில்லாத வகுப்புவாதிகள் புகாருக்கு மாவட்ட நிர்வாகமும், காவல் துறையும் பணிந்து செல்லும் போக்கைக் கைவிட நடவடிக்கை எடுக்க பணிவாய் வேண்டுகிறேன். சிறுபான்மை மக்களை அச்சுறுத்திய இந்த மத மாற்றத் தடைச் சட்டத்தை அடியோடு வேரறுத்து, வேரும் வேரடி மண்ணோடும் மாற்றுவதை வரவேற்கிறோம். அதற்காக நன்றியும் கூறிக்கொள்கிறோம். மத நல்லிணக்கம் பேணி, மனித நேயம் காக்க, இந்த மசோதாவை முன்மொழிந்தமைக்கு மீண்டும் நன்றிகூறி, வாய்ப்பளித்தமைக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள், ஐந்து நிமிடங்கள் பேசுங்கள். ரொம்ப அதிக நேரம் எடுக்கக் கூடாது. Five minutes.



**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு கொண்டுவந்திருக்கிற கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தை நீக்குகிற சட்டமுன்வடிவை பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே ஆதரித்து, எங்களுடைய கட்சியின் கருத்துகள் ஒருசிலவற்றை இந்த மாமன்றத்திலே பதிய வைக்க விரும்புகிறேன்.

கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் என்கிற கருப்புச் சட்டத்தை கடந்த 5–10–2002 அன்று அரசு அரசாணையாக வெளியிட்டு, அதன்பிறகு பல்வேறு காலகட்டங்களிலே அதற்கான எதிர்ப்புகள் வலுவாகவும், 2004 நாடாளுமன்றத் தேர்தலிலே ஒட்டுமொத்தமாக தமிழகத்திலே இருக்கிற மக்கள் அன்றைக்கு ஆண்டுகொண்டிருந்த அண்ணா தி.மு.க.–வுக்கு எதிராக வாக்களித்ததற்குப் பிறகு, கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தை நீக்குவதற்குவதற்கான சட்டம் கொண்டுவராமல், ஆளுநர் அவர்கள் பிறப்பித்த ஓர் உத்தரவை—தமிழ்நாடு அரசு 8–5–2004–லிலே அதற்காக ஓர் உத்தரவு பிறப்பித்து—அதோடு விட்டுவிட்டது, நாம் எல்லாம் அறிந்த ஒன்றே. இந்தக் கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சரியான முடிவெடுத்து, இப்போது அதற்கான சட்டத்தையே கொண்டுவர வேண்டும் என்று இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள். அதற்காக பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அவர்களை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த கால அண்ணா தி.மு.க. அரசாங்கம் ஓர் உள்நோக்கத்தோடுதான் ஆளுநர் அவர்கள்மூலம் ஓர் அவசரச் சட்டத்தை மட்டும் பிறப்பித்துவிட்டு, அதற்கு முறையாகச் சட்டம் கொண்டுவரவில்லையென்று கருதுகிறேன். ஏனென்று சொன்னால், எப்பொழுதெல்லாம் அண்ணா தி.மு.க. அரசாங்கம் தமிழகத்தை ஆளுகிறதோ அப்பொழுதெல்லாம் விவசாயிகளுடைய இலவச மின்சாரத்தை இரத்து செய்யத் தவறியதில்லை. அதேபோன்றுதான் தப்பித் தவறி இந்த 13–வது சட்டமன்றப் பேரவையிலே அண்ணா தி.மு.க. அரசாங்கம் மீண்டும் அரியணை ஏறியிருந்தால் இந்த அவசர, மதமாற்றத் தடைச் சட்டம் சிறுபான்மை மக்களை மிகக் கொடுமைப்படுத்தியிருக்கும். அதற்காகவே ஒரு தடைச் சட்டத்தைக் கொண்டுவந்து, நீக்காமல் அப்படியே விட்டுவிட்டிருக்கிறார்கள் என்பதுதான் சரியான கருத்தாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

[திரு. கி. ஆறுமுகம்] [2006 மே 31

*முற்பகல் 10–20*

நம்முடைய கலைஞர் அவர்கள் சரியான நேரத்திலே சிறுபான்மை மக்களாக இருக்கிற கிறிஸ்தவ சகோதரர்களுக்கும், இஸ்லாமிய சகோதரர்களுக்கும், ஏனைய சமூக மக்களுக்கும் உறுதுணையாக இருக்கிற ஒரு சரியான சட்டத்தை இங்கே இயற்றி இருக்கிறார்கள். இந்தியாவிலே அதிலும் குறிப்பாக தமிழகத்திலே எம்மதமும் சம்மதம் என்கிற நிலை நிலவுகிற சமயத்திலே இந்துத்துவ கொள்கையை மட்டும் எடுத்துக் கொண்டு சிறுபான்மை மக்களுக்கு எதிராக கடந்த கால ஆட்சியிலே நடைபெற்ற அந்த அரசுக்கு இது சரியான பாடத்தினைக் கற்பிக்கிற வகையிலே மக்கள் தீர்ப்பளித்திருக்கிறார்கள். அதற்காக தமிழகத்தில் இருக்கிற அனைத்து சிறுபான்மை மக்களுக்கும் நாம் இந்தச் சமயத்திலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்னொன்றையும் நான் சொல்லியாக வேண்டும். அன்றைக்கு இந்த அவசரச் சட்டம், சட்டமன்றப் பேரவையிலே நிறைவேற்றுகின்றபோது நம்முடைய தலைவர்கள் எல்லாம் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிற வகையிலும், எதிர்ப்பு தெரிவித்தாலும் அன்றைக்கு முதல்வராக இருந்த அண்ணா தி.மு.க.-வினுடைய பொதுச் செயலாளர் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். இந்தச் சட்டம் கொண்டு வருவதற்கான காரணம் என்னவென்று சொன்னால் கட்டாய மதமாற்றத்தினால் சமுதாயத்தில் பல்வேறு தீய விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது . குறிப்பாக ஏழ்மையும், பிற்பட்ட நிலையையும் பயன்படுத்தி மதத் தீவிரவாத அமைப்புகள் கட்டாய மதமாற்றத்தின்மூலம் நாட்டில் குழப்பத்தினை விளைவிக்க முயல்கின்றன. மதம் மாறினாலும் சாதிய உணர்வுகள் நீடிக்கின்றன. மதமாற்றம் செய்யப்பட்டவர்கள் சமுதாயத்தில் தனிமைப்படுத்தப் படுகிறார்கள் என்று சொல்லியும், மதமாற்றம் பல்வேறு பிரிவினரிடையே எதிர்ப்பு உணர்வை ஏற்படுத்துவதாகவும் தவறான ஓர் உரையை இங்கே நிகழ்த்தி இந்த மக்கள் மத்தியிலே ஒரு குழப்பத்தை ஏற்படுத்திய பெருமை கடந்த காலத்தில் ஆட்சி செய்த ஆட்சியாளர்களுக்கு உண்டு. எனவே, இன்றைக்கு தமிழக அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற இந்தத் தடை நீக்கச் சட்டம் மிகச் சரியான நிலையிலே, சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும். அந்தத் தடைச் சட்டத்தை நீக்குவது சாலச் சிறந்த ஒன்று என்றும் சொல்லி இந்தத் தமிழகத்திலே வாழ்கிற சிறுபான்மை மக்களுக்கு ஓர் அரணாக இருக்கின்ற நம்முடைய அரசு சரியான முடிவு எடுத்திருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே இதை நான் வரவேற்று அமைகிறேன். நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



2006 மே 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, திருமதி பத்மாவதி, ஐந்து நிமிடம் எடுத்துக்கொள்ளுங்கள். உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதமாற்றத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கான இந்தச் சட்டமுன்வடிவை நாங்கள் ஆதரிக்கின்றோம். கடந்த கால அ.இ.அ.தி.மு.க. ஆட்சியிலே குறிப்பாக சிறுபான்மை மக்களுக்கு எதிராகவும், தலித் மக்களை அடக்குவதற்கும், ஒடுக்குவதற்குமாகக் கொண்டு வரப்பட்ட அவசர, அவசரமான அந்தச் சட்டம் கடந்த காலத்திலே தலித் பகுதி மக்கள் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு தலித், தலித்திற்காக கட்டிக் கொடுக்கப்பட்ட அந்த தொகுப்பு வீட்டில் குடியிருக்க வேண்டும் என்று கேட்டதற்காகவே மலத்தை எடுத்துக் கொடுத்து பிடிக்கச் சொன்ன மோசமான, கொடூரமான சம்பவங்கள் எல்லாம் நடைபெற்று இருக்கின்றன.

*முற்பகல் 10–25*

அதேபோன்று, தலித் மக்கள் வாழ்கின்ற பகுதியில் பொதுவாக கோவில் என்று ஒன்று இருக்கின்றபோது, அனைத்துப் பகுதிகளையும் சார்ந்தவர்கள் சேர்ந்து அந்தக் கோவிலைக் கட்டுகின்றபோது தலித் மக்கள், அவர்கள் மூலமாகவும் அந்தக் கோவிலைக் கட்டுவதற்கு வசூல் செய்து கொடுப்பதற்கான அத்தனையிலும் சமமாகப் பங்கெடுக்கின்றபோது, கோவில் திறப்பு விழாவின்போது அந்தக் கோவிலுடைய சாமி சிலை அந்தத் தெருவிற்கு வரக் கூடாது. அப்படி வந்தால் அந்தக் கடவுளுக்கு ஆகாது என்ற ஒரு நிலையில் கடுமையாக அவர்கள் பாதிக்கப்படுகின்றபோது இப்படிப்பட்ட கொடுமையான சம்பவங்கள் தொடர்ந்து வருகின்றபோது அவர்கள் மதம் மாறுகின்ற ஒரு நிலை ஏற்படுகிறது. ஜனநாயக நாட்டிலே அரசமைப்புச் சட்டத்திலே எம்மதமும் இருக்கலாம். எம்மதமும் சம்மதம். அவர்களுடைய விருப்பப்படி எந்த மதத்தில் வேண்டுமானாலும் இருக்கலாம். உலக மகாகவி பாரதி சொன்னார்.

"செப்பு மொழிபதி னெட்டுடையாள், எனிற்
சிந்தனை யொன்றுடை யாள்"

என்று சொன்னார். இந்த தேசத்திலே என்ன மொழி பேசினாலும், என்ன இனமானாலும் அவர்களுடைய உரிமை அது. ஆனால்,

அப்படிப்பட்ட அந்த உரிமையை, குரல்வளையை நெரிப்பது போன்று, அவர்களை அழிப்பது போன்று, மிக மோசமான, கொடுமையான அந்தச் சட்டத்தை அவசர அவசரமாகக் கொண்டு வந்து, திரும்ப ஒரு மூன்று ஆண்டு காலம், நான்கு ஆண்டு காலம் கடந்து — நாடாளுமன்றத் தேர்தலில் பாண்டிச்சேரியுடன் சேர்த்து 40 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் அவர்கள் முழுக்க முழுக்க வெற்றி வாய்ப்பை இழந்த பிறகு, முட்டை, zero வாங்கிய பிறகு, மறுபடியும் அவர்களுக்கு என்று ஒரு மனமாற்றம் வந்ததுபோல மக்களை மாற்றி அமைப்பதற்காக, வருகின்ற தேர்தலைச் சந்திப்பதற்காக அந்தச் சட்டங்களையெல்லாம் திரும்பப் பெறுவதாக அறிவித்தார்கள். ஆனால், இதுபோன்று நம்முடைய அவையில், இந்த மாபெரும் மாமன்றத்தில் அந்தச் சட்டத்தை வைத்து, அந்தத் தடைச் சட்டத்தை திரும்பப் பெறவில்லை. ஆனால், இன்றைக்கு அ.தி.மு.க. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள். நாங்கள் அந்தச் சட்டத்தை முன்பே திரும்பப் பெற்றுவிட்டோம் என்று சொல்லி, பல்வேறு கதைகளையெல்லாம் சொல்கிறார்கள். ஆனால், உண்மையிலேயே இப்படிப்பட்ட அந்த மோசமான சட்டம், சாதாரண மக்களை, குறிப்பாக தலித் மக்களை அடக்கி ஒடுக்குகின்ற அந்தச் சட்டம், சிறுபான்மையினருக்கு எதிரான அந்தச் சட்டத்தைத் திரும்ப நாம் பெறுவதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் வரவேற்கின்றோம். வரப் போகின்ற இந்தக் காலங்களில் இதுபோன்ற கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய வகையில் இந்த அரசு இன்னும் பல வகைகளிலே தலித் மக்களைப் பாதுகாக்கக்கூடிய வகையில் சிறுபான்மை மக்களைப் பாதுகாக்கக்கூடிய வகையில் கொண்டு வந்து அத்தனையும் செய்வீர்கள் என்று இந்த நேரத்திலே சொல்லி, கேட்டு அமர்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு clarification. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே மூன்று நாட்களுக்கு முன்பு பேசுகிறபோது, 1985 ஆம் ஆண்டு Supreme Court தீர்ப்பு ஒன்றை, மாண்புமிகு Justice Chandrachud அவர்களால் தந்த தீர்ப்பு ஒன்றைச் சொல்லி, அதிலே ஏற்கெனவே அவசர சட்டம் ஒன்று பிறப்பிக்கப்படுமேயானால், ஆறு வார காலத்திற்குள் அது சட்டமாக்கப்பட வேண்டுமென்று அரசியல் சாசனத்தில் நமக்கு ஷரத்து



இருந்தாலும்கூட அவசர சட்டத்திற்கே மதிப்பு இருக்கிறது. அதற்குரிய value இருக்கிற காரணத்தினாலே மீண்டும் இந்த அவையிலே வைத்து சட்டமாக்க வேண்டியதில்லை என்கிற ஒரு கருத்தை இந்த மாமன்றத்திலே பதிவு செய்தார்கள். அவர்கள் சுட்டிக்காட்டிய 1985 ஆம் ஆண்டு அந்த Justice Chandrachud, Supreme Court வழங்கி இருக்கிற தீர்ப்பில், ஆறு வார காலத்திற்குள் சட்டம் இயற்றப்பட வேண்டும். Village officer–உடைய post–ஐ abolish செய்து கொண்டு வரப்பட்ட சட்டம் அது. அதிலே சில வழக்குகள் தனிப்பட்ட முறையிலே வந்துவிட்ட காரணத்தினாலே, அது ஆறு வார காலத்திற்குள் மீண்டும் சட்டமாக்கப்படவில்லை என்று சொல்லி, அவர்கள் பதவி கேட்கிறார்கள். அதற்கு அவர்களுக்கு உரியதைக் கொடுத்துவிட்டாலும்கூட, கடைசியில் அந்தத் தீர்ப்பில் சொல்கிறபோது express legislation – ஓர் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்படுமேயானால், அந்த அவசரச் சட்டத்திற்கு அதாவது வெளிப்படையாக இந்த மாமன்றத்திலே express legislation ஒன்று வேண்டுமென்றுதான் அதே தீர்ப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. Otherwise it is irreversible என்று சொல்லுகிறார்கள். ஆகவே, சட்டப்படி ஆறு வார காலத்திற்குள் அந்த அவசரச் சட்டம் இந்த மாமன்றத்தில் வைத்து சட்டமாக்கப்பட்டால்தான் அதற்கு உயிரோட்டம் உண்டு என்பதை இந்த அவையிலே நான் பதிய வைக்க விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதமாற்ற தடைச் சட்டமே அவசரச் சட்டம் மூலமாகக் கொண்டு வரப்பட்டது. பிறகு அது சட்டமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதைக் கொண்டுவருகிறபோது அதை 6 மாதத்திற்குள் கொண்டு வந்திருக்கிற முன்னாள் முதலமைச்சர், அதை repeal பண்ணுகிறபோது கொண்டுவராதது அவருடைய குற்றம்தான். அதுமட்டுமல்ல, அப்போதே திரு. எஸ்.ஆர்.பி. கேட்டு இருக்கிறார். மத்திய பிரதேசத்தில் இந்தச் சட்டம் இருக்கிறதே? ஒரிசாவில் இந்தச் சட்டம் இருக்கிறதே என்று அந்த அம்மா சொல்லும்போது அதை ஏன் இன்னும் காங்கிரஸ் ஆட்சி திரும்பப் பெறவில்லை என்று அன்றைய முதலமைச்சர் அவர்களே கேட்டு இருக்கிறார்கள்; அது அவர்கள் கேட்ட கேள்வியே. ஆனால், இன்று அந்த மாதிரி ஒரு குற்றம் வந்துவிடக்கூடாது என்கிற காரணத்திற்காகத்தான், கலைஞர் அவர்கள் முன்பு சுட்டிக்காட்டியதைப் போல, சந்தேகம் இருக்கிற காரணத்தினால் முழுமையாக இதை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இதைச் செய்திருக்கிறார். ஏனென்றால்,

[டாக்டர் க. பொன்முடி] [2006 மே 31

அன்றைய முதலமைச்சரே அந்தச் சந்தேகத்தைக் கிளப்பி இருக்கிறார். ஏன் மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் ஆட்சி வந்தபிறகும்கூட அந்தச் சட்டத்தைத் திரும்பப் பெறவில்லை என்று கேட்டார்கள். இப்போது கலைஞர் அரசு, உண்மையிலேயே உறுதியாக சிறுபான்மை மக்களின்மீதும், இஸ்லாமிய சமுதாயத்தினர்மீதும், கிறித்துவர்களின்மீதும் நம்பிக்கை இருக்கிற காரணத்தினால் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடை (நீக்கச்) சட்டமுன்வடிவை ஆதரித்து பல்வேறு உறுப்பினர்கள் இந்த அவையிலே உரையாற்றி இருக்கின்றார்கள். ஒரு மதத்திலிருந்து பிறிதொரு மதத்திற்கு கட்டாயப்படுத்தியோ அல்லது வசீகரப்படுத்தியோ அல்லது மோசடி வழியிலோ மதமாற்றம் செய்வதை, தடை செய்வதற்காக ஒரு சட்டம் இந்த அவையிலே முந்தைய ஆட்சிக் காலத்திலே கொண்டு வரப்பட்டதாக, கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம், 2006–னுடைய கூறுகள் கூறுகின்றன. ஆனால், அன்றைய தினத்திலே, தமிழகத்திலே, இன்றைய முதல்வராக இருக்கின்ற எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள், இது சிறுபான்மை சமுதாயத்திற்கு எதிரான சட்டம், இது பழி வாங்கும் நோக்கத்தோடு இயற்றப்பட்டிருக்கின்ற சட்டம் என்று தலைவர் கலைஞர் அவர்களும், இன்றைய முதல்வர் அவர்களும், ஏனைய எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் அந்தச் சட்டத்தை, அன்றையதினமே கடுமையாக எதிர்த்தார்கள். சட்டப் பேரவையிலேயும் எதிர்த்தார்கள். ஆனால், அந்த அரசு, சிறுபான்மை மக்களுடைய எதிர்ப்பை எல்லாம் கருத்திலேகொள்ளாமல், எதிர்க்கட்சித் தலைவருடைய நல்ல கருத்தை எல்லாம் கருத்திலேகொள்ளாமல், யாரையோ ஒருவரைத் திருப்திபடுத்துவதற்காக—இங்கே பேசிய உறுப்பினர், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப் போல, யாரையோ ஒருவரைத் திருப்தி படுத்துவதற்காகத்தான், அந்தச் சட்டம் அ.தி.மு.க ஆட்சியிலே கொண்டு வரப்பட்டதே தவிர, அந்தச் சட்டம் மக்களுக்காக இந்த அவையிலே இயற்றப்பட்ட சட்டம் அல்ல; மக்களுக்கு எதிராக இயற்றப்பட்ட சட்டம். குறிப்பாக, சிறுபான்மை சமுதாயத்திற்கு எதிராக



2006 மே 31] [திரு. இ. பெரியசாமி]

இயற்றப்பட்ட சட்டம் என்பதை நான் இந்த நேரத்திலே தெளிவாகக் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கேகூட நம்முடைய மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் தெளிவாக ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக, ஓர் அவசரச் சட்டம், மதமாற்றத் தடை அவசரச் சட்டம் அ.தி.மு.க. ஆட்சியிலே 2002 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. கொண்டுவரப்பட்ட அந்தச் சட்டம், இதே அவையிலே இங்கே வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதற்குக் காரணம் என்ன? மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இங்கே பேசுகின்றபோது குறிப்பிட்டார். அவர்கள் சொன்னார்கள் 1985 ஆம் ஆண்டு, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பினை மேற்கோள் காட்டி, அந்த அவசரச் சட்டம் அவையிலே வைக்க வேண்டிய அவசியம் இல்லையென்ற கருத்தைச் சொன்னார். இவர் ஆட்சிக் காலத்திலே எத்தனை சட்டங்கள் – ஆடு கோழி வெட்டுகின்ற சட்டம், டெஸ்மா சட்டம் போன்ற சட்டங்கள் எல்லாம், இந்த அவையிலே வைத்து நிறைவேற்றப்பட்டிருக்கின்றன; இதே அவையிலே பல அவசரச் சட்டங்கள் சட்டமுன்வடிவுகளாக வைக்கப்பட்டு, 1985 ஆம் ஆண்டுக்குப் பின்னால், இந்த அவையில் எத்தனை சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை நாம் கருத்திலே கொள்ளவேண்டும். அதிலும் குறிப்பாக இந்த மதமாற்றத் தடை அவசரச் சட்டமே, இந்த அவையிலே வைத்து சட்டமுன்வடிவாக வைத்து, சட்டமாக்கப்பட்டது அ.தி.மு.க. ஆட்சியிலேதான். ஏன் வைக்காமலே இருந்து இருக்கலாமே? அ.தி.மு.க. ஆட்சி என்பதே ஓர் அவசரச் சட்டத்தை உருவாக்குகின்ற ஆட்சியாகத்தான் இருந்ததே தவிர, மக்களுக்காக எந்தச் சட்டத்தையும் இந்த அவையிலே உருவாக்கவில்லை. அதுதான் யதார்த்தமான உண்மை. குறிப்பாக இன்னும் தொடர்ந்து இந்திய அரசமைப்புச் சட்டத்தினுடைய 213–வது பிரிவு, உட்பிரிவு 2–ன்படி, எந்த ஓர் அவசரச் சட்டமும் அவையிலே சட்டமுன்வடிவாக வைக்கப்பட்டு, அதை நிறைவேற்றினால்தான் சட்டமாகும்; முழுமையான சட்டமாகும். ஆகவேதான், ஒவ்வோர் அவசரச் சட்டமுமே சட்டமன்றத்திலே இந்திய அரசமைப்புச் சட்டத்தினுடைய 213–வது பிரிவு, உட்பிரிவு 2–ன்படி இந்த அவையிலே சட்டமுன்வடிவாக வைக்கப்பட்டு சட்டமாக்கப்படவேண்டும். அப்போதுதான் அது முழுமையாக முழுமைபெறும் என்பதை இந்திய அரசமைப்புச் சட்டம் கூறுகிறது.

முற்பகல் 10–35

இந்திய அரசமைப்புச் சட்டத்திலே எவர் ஒருவரும் எந்த மதத்தையும் ஏற்றுக்கொள்ளலாம், இந்திய நாட்டிலே இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனும் அவர் விரும்புகின்ற மதத்தை ஏற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெளிவாக இங்கே உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால், முன்னாள் முதலமைச்சர், 1985 ஆம் ஆண்டினுடைய தீர்ப்பை Venkatareddy Vs. Andhra Pradesh என்ற வழக்கிலே ஒரு தீர்ப்பை மேற்கோள் காட்டினார்கள். அதைத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் இங்கே தெளிவாகச் சொன்னார்கள். அங்கே பகுதிநேர கிராம அலுவலர்களை நீக்கம் செய்துவிட்டு, முழு நேர உதவியாளர்களாக, கிராம அலுவலர்கள் ஆந்திரப் பிரதேசத்திலே நியமிக்கப்பட்டாரர்கள். இரண்டும் ஒரே நேரத்தில் நடந்துவிட்டது. பகுதிநேர கிராம அலுவலர்கள் நீக்கப்பட்டு புதிய கிராம உதவியாளர்கள் மீண்டும் பணியிலே சேர்க்கப்பட்ட காரணத்தால் அந்த அவசரச் சட்டம் முடிவுக்கு வந்துவிட்டது. It is purely accomplished. முடிவுக்கு வந்த பின்னால் அதை மீண்டும் சட்டமாகக் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை என்று கருதிய காரணத்தால் அந்தச் சூழ்நிலை, சந்தர்ப்பம் ஆகியவற்றில் அவசியம் இல்லை என்று கருதிய காரணத்தால்தான் மீண்டும் வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிபதிகள் சொல்லி இருக்கின்றார்களே தவிர, அது அந்த அவசரச் சட்டத்தினுடைய கூறுகளுக்குத்தான் பொருந்தும். Circumstances and object of the Ordinance அதற்குத்தான் பொருந்தும். ஆக, அது மற்றவைகளுக்குப் பொருந்துவதற்கு வாய்ப்பில்லை. இந்திய அரசமைப்புச் சட்டத்தினுடைய 213–வது பிரிவு, உட்பிரிவு 2 பின்பற்றப்பட வேண்டிய அவசியம் இருக்கின்றது என்பதை மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள்.

குறிப்பாக, முன்னாள் முதலமைச்சர், சிறுபான்மை சமுதாயத்தைப் பற்றி சொன்னார், பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னால் பலமுறை சாத்தான்குளம் இடைத் தேர்தலிலே சொன்னார், சிறுபான்மை மக்களுடைய வாக்குகளைப் பெறவேண்டும் என்பதற்காக, நான் கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தை வாபஸ் பெற்றுக்கொள்கிறேன் என்று சொன்னார், வாக்குகளைப் பெறவேண்டும் என்பதற்காக. வெற்றியும் பெற்றார். ஆனால், உடனே வாபஸ் பெறவில்லை. அத்தனை சிறுபான்மை சமுதாய கிறித்துவ மக்களும், பாதிரியார்களும் கேட்டுக் கொண்டார்கள்; இந்த மதமாற்றத் தடைச் சட்டத்தை வாபஸ் பெற



வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால், வாபஸ் பெறவில்லை. அடுத்து, பாராளுமன்றத் தேர்தலிலே மிகப் பெரிய தோல்வியைச் சந்தித்ததற்குப் பின்னால்தான் தமிழ்நாட்டிலே அவர் செய்த தவறுகளிலே ஒன்றான கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தை வாபஸ் பெறுவதாக அவர் அறிவித்தார். அறிவித்தது மட்டுமல்ல, குறிப்பாக இங்கே சொன்னார். அவையிலே வைக்க வேண்டியது இல்லை என்று சொன்ன முன்னாள் முதலமைச்சர், சிறுபான்மை சமுதாயத்தினுடைய இந்த நடவடிக்கையிலே அவர் இரட்டை வேடம் போட்டார் என்பதற்கு இங்கே கோப்பிலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அவையிலே, அதை வைக்க வேண்டியதில்லை, அவசரச் சட்டத்தை வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்ன முன்னாள் முதல்வர், அவரே 10 மாத காலத்திற்கு முன்னால், 21–6–2004 ஆம் நாள் அந்த அவசரச் சட்டம், கட்டாய மத மாற்ற தடைச் சட்டத்தை வாபஸ் வாங்குவதாக ஓர் அறிக்கை கொடுத்தார்; பாராளுமன்றத் தேர்தலிலே தோல்வியை சந்தித்ததற்குப் பின்னால் அறிக்கை கொடுத்தார். இந்த அவையிலே வந்து சொன்னார். நான் வாபஸ் பெற்றுவிட்ட காரணத்தால் அவையிலே சட்டமுன்வடிவை வைத்து ஒப்புதல் பெற வேண்டிய அவசியம் இல்லை என்று உச்ச நீதிமன்றத்தினுடைய வேறு ஒரு தீர்ப்பை மேற்கோள் காட்டினார். இப்படி காட்டினவர் 21–6–2004 ஆம் நாள் அதே முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அந்த மதமாற்றத் தடை நீக்க அவசர சட்டத்தை அவையிலே வைக்க வேண்டுமென்று 21–6–2004 ஆம் நாள் கோப்பிலே கையெழுத்திட்டிருக்கின்றார். அந்த ஆதாரம் இருக்கிறது. மதமாற்றத் தடை நீக்க அவசரச் சட்டத்தை இந்த அவையிலே வைத்து ஒப்புதலைப் பெறவேண்டும் என்று 21–6–2004 ஆம் நாள் கையெழுத்திட்டிருக்கின்றார். Draft Bill–ல் முன்னாள் முதலமைச்சரே, இந்த அவையிலே வைத்து ஒப்புதல் வாங்க வேண்டுமென்று கையெழுத்திட்டிருக்கின்றார். எவ்வளவு பெரிய மோசடி பாருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலிருந்து தெரிகின்றது முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சிறுபான்மை சமுதாயத்திற்கு எதிரானவர். அவருடைய இரட்டை வேடம் இந்த நாட்டுக்கு வெளிச்சம் காட்டப்பட வேண்டும். அதுதான் இந்தச் சட்டமுன்வடிவு.

முற்பகல் 10–40

அதுமட்டுமல்ல, குறிப்பாக, இந்த மதமாற்றம் என்பது தொடர்ந்து நிகழக்கூடிய ஒரு நிகழ்வு. ஆகவே, இந்த அவையிலே மதமாற்றத் தடை (நீக்கச்) சட்டம் பற்றிப் பேசிய உறுப்பினர்கள் அனைவரும், அது ஒரு

[திரு. இ. பெரியசாமி] [2006 மே 31

கருப்புச் சட்டம், அதை நீக்க வேண்டும், அதை நீக்கி சிறுபான்மை மக்களுக்கு இருக்கின்ற ஐயப்பாட்டினை நீக்க வேண்டும், சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையிலே இந்தச் சட்டமுன்வடிவு அமைய வேண்டும் என்றார்கள். ஆகவே, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டு, அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முன்னாள் முதலமைச்சர், இந்நாள் எதிர்க்கட்சித் தலைவர், அந்நாள் கையெழுத்திட்ட ஒரு கோப்பு பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால், நேரம் இல்லாத காரணத்தினாலோ என்னவோ, முழு விவரமும் அவர் சொல்லவில்லை. அந்தக் கோப்பு, அதனுடைய பிரதி மாண்புமிகு அமைச்சரிடத்திலே மாத்திரமல்ல, என்னிடத்திலேயும் இருக்கிறது. 'Note for circulation' என்று Public Department–ல் இருந்து வந்த அந்த Note–ல் "This file relates to introducing a Bill in the ensuing Session of the Tamil Nadu Legislative Assembly for replacing the Tamil Nadu Prohibition of Forcible Conversion of Religion (Repeal) Ordinance, 2004, (Tamil Nadu Ordinance 4/2004)" என்ற தொடக்கத்தோடு, அடுத்த பக்கங்களில் "As per the provisions of Clause 2 of Article 213 of the Constitution, every Ordinance Promulgated has to be replaced by an Act of the Legislature within six weeks from the date of re–assembly of the Legislature. Hence, the Law Department was requested to prepare a Draft Bill for replacing the above Ordinance. Accordingly, the Law Department has prepared a Draft Bill to replace the Tamil Nadu Prohibition of Forcible Conversion of Religion (Repeal) Ordinance, 2004, (Tamil Nadu Ordinance 4/2004). The Draft Bill is placed below:" என்று அதிலே, முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் 21–6–2004–ல் கையெழுத்திட்டு அந்த proposal–ஐ O.K. செய்திருக்கின்றார்கள். ஆனால், அதற்குப் பிறகு, அவையிலே வைத்து ஒப்புதல் பெற்றார்களா என்றால், இல்லை. அதற்கிடையே என்ன தோன்றியதோ, நமக்குத் தெரியாது. கையெழுத்துப் போட்டுவிட்டு பிறகு அவையிலே வைத்து அதை நிறைவேற்ற மனமின்றி, அவசரச் சட்டத்திற்கு உயிர் உண்டாக்க மனமின்றி, அவையிலேயே வைக்காமல் தாமதப்படுத்திவிட்டார்கள். பிறகு பிரச்சினை எழுந்தது. சிறுபான்மை மக்களுடைய குரல், அவர்களுக்கு ஆதரவான குரல், மத வெறி கூடாது என்ற மக்களுடைய குரல், இத்தனை குரலுக்கும் சமாதானம் செய்ய



2006 மே 31] [கலைஞர் மு. கருணாநிதி]

வேண்டும் என்பதற்காக, 'புதிதாகச் சட்டசபையிலே வைக்க வேண்டிய அவசியம் இல்லை; இதற்கு ஏற்கெனவே சுப்ரீம் கோர்ட்டினுடைய தீர்ப்பு ஒன்று இருக்கிறது' என்று அதைக்காட்டி, நம்முடைய நண்பர் ஞானசேகரன் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல, அதைக்காட்டி சமாளித்தார்களே அல்லாமல், உண்மையிலேயே 1985–லே சுப்ரீம் கோர்ட்டினுடைய தீர்ப்பு என்று அதைத் தன்னுடைய பாதுகாப்புக்கே கேடயமாகப் பயன்படுத்துகிறாரே அல்லாமல், அந்தத் தீர்ப்பு போதாது, அவையிலே வைத்து அதை மீண்டும் நிறைவேற்றியிருக்க வேண்டுமென்பதற்கு அவரே சாட்சியாக இருக்கிறார். அவரே அவையிலே வைப்பதற்கு கையெழுத்திட்டிருக்கிறார். இதை அவர் மறுக்க முடியாது. இப்படி உள்ளங்கை நெல்லிக்கனி போல உண்மை வெளிவந்திருக்கின்றது இந்தக் கோப்பின் மூலமாக என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதில் விளக்கத்தோடு இதையும் இணைத்து நான் அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*

*சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.*

*பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.*

*பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடை (நீக்கச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் (நீக்கச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2006), மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.





**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் (நீக்கச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2006)[@] ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுவோர், காங்கிரஸ் கட்சி உறுப்பினர் மாண்புமிகு திரு. எச். வசந்த குமார் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை இந்த அவையில் இருக்கக்கூடிய எல்லாக் கட்சிக்காரர்களும் ஆதரிக்கிறார்கள். எனவே, விவாதம் இல்லாமலேயே அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவதற்கு அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 29-5-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227072

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் (நீக்கச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



## 4. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடிகளுக்கு (தனியார் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டுச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2006) மற்றும் 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2006) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 10–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடிகளுக்கு (தனியார் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டுச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடிகளுக்கு (தனியார் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டுச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2006), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடிகளுக்கு (தனியார் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டுச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2006) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்.

@ 31-5-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





### பிரிவு 2

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் வர்களே,

"In the said Bill in sub-clause (d) of Clause 2, the words 'by the Government' erever occurs be deleted."

ற்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை மைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க ண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 3 முதல் 11 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 3 முதல் 11 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக 'ருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2006 மே 31

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடிகளுக்கு (தனியார் கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீட்டுச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2006) திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி, ஏற்கப்பட்டது.

## (ஈ) தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2006), மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

@ 31-5-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2006 மே 31]

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2006)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின்.. (குறுக்கீடு) மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள்.

முற்பகல் 10-55

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான Bill. இதைப்பற்றி உறுப்பினர்களுடைய கருத்தை அருள்கூர்ந்து கேட்க வேண்டும். அதற்கு நீங்கள் ஒவ்வோர் உறுப்பினருக்கும் 5 நிமிடங்களாவது பேசுவதற்கு அவகாசம் அளிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் அவர்கள்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டிலே சூரம்பட்டிவலசு என்கின்ற ஒரு சிறிய கிராமத்திலே பிறந்த எனக்கு அரசியல் அங்கீகாரம் கொடுத்து, பாரம்பரியமும், மரபும்மிக்க இந்த அவையிலே பேசுகிற வாய்ப்பினைக் கொடுத்து, மேலேயிருந்து ஆசி வழங்கிக் கொண்டிருக்கிற என் இதய தெய்வம், மக்கள் தலைவர் ஐயா மூப்பனாருடைய தியாகத்தைப் போற்றி வணங்கி, தொட்டு வணங்கி, அவர் ஆசியோடு உங்கள் மத்தியிலே என்னைத் தேர்ந்தெடுத்த என் தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவித்து, எனக்கு இந்த வாய்ப்பை வழங்கிய காங்கேயம் சட்டப்பேரவை தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு இந்தத் தேர்தலில் போட்டியிடுகிற வாய்ப்பினை வழங்கிய எங்கள் கட்சியினுடைய அகில இந்தியத் தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், என் தலைவர், அன்புத் தலைவர், மக்கள் தலைவர் ஐயா ஜி.கே. வாசன் அவர்களுக்கும், காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவர்களுக்கும், என் வெற்றிக்கு உழைத்திட்ட தலைவர் கலைஞர் உட்பட அத்துணை

கூட்டணி இயக்கங்களுடைய தலைவர்களுக்கும், செயல் வீரர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, இந்தச் சட்டமுன்வடிவின்மீது, பேசுவதற்கு வாய்ப்பினைக் கொடுத்தமைக்காக நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, உங்கள் மத்தியிலே சில கருத்துகளை வைக்க விரும்புகிறேன். தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கற்பிக்கப்படுகிற பாடங்களில் ஒன்றாக தமிழை கற்றுக்கொள்வதற்கு வழி செய்வதற்கான சட்டமுன்வடிவை வரவேற்கிறேன். இதை காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயும், என் சார்பிலேயும் வரவேற்கிறேன்.

பொதுவாக தாய் மொழிக் கல்வி, சிந்தனையைத் தூண்டுகிற கல்வி. தமிழ் மூலமாக நல்ல செய்திகளை, நல்ல கருத்துகளை மாணவர்கள் மத்தியிலே, இளைஞர்கள் மத்தியிலே புரிந்துகொள்ள முடியும். பாரதி பாடியதைப் போல,

“செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே – எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே”

என்று மொழியையும் தேசத்தையும் ஒன்றுபடுத்திச் சொன்னார் பாரதி. அதுபோல, தமிழ், உலகமெலாம் பரவிக் கிடக்கிற மொழியாக இருக்கிறது. இன்றைக்கு மத்தியிலே ஆண்டுகொண்டிருக்கிற நமது அரசாங்கம், அன்னை சோனியா காந்தி ஆசியோடு, டாக்டர் மன்மோகன் சிங் தலைமையில் இருக்கிற அரசாங்கம், தமிழைச் செம்மொழியாக்கி பெருமை சேர்த்திருக்கிறது. அதற்கு தலைவர் கலைஞர் அவர்கள் இன்றைக்குத் துணை நின்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தமிழ் மொழியை அனைத்துப் பள்ளிகளிலும் கற்பிக்கவேண்டும் என்கிற இந்த அரசினுடைய முடிவு வரவேற்கக்கூடிய, போற்றுதலுக்குரிய முடிவாகும்.

உலக நாடுகளில், பல நாடுகளிலே சுற்றுப்பயணம் செய்கிற வாய்ப்பை, அன்றைக்குத் தலைவர் மூப்பனார் அவர்கள் எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அப்படி உலக நாடுகளில் சுற்றுப்பயணம் செய்கிறபோது, ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்கிறபோது, அதுவரை நான் ஆங்கிலம்தான் சர்வதேச மொழி என்ற கனவிலே இருந்தேன். ஆனால், அதற்கு மாறாக ஆங்கிலம் என்பது சர்வதேச மொழி அல்ல. அங்கே French இருக்கிறது; Latin இருக்கிறது; அங்கே ஜப்பானிய மொழி இருக்கிறது; தமிழ் இருக்கிறது. உலகத்தில் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செல்கிறபோது, அங்கே தமிழர்கள், தமிழ் இல்லாத இடமே இல்லை. France நாட்டிலே, பாரீஸ் தலைநகரத்திலே தமிழர்களுக்கென்று





தனிப் பகுதியே இருக்கிறது. அங்கே அந்த அளவிற்குத் தமிழ் பரவிக் கிடக்கிறது. சர்வதேச மொழியாக இருக்கிற தமிழ், இன்றைக்கு அதனுடைய பலம் குறைந்து வருகிறது. இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற தாய்மார்கள்கூட, ஒரு குழந்தை அப்பா, அம்மா என்று சொல்வதைக்காட்டிலும், Daddy, Mummy என்று சொல்வதிலே விருப்பம் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை எல்லாம் மாறி, செம்மொழியாக்கப்பட்டிருக்கிற தமிழினுடைய பெருமை உலகமெலாம் பரவ வேண்டும் என்று சொன்னால், எல்லா பள்ளிகளிலும் தமிழ் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திச் சொல்லிக் கொள்கிறேன்.

*முற்பகல் 11–00*

அதுமட்டுமல்ல, தமிழைக் கற்றால் வேலை கிடைக்குமா, வேலைவாய்ப்பு கிடைக்குமா என்கின்ற சந்தேகம், அச்சம், மக்கள் மத்தியிலே, பொதுமக்கள் மத்தியிலே இருக்கிறது. அதைமாற்றி, தமிழைப் படித்தால் அதற்கு வாய்ப்பு உண்டு, அதற்கெல்லாம் முன்னுரிமை உண்டு என்கின்ற கருத்தைக்கூட, வாய்ப்பைக்கூட இந்தச் சட்டமுன்வடிவிலே இணைத்துக் கொள்ளலாம், சேர்த்துக் கொள்ளலாம் என்கின்ற கருத்தினைத் தெரிவித்து, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று, தமிழ் மொழிக் கல்வி உலகமெல்லாம் வேண்டும், தமிழகம் முழுமைக்கும் வேண்டும், தமிழகத்தில் இருக்கிற மெட்ரிகுலேஷன் பள்ளிகள், C.B.S.E. பள்ளிகள் உட்பட எல்லா பள்ளிகளிலும் தமிழ் கற்றுக் கொடுக்கிற முதல் மொழியாக, கட்டாய மொழியாக, தமிழ் ஆட்சி மொழியாக, வரவேண்டுமென்ற கருத்தினை வலியுறுத்தி காங்கிரஸ் கட்சியின் சார்பிலே இந்த வாய்ப்புக்கு நன்றி பாராட்டி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம், ஜெய்ஹிந்த்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளில் கட்டாயத் தமிழ்ப் பாடம் என்பதைச் சட்டமுன்வடிவின் மூலமாக அறிமுகம் செய்து விவாதிக்கின்ற இந்த நேரத்தில் வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைச் சொல்லி, பட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இந்தச் சட்டமுன்வடிவின் மூலமாக சில கருத்துகளை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

[திரு. ஜி.கே. மணி] [2006 மே 31

பேரவைத் தலைவர் அவர்களே, இதே மாமன்றத்தில் கடந்த ஆட்சிக் காலத்தில் தமிழ் கட்டாய மொழியாக ஆக்கப்பட வேண்டும்; பள்ளிகளில் தமிழ் ஒரு பாடமாகவாவது கொண்டு வரவேண்டுமென்று நான் பலமுறை எடுத்துச் சொன்ன நேரத்தில் அன்றைய முதலமைச்சரால், அமைச்சர்களால், ஆட்சியாளர்களால் பலமுறை கொச்சைப்படுத்தப்பட்டேன்; அவமானப்படுத்தப்பட்டேன்; இழிவுபடுத்தி என்னைப் பேசினார்கள் என்பதையெல்லாம் முதலிலே நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். ஆகவே, தமிழகத்தில் இப்படிப்பட்ட நெருக்கடியான, இக்கட்டான சூழ்நிலையில் தமிழுக்கும், தமிழனுக்கும் பெருமை சேர்க்கிற வகையில் தமிழ் ஒரு பாடமாக அறிவிக்கப்பட வேண்டும்; அரசால் அது கொண்டுவரப்பட வேண்டுமென்று ஒரு மகத்தானச் சட்டத்தை தமிழ் ஆய்ந்த, தமிழ் அறிஞர், தமிழ் இனத்தின் தலைமகன், தமிழகத்தின் முதலமைச்சர் கொண்டு வருவது, அவருடைய ஆட்சிக் காலத்தில் கொண்டு வருவது தமிழர்களுக்குப் பெருமை, தமிழ்நாட்டிற்குப் பெருமை என்பதை நான் முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்படி இந்தச் சட்டமுன்வடிவை அறிவிக்கிற இந்த வேளையில் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, இதற்கு முன்னாலே இருந்த நிலை, சொல்வதைத் தவறாக நினைத்துக்கொள்ளக் கூடாது, உலக நாடுகளில் அல்லது இந்தியத் திருநாட்டில், பிற மாநிலத்தில் எடுத்துக் கொண்டாலும்கூட தாய்மொழியைப் படிக்காமல் பிற மொழியையே படித்து வெளியேறுகிற நிலை எந்த மாநிலத்திலும் இந்தியாவில் இல்லை. உலக நாடுகளில் எங்கேயும் இல்லை. ஆனால், தமிழ்நாட்டில் மட்டும்தான் இந்த அவலநிலை. தன்னுடைய கல்வியை, மழலையர் பள்ளி, தொடக்கப் பள்ளியிலேயிருந்து பட்டப் படிப்பு வரை தாய்மொழி படிக்காமலேயே படித்துவிட்டு வெளியேறக்கூடிய ஓர் அவலநிலை தமிழ்நாட்டில் மட்டும்தான் இருந்து கொண்டிருந்தது. அதைப் போக்குகிற வகையிலே வந்துள்ளது இந்தச் சட்டம். அதிலும் குறிப்பாக, தாய்மொழிக் கல்வியினுடைய முக்கியத்துவத்திற்கு பல சான்றுகள் இருக்கின்றன. ஒருவன் தான் நினைப்பதை, தன்னுடைய சிந்தனையில் தோன்றியதை நினைத்தவாறே எடுத்துச் சொல்வதற்குத் தாய்மொழியால் மட்டுமே முடியும். ஆகவேதான், வளர்ந்த நாடுகளில்கூட மருத்துவம், பொறியியல் போன்ற உயர் கல்விகூட தாய்மொழியிலே இருக்கிறது. நாம் அந்த அளவுக்கு வரவில்லையென்று சொன்னாலும்கூட தாய்மொழியைப் படிக்காமல் இருக்கிற அவலநிலை இங்கே இருந்து கொண்டிருந்தது. அதையெல்லாம் போக்குகிற வகையிலே உள்ளதால், இந்தச் சட்டம் வரவேற்கக்கூடிய சட்டம். அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று



2006 மே 31] [திரு. ஜி.கே. மணி]

சொன்னால், 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையிலே தமிழ் பாடம் என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், கடந்த ஆட்சிக் காலத்தில் சொன்னார்கள், நாங்கள் எல்லாம் பேசிய நேரத்தில் அறிவியல் தமிழ் என்று அறிவித்திருக்கிறோம் என்று அன்றைய முதலமைச்சரால் சொல்லப்பட்டது. எங்கே இருக்கிறது அறிவியல் தமிழ் என்று கேட்டோம். அவர் சொன்னது நாங்கள் அறிவியல் தமிழை அறிமுகப்படுத்தி இருக்கிறோம், புத்தகங்களை அச்சடித்திருக்கிறோம் என்று சொன்னார். நான் கேட்டேன், அந்த அறிவியல் தமிழ்ப் பாடத்திற்கு பாடப் புத்தகம் இருக்கிறதா? பாட வேளை இருக்கிறதா? அதற்கு ஆசிரியர் இருக்கிறாரா? அந்தப் பாடம் நடத்தப்படுகிறதா? தேர்வு நடத்தப்பட்டிருக்கிறதா என்றெல்லாம் கேட்டோம். ஆனால், இந்தச் சட்டமன்றத்தை, இந்த மாமன்றத்தைப் புறக்கணித்து, இதை ஒரு நாடக மேடையாகப் பயன்படுத்திய அன்றைய முதலமைச்சர் எதுவுமே இல்லாமல், உண்மைக்கு மாறான ஒரு தகவலை அவையிலே சொன்னார். 'எல்லாம் நடக்கிறது, நீங்கள் சொன்னவை அனைத்தும் நடக்கிறது, தேர்வு முறையும் இருக்கிறது' என்று உண்மைக்கு மாறான ஒரு தகவலை இந்த மாமன்றத்திலே அன்றைய முதல்வர் சொன்னது இந்த மாமன்றத்திற்கு மிகப் பெரிய தலைக்குனிவு என்பதை அன்றே நாங்கள் பதிவு செய்தோம். இருந்தாலும்கூட, சிறப்புமிக்க, மரபுமிக்க இந்த மாமன்றம் கடந்த காலங்களில் ஒரு நாடக மேடையாக அரங்கேற்றப்பட்டு உண்மைக்கு மாறான தகவலையே பதிவு செய்யக்கூடிய மாமன்றமாக மாற்றப்பட்டது. அந்த நிலையெல்லாம் மாறி, உண்மையை பேசக்கூடிய மன்றமாக, தேவையானவற்றை எடுத்துச் சொல்லக்கூடிய மன்றமாக ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற மாண்புநிறை முதலமைச்சர் அவர்களும், அமைச்சர்களும், நடுநிலையோடு, உண்மை நிலையை இங்கே எடுத்து, சட்டமாக்குகிற நிலையைக் கண்டு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நாங்கள் மனதார வரவேற்கிறோம், பெருமைப்படுகிறோம்.

முற்பகல் 11-05

தமிழ் மொழி உலகிலே் மிகச் சிறந்த மொழி. உலகத்தில் இருக்கிற 3,000 மொழிகளில் தலைசிறந்த மொழியான ஆறு மொழிகளில் ஒன்று. அதைத்தான் சொன்னார்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்"

[திரு. ஜி.கே. மணி] [2006 மே 31

அதுமட்டுமா,

“தேனினு மினியநற் செந்தமிழ் மொழியே!
தென்னா டிலங்குறத் திகழுந்தென் மொழியே!
ஊனினு முயரிய ஒண்டமிழ் மொழியே!”

என்றெல்லாம் சொன்ன அந்த பெருமைக்குரிய தாய் மொழிக்கு பெருமை சேர்க்கிற வகையிலேதான் நம்முடைய மாண்புநிறைந்த முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இந்தச் சட்டமுன்வடிவை மனதார வரவேற்கிற அதே வேளையில் பத்தாம் வகுப்பு வரையில் என்று சொல்லி இருக்கிறீர்கள். இது வரவேற்கக்கூடியது. இருந்தாலும்கூட, மேல்நிலைப் பள்ளியிலே 10 ஆம் வகுப்பும் இருக்கிறது, 12 ஆம் வகுப்பு வரை இருக்கிறது. ஆகவே, 12 ஆம் வகுப்பு வரையிலே தமிழ் மொழியை ஒரு கட்டாயப் பாடமாக்கினால் இன்னும் பெருமை சேர்க்கக்கூடியதாக இருக்கும் என்ற அந்தக் கருத்தை இங்கே நான் சொல்லிக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், சிறுபான்மை மதத்தவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மொழி சிறுபான்மையினருக்கும் முக்கியத்துவம் என்ற வகையிலே, இந்தச் சட்டத்திலே இடம் பெறச் செய்திருக்கிறார்கள். இதுவும் வரவேற்கக்கூடியது. தமிழ் அல்லாத, ஆங்கிலம் அல்லாத, பிற மொழி பேசக்கூடிய சிறுபான்மை மொழியினருக்கு அந்த மொழிக்கும் முக்கியத்துவம் வேண்டும் என்ற வகையிலே விருப்பப் பாடமாக அவர்கள் படித்துக் கொள்ளலாம் என்ற ஒரு வரவேற்கக்கூடிய திருத்தத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறீர்கள். அதுவும் மனதார வரவேற்கக்கூடியது என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாக எடுத்துச் சொல்லிக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் 2006–2007 ஆம் ஆண்டு 1 ஆம் வகுப்பிலே தமிழ்ப் பாடம், 2007–2008 ஆம் ஆண்டு 2 ஆம் வகுப்பிலே இருந்து துவங்கும் என்று சொல்லி இருக்கிறீர்கள். இப்படி ஓர் ஆண்டுக்கு, ஒரு வகுப்புக்கு உயர்த்தப்படுகிறது என்று சொன்னால், 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு வரையிலே உயருவதற்கு 10 ஆண்டு காலம், 12 ஆண்டு காலம் ஆகிவிடும். அதிலும் காலம் கடந்து விடும். ஆகவே, 2006–2007 ஆம் ஆண்டிலே 1 ஆம் வகுப்பிலே துவக்குகிற அந்தத் தமிழ்ப் பாடம் 12 ஆம் வகுப்பு வரையிலே துவங்கக்கூடிய வகையில் திருத்தம் கொண்டு வந்தால், எல்லாக் குழந்தைகளும் தமிழ் படிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். 10, 11 ஆம் வகுப்பிற்கு ஆங்கிலம், கணிதம்...



2006 மே 31]

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், மரியாதைக்குரிய ஜி.கே. மணி அவர்கள் இங்கே ஒரு கருத்தை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அவர் எடுத்துச் சொல்லி இருக்கிற கருத்திலே சில நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. ஒரு மாணவர் 8 ஆம் வகுப்பிலே, 9 ஆம் வகுப்பிலே படித்துக் கொண்டிருக்கிறார் என்று சொன்னால், அவர்கள் இப்போது வரை ஒரு குறிப்பிட்ட மொழியிலே ஒரு பாடத்தைப் படித்துக் கொண்டிருப்பார்கள். இப்போது, திடீரென்று அவரிடத்திலே அடுத்து, இந்த வருடத்திலிருந்து, இந்தக் கல்வி ஆண்டிலிருந்து நீங்கள் தமிழைப் படியுங்கள் என்று சொன்னால், உடனடியாக அவர்கள் அந்த மொழியைக் கற்பதிலே சிக்கல்கள் இருக்கின்றன. உடனடியாக இன்றைக்கு திடீரென்று அவர்கள் தமிழ் மொழியைக் கற்க வேண்டும் என்பதிலே நடைமுறைச் சிக்கல் இருக்கிறது. இன்னொரு சிக்கல் என்னவென்று சொன்னால், எந்த வகுப்பிலிருந்து படிக்க வேண்டும். 8 ஆம் வகுப்புக்குரிய தமிழ்ப் பாடத்தை உடனடியாக அவர்களுக்கு புகுத்த முடியாது. ஏனென்றால், 1 ஆம் வகுப்பிலிருந்து 8–வது வரை அவர்கள் அந்தத் தமிழைப் படித்திருக்க முடியாது. எனவேதான், படிப்படியாகக் கொண்டு செல்வோம் என்கின்ற ஒரு முடிவு—நான் அந்தக் கருத்தை ஒத்துக்கொள்கிறேன். இப்போது ஒன்றாம் வகுப்பிலே சேரக்கூடியவர்களுக்கு முதலிலே வருகிறது. அடுத்த வருடம் இரண்டாம் வகுப்பிற்கு வருகிறது. படிப்படியாக வருகிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், நான் ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்கிறேன். இதை நீங்கள் எப்படி என்று கேட்டீர்கள் என்றால், ஒரு கால்பந்தாட்ட மைதானத்திலே பந்தயம் ஒன்றைத் துவக்கும்போது முதலிலே பந்தை உதைக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் இப்போது ஒரு சரியான நேரத்தில், சரியான கோணத்தில், சரியான திசையில் தன்னுடைய முழு உந்து விசையைப் பயன்படுத்தி பந்தை உதைத்து இருக்கிறார்கள். பந்து பறந்து செல்வதற்கோ அல்லது உருண்டு செல்வதற்கோ கொஞ்சம் காலகட்டம் ஆகும். ஆனால், கண்டிப்பாக பந்து கோல் போஸ்டுக்குள் போய்விடும். எந்த நோக்கத்திற்காக இவர் இதைக் கொண்டு வந்திருக்கிறாரோ, அந்த நோக்கம் நிச்சயமாக நிறைவேறும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

*முற்பகல் 11–10*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நல்ல விளக்கத்தை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள், வரவேற்கக்கூடியதுதான். ஆனாலும்கூட, “காலம் கருதி இடத்தாற் செயின்” என்ற அந்தக் கூற்றுக்கேற்ப, இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள், வரவேற்கிறேன். அதேநேரத்தில், 1 ஆம் வகுப்பு படிக்கக்கூடிய மாணவன் படிப்படியாக வருகிறவேளையில், 2 ஆம் வகுப்பு படிப்பவன் 10, 12 வரையிலே தமிழைப் படிக்காமல் வெளியேறக்கூடிய நிலை இந்தக் காலத்திலேயும் இருக்கிறது. அதைத்தான் 2 ஆம் வகுப்பு படிக்கக்கூடிய மாணவனுக்கு, 2 ஆம் வகுப்பு தமிழ்ப் பாடத்தை அங்கே வைக்கவேண்டியதில்லை. 8 ஆம் வகுப்பு படிக்கக்கூடிய மாணவனுக்கு, 8 ஆம் வகுப்பு தமிழ்ப் பாடத்தை வைக்கவேண்டிய அவசியமில்லை. அது 1 ஆம் வகுப்பிலேயிருந்து, 12 ஆம் வகுப்பு வரையிலே ஆரம்பப் பாடத்தை, தமிழைக் கற்றுக்கொள்ளக்கூடிய வகையில், முதல் வகுப்பு தமிழ்ப் பாடத்தை அவர்களுக்குக் கொடுக்கலாம். அப்படி படிப்படியாக—இதைக் கூறுவதற்குக் காரணம், அவன் ஆரம்பத்திலே தமிழைக் கற்றுக் கொண்டு வெளியேறுகிறான். (குறுக்கீடு) அவனும், இந்த 10, 12 ஆண்டு காலம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே தமிழ் கட்டாயப் பாடமாக்கப்பட்டிருக்கிறது. தேர்வு எழுதவேண்டும், பாஸ் பண்ணவேண்டும். 8 ஆம் வகுப்பு படிக்கிற மாணவனுக்கு, 1 ஆம் வகுப்புப் பாடத்தை வைக்கமுடியாது. அதுவொரு சிக்கல். அதுமட்டுமல்ல; இன்னொன்று என்னவென்றால், பாடத் திட்டங்களை இப்போதுதான் ஒவ்வொன்றாக வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வகுப்புக்கும் இந்த மொழிப் பாடம் என்று வகுக்கிறார்கள். அதனாலே, அந்தந்த வகுப்புகளுக்குரிய பாடங்களைத்தான் அவற்றிற்கு வைக்கமுடியும். அதோடு இல்லை. இந்த நிலைமை வருவதற்குக் காரணம், இப்போதும் தமிழ் படித்திருப்பவர்கள் விரும்பினால், 6 ஆம் வகுப்பிலேயே வந்து சேருகிற மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் விரும்பினால், 6 ஆம் வகுப்பிலேயிருந்தே நடத்தலாம். அவர்கள் ஒன்றும் கண்டிப்பாக இதில்தான் படிக்கவேண்டும் என்கிற அவசியமில்லை. அதையும் நடைமுறைரீதியாக 6 ஆம் வகுப்பிலேயிருந்துகூட அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த அரசு



முயற்சிகளை மேற்கொள்ளும். அதற்கு இந்தச் சட்டம் வழிவகுத்திருக்கும் என்று சொன்னால், G.O. மூலமாக அவற்றை நிறைவேற்றுவதற்கு இதிலே வாய்ப்புகள் இருக்கின்றன.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய ஆலோசனை. இதை எந்தவகையிலே—8 ஆம் வகுப்பு, 10 ஆம் வகுப்பு மாணவனுக்கு 1 ஆம் வகுப்பு பாடம் இல்லையென்று சொன்னாலும்கூட, அவனுடைய வயதிற்கேற்ப, அவனுடைய மனநிலைக்கேற்ப தமிழ்ப் பாடத்தை அமைத்துக்கொள்ளலாம். ஆகவே, வாய்ப்பிருப்பின் இந்த ஆலோசனையையும் இதிலே சேர்த்துக் கொள்ளவேண்டும். இருந்தாலும்கூட, எப்பாடுபட்டாவது தமிழைக் கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்ற அரிய முயற்சியில் ஈடுபட்ட தமிழாய்ந்த தமிழனுக்கு, தமிழ்நாட்டின் தலைமகனுக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நெஞ்சார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் சொல்லி, இந்தச் சட்டத்தை மனதார வரவேற்று அமர்கிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழைக் கட்டாயப் பாடமாக முதல் வகுப்பு முதல் ஆரம்பிப்பது என்பது, தொடக்கத்திலேயிருந்துதான் வரவேண்டுமே தவிர, இடையில் வந்தால் நிச்சயமாக அது சரியாக இருக்காது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசுகின்றபோது, 8–வது வகுப்பிலே தொடங்கி, அவர்களுக்கு elementary–யாக, அதாவது தொடக்கப் பாடமாகத் தமிழைச் சொல்லிக் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். ஆனால், அந்த நிலைக்கு. அந்த standard–க்கு நிச்சயமாக தமிழ் ஒத்துவராது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கின்ற சட்டமுன்வடிவின்பிரகாரம்தான் இந்தச் சட்டம் அமலுக்கு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராஜசேகரன் அவர்கள்.

**திரு. எஸ். இராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருந்துகொண்டு, தமிழைக் கட்டாயமாகப் படிக்க வேண்டுமென்கின்ற ஒரு சட்டமுன்வடிவை இந்த மாமன்றத்திலே கொண்டு வரவேண்டியிருக்கின்றதே என்பதை நான் வருத்தத்தோடு ஏற்றுக்கொள்கின்றேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்

அவர்கள் தமிழின்மீது கொண்ட பற்றின் காரணமாக, தொடர்ந்து இது நடைமுறையில் இருக்கக்கூடாது என்கின்ற அடிப்படையில், இப்போது தமிழைக் கட்டாயப் பாடமாகக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இன்னும், கொஞ்சம் காலம் விட்டோம் என்று சொன்னால், 'அம்மா' என்று சொல்வது, யாரோ ஒருவரைக் குறிப்பிடுவது மாதிரி ஆகிவிடும் என்கிற மாதிரி ஒரு நிலைமை வந்துவிடும். 'அம்மா' என்று குறிப்பிடுவது, தமிழகத்தில் யாரோ ஒருவரைக் குறிப்பிடுவதாக அர்த்தம் ஆகிவிடும். அதனாலே இப்போது குடும்பத்திலேயெல்லாம், Mummy, Daddy என்கிற அந்த வார்த்தைகள்தான் மேலோங்கியிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நிலை வரக்கூடாது என்பதற்காக இந்தச் சட்டமுன்வடிவு வந்திருக்கிறது.

எங்களுடைய ஆசான் தோழர் ஜீவா அவர்கள் இந்த அவையிலேயே குறிப்பிட்டிருக்கின்றார்கள்; 'தமிழால் எல்லாம் முடியும்' என்பதை அழுத்தமாகச் சொல்லி, ,தமிழிலே அனைத்தும் வரவேண்டும்; அது டாக்டருக்குப் படிப்பதாக இருந்தாலும் சரி; அல்லது பொறியாளருக்குப் படிப்பதாக இருந்தாலும் சரி, அறிவியல் துறையிலே வளர வேண்டும் என்றாலும் சரி, தமிழால் முடியும் என்பதை அழுத்தமாக இந்த அவையிலே ஒரு 50 ஆண்டுகளுக்கு முன்னால் இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்த நடைமுறையில், இன்றைக்கு ஒன்றாம் வகுப்பிலிருந்து பத்தாம் வ்குப்பு வரையில் தமிழ் கட்டாயப் பாடமாக ஆக்கப்பட்டிருக்கின்றது.

*முற்பகல் 11-15*

குறிப்பாக, இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய தொடக்கப் பள்ளிகளில், இன்றைக்கு வருகைப் பதிவு என்பது குறைந்துவிட்டது. பல கிராமங்களில் இருக்கக்கூடிய பள்ளிகளில் எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், ஐந்து குழந்தைகள் ஒன்றாம் வகுப்பில், இரண்டாம் வகுப்பில் நான்கு பேர்கள், எஸ்எஸ்எல்சி என்று வருகின்றபோது, அந்தப் பள்ளியிலேயிருந்து ஒரு 20 பேர்கள் அல்லது 25 பேர்கள் என்கின்ற நிலையில் அரசுப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகளிலிருந்து அல்லது உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் வரையில் அந்த எண்ணிக்கை குறைந்துவிட்டன. அந்த எண்ணிக்கை ஏன் குறைந்தது என்று சொன்னால், அதாவது—English medium—ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுப்பதையே மக்கள் விரும்புகின்ற அந்த நிலைக்கு வந்திருக்கின்றார்கள். ஆகவே, சட்டமுன்வடிவு என்பது, ஒரு சட்டத்தின் மூலமாக இதைத் திருத்திவிடலாம் என்கின்ற நிலையிலிருந்து, அரசு—டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு, இதை ஒரு விழிப்புணர்வுப் பிரச்சாரமாக கிராமங்களில் நடத்தவேண்டும். அப்படி நடத்தினால்தான் இந்தச் சட்டமுன்வடிவிற்கு அர்த்தம் இருக்கும் என்று



நான் நம்புகிறேன். ஏனென்று கேட்டால், கிராமப்புறத்தில் சாதாரண மக்கள்கூட, அந்த ஆங்கில வழியிலே கல்வி கற்பதை விரும்புகின்ற இந்த நேரத்தில், அந்த ஆங்கில வழிக் கல்வி பயிலுகின்ற இந்த வேளையில், அங்கே தமிழை ஒரு பாடமாக வைத்து இதைச் சிறப்பு செய்கின்ற இந்த அரசுக்கு, டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நன்றியையும், வணக்கத்தையும் சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை மனதார வரவேற்கிறேன் என்று கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த குமார்.

**திரு. எச். வசந்த குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழன் தலை நிமிர்ந்து நிற்பதற்கு, பாரத தேசத்திலேயே இரண்டு பாரதப் பிரதமர்களைத் தேர்ந்தெடுத்த பெருந்தலைவர் காமராஜரால் இலவசக் கல்வி பெற்று, இன்று இந்தத் தமிழால் பேசுவதற்கு வாய்ப்பினை நான் பெற்று இருக்கின்றேன். அன்னை சோனியா காந்தி அவர்களால், நாங்குநேரி தொகுதியில் வேட்பாளராக நிறுத்தப்பட்டு, இன்றைக்கு டாக்டர் கலைஞர் அவர்களின் முன்னிலையிலே, நாங்குநேரியிலேயிருந்து வந்து நான் இங்கு நேரில் பேசுவதற்கு வாய்ப்பினைத் தந்த டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் நன்றியைச் சொல்லி, தமிழ் இந்த உலகத்தை ஆளும் என்று 1903 ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்கா நாட்டிலிருந்து மகாத்மா காந்தி அவர்கள் London High Commission–க்கு கடிதம் எழுதுகிறார். தில்லையாடி வள்ளியம்மை போன்ற தமிழ் நெஞ்சங்கள் எல்லாம் தென் ஆப்பிரிக்காவிலே பணியாற்றிய நேரத்திலே காந்தி மகான் தமிழின் சுவையை அறிந்து London High Commission–க்கு கடிதம் எழுதுகிறார். Classical Language தகுதியுள்ள தமிழ் இங்கே பாடமாகக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று மகாத்மா காந்தி அவர்கள் 1903 ஆம் ஆண்டு London High Commission–க்கு எழுதுகின்ற அந்தத் தமிழால் இன்று நான் பேசுகிறேன். அங்கே நான் கல்லூரியிலே படிக்கின்ற நேரத்திலே தமிழை முதல் பாடமாக எடுத்துப் படித்தேன். முதுகலை – தமிழ் முதல் பாடமாக எடுத்துப் படித்தேன். ஆனால், 1969 ஆம் ஆண்டு முடித்த எனக்கு இதுவரையிலும் அரசாங்கத்திலேயிருந்து ஒரு Interview card கூட வரவில்லை என்று சொன்னால், தமிழைப் படிக்கின்ற மக்களுக்கு இந்த அரசாங்கம் என்ன உத்தரவாதம் கொடுக்கும் என்பதுதான் எனது கேள்வி. தமிழைப் படி என்று சொல்கின்றீர்கள், படிக்கிறோம். தமிழ்மீது ஆர்வம் இருக்கிறது. படிக்கிறோம். ஆனால்..

[2006 மே 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திர இயக்கத்திலே ஈடுபட்ட கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சுதந்திரம் கிடைத்தால் அதற்கு என்ன பலன் என்று கேட்பது போலத்தான், தாய் மொழி படித்தால் அதற்கு என்ன உத்தரவாதம் என்று கேட்கிற கேள்வியும். தாய்மொழியைப் படிப்பது என்பதே தமிழனுக்கு அவனை அடையாளம் காட்டுகிற ஒரு பெருமை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–20*

**திரு. எச். வசந்த குமார்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, தமிழ் ஆர்வத்தினால்தான் நாங்கள் படித்தோம். எங்களுக்கும் குடும்பம் இருக்கிறது. எங்கள் குடும்பத்தையும் வாழ வைப்பதற்கு ஒரு பணியிடம் வேண்டும் என்ற நோக்கம் எங்களுக்கு இருக்கக் கூடாதா? எனவேதான் கேட்கின்றேன், தமிழ் படிக்கின்ற மாணவர்கள் Degree படிக்கின்றார்கள் அல்லது Post Graduate படிக்கின்றார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு வேலை கிடைக்காவிட்டால் தமிழக அரசு மாதந்தோறும் minimum 500 ரூபாய், மாதாமாதம் ஊதியப் பணமாகக் கொடுத்தால், படிக்கின்ற மாணவர்களுக்கு உதவிப் பணமாகக் கிடைத்தால்...

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழிலே கல்லூரியிலே படிக்கின்றபோது தலைவர் கலைஞர் அவர்கள்தான்—தமிழ்வழியிலே படிக்கின்ற மாணவர்களுக்குக்கூட மாதந்தோறும் உதவித் தொகையைக் கொடுத்து ஊக்கப்படுத்திய தலைவர்தான் டாக்டர் கலைஞர் அவர்கள். அதேபோல தமிழில் படிப்பவர்களுக்கு வாய்ப்புரிமைகளையும் கொடுத்த தலைவர்தான் டாக்டர் கலைஞர் அவர்கள். தமிழ் படித்தவர்கள் தலைமையாசிரியர்களாக வர முடியும் என்ற உத்தரவைப் பிறப்பித்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள். ஆகவே, தமிழ் படித்தவர்களுக்கு தலைவர் கலைஞர் ஆட்சியிலே இருக்கிறபொழுதெல்லாம் பொருளாதார ரீதியாகவும் வளர்ச்சிகளுக்கு அதிக உதவிகளைச் செய்திருக்கிறார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வழிக் கல்வி பயின்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டுமென்ற கோரிக்கை வைக்க வேண்டுமென்று உறுப்பினர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



2006 மே 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சட்டமுன்வடிவு பற்றி மட்டும் பேசுங்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எச். வசந்த குமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் படிக்க வேண்டும்.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்'

என்று பாரதி தமிழை மட்டும் படிக்கவில்லை. தமிழைப்போல் பிற மொழிகளையும் படித்ததினால் அந்த பாரதிக்கு—பிறமொழிகளையும் கற்று அதிலிருந்த அந்தத் தன்மையைவிட தமிழுக்கு அதிகமான அந்தத் தன்மை இருக்கிறது. அதற்கு அதிகமான சக்தி இருக்கிறது என்று பாரதி காட்டியதுபோல, அனைவரும் தமிழைப் படிப்பதில் எந்தவொரு மாறுபட்ட எண்ணமும் எங்களுக்குக் கிடையாது என்று சொல்லி இந்தச் சட்டமுன்வடிவு நல்ல சட்டமுன்வடிவு; அதை நான் வரவேற்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள். சட்டமுன்வடிவுபற்றி மட்டும் பேசுங்கள். சுருக்கமாகவும் பேசி முடியுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, தமிழ்நாடு மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கற்பிக்கப்படும் பாடங்களில் ஒன்றாக தமிழைக் கற்றுக்கொள்வதற்கு வகை செய்வதற்கான சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக மனதார வரவேற்கின்றோம். சீனா போன்ற வலுவான சோஷலிச நாட்டில்கூட அனைத்து மட்டங்களிலும் உயர் கல்விகள் அவர்களுடைய தாய்மொழியிலே பயிற்றுவிக்கப்பட்டு, உலக நாடுகளிலே பல்வேறு வகைப்பட்ட துறைகளில் இன்றைக்கு முன்னிலை பாத்திரத்தை வகித்துக்கொண்டிருக்கிறது என்றால், அது அந்த நாட்டிலே தாய்மொழியிலே அனைத்து மட்டங்களிலும் உயர் கல்வி அளிப்பதைப் பறைசாற்றுகிறது. பிறநாடுகளிலிருந்துகூட செல்கின்ற மாணவர்கள் ஆறு மாத காலத்தில் அந்தச் சீன மொழியைப் பயின்ற பிறகுதான், அடுத்து அவர்கள் கல்வியில் சம்பந்தப்பட்ட பாடத்தைப் பயிலுகின்ற நடைமுறை இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறது. அதேபோல் தமிழகத்தில் அனைத்துத் தலங்களிலும் தமிழ் மொழி உயர்த்தப்பட வேண்டும்; மருத்துவத் துறை, நீதித் துறை, நிர்வாகத் துறை, இப்போது I.A.S. போன்ற தேர்வுகள்கூட தமிழிலே எழுதி

பலர் வெற்றிபெற்று பல மாநிலங்களில் பணிபுரிகின்ற அந்த அந்தஸ்து, மரியாதையால் இந்திய நாடு முழுவதும் தமிழுக்கு அந்தப் பெருமை சேரும் என்பதை இந்த நேரத்திலே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, இப்படி இந்தத் துறைகளிலே தமிழை உயர்த்துவதற்கு உரிய நிதி ஒதுக்கீட்டை சம்பந்தப்பட்ட துறையினுடைய அமைச்சர் அவர்கள் கவனத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் உயர் கல்வித் துறையும் தமிழ் மொழியில் பாடத் திட்டத்தைத் தயாரிப்பதில், அது அந்த மட்டத்தில் மட்டுமல்லாமல்— இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கக்கூடிய உயர் அதிகாரிகள் I.A.S. போன்ற அதிகாரிகள்கூட ஆறு மாத காலத்திலே தமிழை எளிதாக, கணினி மூலமாகக்கூட கற்றுக்கொள்வதற்கான வழிவகைகள் உண்டு. ஆக, அனைத்து மட்ட நிர்வாகங்களிலும் சாதாரண பாமர மக்கள், கிராமத்து மக்கள் உயர் அதிகாரிகளை, மாவட்ட ஆட்சியர்களைக்கூட சந்திக்கின்றபோது, பேசுகின்றபோது தமிழ் தெரியாமல் தடுமாறுகின்ற இப்பேர்பட்ட போக்குகளை மாற்றுவதற்கு உரிய வகையிலே I.A.S. அதிகாரிகளுக்கு, தமிழ் தெரியாதவர்களுக்கு அந்தத் தமிழ்மொழியைக் கற்றுக்கொள்வதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் அனைத்துப் பள்ளிகளிலும் கற்பிக்கப்படுகின்ற பாடங்களில் ஒன்றாக தமிழைக் கொண்டுவருகின்ற இந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக வரவேற்று, இந்த நல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்திய, வாய்ப்பை நல்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், என்னை இந்த மாபெரும் சட்டமன்றத்திலே பேசுவதற்காகத் தேர்ந்தெடுத்து அனுப்பிய எனது சட்டமன்றத் தொகுதியினுடைய அனைத்து வாக்காளர்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியைச் சேர்ந்தவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமைகிறேன்.

முற்பகல் 11–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வரலாற்றிலே ஒரு பொன்னாள். தமிழ்நாட்டு மக்கள் நலனையே தன் உயிர்மூச்சாகக் கருதிக் கொண்டிருக்கக்கூடிய ஒப்பற்ற தலைவர், மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டு



மக்களின் நலனுக்காக எந்தெந்த அறிவிப்புகளையெல்லாம் செய்தார்களோ, தேர்தல் அறிக்கையாக இருந்தாலும், ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கக்கூடிய அறிவிப்புகளாக இருந்தாலும், அவற்றிற்கெல்லாம் ஒரு சட்ட வடிவைக் கொடுக்கக்கூடிய நாளாக, மதமாற்றத் தடைச் சட்டத்தை நீக்கக்கூடிய சட்டம், டெஸ்மா சட்டத்தை நீக்கக்கூடிய சட்டம், இட ஒதுக்கீட்டிற்குத் தீர்மானம், நம்முடைய அன்னைத் தமிழ்மொழியைப் பாடமொழியாகக் கொண்டுவரக்கூடிய சட்டமுன்வடிவு, இப்படி வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டங்களையெல்லாம் இயற்றக்கூடிய இந்த நல்ல நாளிலே, நம்முடைய தமிழ் மொழியினை, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்துப் பள்ளிகளிலும் கற்பிக்கக்கூடிய பாடங்களில் ஒன்றாக தமிழைக் கற்றுக்கொள்வதற்கு வகை செய்வதற்கான ஒரு சட்டமுன்வடிவை, தலைவர் கலைஞர் அவர்களுடைய அமைச்சரவையிலே ஓர் அமைச்சராக, அவருக்குப் பின்னாலே இருந்து, இந்தச் சட்டமுன்வடிவை இங்கே நான் தாக்கல் செய்வதிலே, உள்ளபடியே பெரும் மகிழ்ச்சியினைப் பெற்றிருக்கிறேன்.

இங்கே பேசிய நம்முடைய மாமன்றத்தினுடைய உறுப்பினர்கள், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் மரியாதைக்குரிய ஜி.கே. மணி அவர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே பேசியிருக்கக்கூடிய மரியாதைக்குரிய விடியல் சேகர் அவர்களும், இராஜசேகரன் அவர்களும், மரியாதைக்குரிய வசந்த குமார் அவர்களும், அதைப்போல மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பிலே பேசியிருக்கக்கூடிய, நம்முடைய மரியாதைக்குரிய டில்லி பாபு அவர்களும் இந்தச் சட்டத்தை வரவேற்று, தங்களுடைய அரிய கருத்துகளையெல்லாம் வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் முதற்கண் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே பிறந்திருக்கக்கூடியவர்கள் நாம். கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்தே, முன்தோன்றிய மூத்த தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கக்கூடியவர்கள் நாம்.

> "திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும்
> உடுக்க ளோடும்
> மங்குல்கடல் இவற்றோடும் பிறந்ததமிழுடன் பிறந்தோம்
> நாங்கள்"

என்ற இறுமாப்புடையவர்கள் நாம். ஆனால், அந்தத் தமிழை ஒரு பாட மொழியாகக்கூட கற்காமலேயே உயர் கல்விக்குச் செல்லமுடியும் என்ற அந்த அவல நிலை தமிழ்நாட்டிலே இருந்தபோதுதான், தலைவர்

கலைஞர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த நிலையை அடியோடு மாற்றிட வேண்டும்; தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய ஒவ்வொரு குழந்தையும் நிச்சயமாக அடிப்படைக் கல்வியிலிருந்து தமிழ்மொழியை ஒரு பாடமொழியாகக் கற்றிட வேண்டுமென்று ஆளுநர் உரையிலே அறிவிப்புச் செய்தார்கள்.

அதோடுமாத்திரமல்ல. ஆளுநர் உரையிலே அறிவிப்புச் செய்ததற்கு மறுநாளே—ஆளுநர் உரையிலே தலைவர் அவர்கள் சொன்னார்கள். கல்வியாளர்களுடன் கலந்துபேசி, இதற்கான அரசாணை வெளியிடப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், ஆளுநர் உரைக்கு மறுநாளே—நம்முடைய மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களை அழைத்து, உடனடியாக, அன்றைக்கே தமிழறிஞர்கள், கல்வியாளர்களுடைய கூட்டத்தைக் கூட்டி, இதுகுறித்து விவாதித்து, ஒரு நல்ல முடிவினை எடுத்திட வேண்டுமென்று பணித்தார்கள். அந்தக் கூட்டத்திலே, அன்றைக்கு அனைவரும் கலந்து கொண்டு, தமிழகத்திலே நடைபெறக்கூடிய நம்முடைய பள்ளிகளில் பயிலக்கூடிய மாணவர்கள் அனைவரும் தமிழைக் கட்டாயப் பாடமாகப் பயில்வதை உறுதி செய்வதற்கு, அன்றைக்குத் தங்களுடைய ஆலோசனைகளை வழங்கி, அதன் அடிப்படையிலே இந்தச் சட்டமுன்வடிவு இன்றைக்குத் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இங்கே பேசிய மரியாதைக்குரிய நம்முடைய ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்தத் திட்டம் படிப்படியாக அனைத்து நிலைகளுக்கும் விரிவுபடுத்தப்படும். இப்போது முதற்கட்டமாக நாம் அனைத்து வகைப் பள்ளிகளிலும் ஒன்று முதல் 10 ஆம் வகுப்பு வரை படிப்படியாகக் கொண்டு வந்திருக்கிறோம். காரணம், ஒன்று முதல் 10 ஆம் வகுப்பு வரை இருக்கக்கூடிய பள்ளிகள் பொதுக் கல்வியினுடைய அடிப்படையில் இருக்கிறது. 10 ஆம் வகுப்பிற்கு மேலே அவர்கள், ஐ.டி.ஐ., ப்ளஸ்–2 என்பவற்றிற்குத்தான் போக வேண்டும். ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் என்று செல்கிறார்கள். எனவே, முதற்கட்டமாக, நாம் இப்போது 10 ஆம் வகுப்பு வரை இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். படிப்படியாக மற்ற ப்ளஸ்–2 போன்றவற்றிற்கும் இதை விரிவுபடுத்துவது குறித்து, அரசு நிச்சயமாக ஆலோசிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேமாதிரி, அறிவியல் தமிழைப் பற்றிக்கூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிட்டார்கள். அறிவியல் தமிழ், கடந்த ஆட்சியிலே, அது முற்றிலுமாக எந்தப் பள்ளிக்



கூடத்திலுமே கற்பிக்கப்படவில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை. எல்லா இடத்திலும் கற்பித்தார்கள், அதிலே பேருக்காகச் சொன்னார்கள். பரீட்சை எல்லாம் வைத்தார்கள் என்று சொன்னாலும்கூட எந்த இடத்திலும் நிச்சயமாக அது கற்றுத் தரப்படவில்லை. எனவே, அந்தக் குறைபாடும் இப்போது தமிழ்மொழியை பாடமொழியாகக் கற்பிக்கக் கூடிய ஒரு நிலை ஏற்படுகிறபோது நிச்சயமாக நீங்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–30*

அதுபோல நம்முடைய விடியல் சேகர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, இந்தப் பாடத் திட்டத்திலே, C.B.S.E.—அவர்களையெல்லாம்கூட இதிலே இணைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுடைய, மத்திய அரசு பாடத் திட்டம் வேறு வகையாக இருக்கிறது. நாம் அவர்களை persuade செய்ய முடியும். நிச்சயமாக இந்த அரசு அந்தப் பள்ளிகளுக்கும் —அவர்களையும் அழைத்துப் பேசி, அவர்களையும் convince செய்து இந்தத் திட்டத்தை நிச்சயமாக நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நாம் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்ள முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல நம்முடைய டில்லி பாபு போன்றவர்களும்கூட நிதியொதுக்கீடு வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே நான் அதுகுறித்து நிச்சயமாக கலந்து பேசுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இந்த அடிப்படையிலே, அமைக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தக் கல்வி வடிவமைப்பு பகுதி–1–லே தமிழ்மொழி கட்டாயமாக அனைவரும் பயில வேண்டும். பகுதி–2–லே அதைப்போல ஆங்கில மொழியைக் கட்டாயமாகக் பயில வேண்டும். பகுதி–3–லே, கணிதம், அறிவியல், சமூகவியல் போன்ற பாடத் திட்டங்கள் அது எந்த மொழியில் இருக்கிறதோ, அதைக் கற்றுக்கொள்வதற்கு வழிவகை செய்யப்படுகிறது. பகுதி–1–ஐப் பொறுத்தமட்டில், மொழி சிறுபான்மையினர், தெலுங்கை தாய்மொழியாகக் கொண்டவர்கள், தமிழ் அல்லது ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்டிராதவர்கள், அவர்கள் தங்களுடைய தாய்மொழியை விரும்பிப் படிக்கக்கூடிய ஒரு நல்ல திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்றார்கள். சிறுபான்மையராக இருக்கின்றபோதுகூட, நம்முடைய தாய்மொழியான தமிழ்மீது நாம் வைத்திருக்கின்ற பற்று, அதேபோல அவர்களுக்கு இருப்பதையும் நாம் மதிக்க வேண்டும் என்ற

[திரு. தங்கம் தென்னரசு] [2006 மே 31

அந்த உணர்வோடு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள், இன்றைக்கு அவர்களுக்கும் அதில் இடமளித்து, அதையொரு விருப்பப் பாடமாக கற்பிக்கலாம் என்று கூறியிருக்கிறார்கள். எனவே, இந்தப் பாடத் திட்டம் வரக்கூடிய கல்வியாண்டில், முதல் வகுப்பிலிருந்து, நான் முன்கூட்டியே சொன்னதுபோல துவங்கி, படிப்படியாக ஒவ்வொரு கட்டத்திலும் செயல்படுத்தப்பட வேண்டும். இதுகுறித்து கல்வியாளர்களிடத்திலும் நாங்கள் பேசியபோது, அவர்களும் இதே கருத்தை இதே அடிப்படையில் செய்தால், சிறப்பாக அமையும் என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையில் அவர்களோடு கலந்து பேசி, இந்தத் திட்டம், இந்தச் சட்டமுன்வடிவு இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. இதை மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்று அமைந்ததைப்போல, இந்தச் சட்டமுன்வடிவினை அன்புகூர்ந்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டு அமைகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 10 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2006 மே 31] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்மிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 5. அரசினர் தனித் தீர்மானம்

### உயர் கல்வி நிலையங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்க மத்திய அரசைக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தனித் தீர்மானம் முன்மொழிதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"மண்டல் குழு அளித்த பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு மைய அரசின் கீழுள்ள குடிமுறைப் பதவிகள் மற்றும் பணிகளில் உள்ள 27 விழுக்காடு காலியிடங்கள் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கீடு செய்யப்படும் என்று மைய அரசு 1990 ஆம் ஆண்டு ஆணை பிறப்பித்தது. மண்டல் குழு, கல்வி நிலையங்களிலும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டினைப் பரிந்துரை செய்த போதிலும் மேற்குறிப்பிட்ட இட ஒதுக்கீட்டினை மைய அரசின் கட்டுப்பாட்டின் கீழுள்ள கல்வி நிலையங்களுக்கான சேர்க்கைக்கு நீட்டிக்கவில்லை. அரசின் உதவிபெறும் மற்றும் உதவிபெறாத தனியார் கல்வி நிலையங்கள் உள்ளிட்ட அனைத்து கல்வி நிலையங்களிலும் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு வழங்க அரசுக்கு வழிவகை செய்யும் அரசியலமைப்புச் சட்டம் 93-வது திருத்தம் கொண்டு வந்ததன் விளைவாக ஐ.ஐ.டி. மற்றும் ஐ.ஐ.எம். உள்ளிட்ட உயர்கல்வி நிலையங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்க மைய அரசு தற்போது உத்தேசித்துள்ளது. இந்த ஒதுக்கீடு அவர்களது முன்னேற்றத்தினை உறுதி செய்யும் என்பதாலும், அவர்களை சமுதாயத்தில் உள்ள மற்றவர்களோடு சமநிலைக்குக் கொண்டுவரும் என்பதாலும், மைய அரசால் கட்டுப்படுத்தப்படும் மற்றும் நிதி உதவி வழங்கப்படும் அனைத்து கல்வி நிலையங்களிலும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீட்டினை வழங்க தொடர்ந்து செயலாற்றுமாறு இந்த அவை மைய அரசைக் கேட்டுக்கொள்கிறது. இந்த ஒதுக்கீட்டினை செயல்படுத்த ஓர் அவசரச் சட்டத்தினைக் கொண்டுவருமாறும் இந்த அவை ஆலோசனை வழங்குகிறது."

முற்பகல் 11-35

இந்தத் தீர்மானத்தில் ஒரு திருத்தத்தையும் சேர்த்து நான் முன்கூட்டியே படிக்கிறேன். திருத்தமாக அதோடு சேர்க்கப்படுகிறது இந்தப் பகுதி:

"மேலும் பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியமான சமூக நீதி வழங்கும் இட ஒதுக்கீட்டிற்கு எதிராகப் போராடும் மாணவர்கள் குறித்து உச்ச நீதிமன்றம் எச்சரித்த பிறகும், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. மன்மோகன் சிங் அவர்கள் பலமுறை வேண்டுகோள் விடுத்த பிறகும், சில ஆதிக்க சக்திகளின் தூண்டுதலினால் மாணவர்கள் தொடரும் போராட்டத்தைக் கைவிட்டு, அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என்றும் இந்த அவை கேட்டுக்கொள்கிறது."





இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிந்து, என்னுடைய சில கருத்துகளையும் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தத் தீர்மானம் சற்று காலதாமதப்பட்டு, நம்முடைய அவையிலே அல்ல, நாட்டிலேயே காலதாமதப்பட்டு வருவதைப் பற்றிய தீர்மானம் ஆகும். தமிழ்நாட்டில் ஏறத்தாழ 80 ஆண்டுகளுக்கு முன்னாலேயே தொடங்கப்பட்ட இட ஒதுக்கீடு என்ற கொள்கை, அகில இந்திய அளவில் டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய தலைமையிலே அரசியல் சட்டம் வகுக்கப்பட்ட அந்தக் காலகட்டத்தில், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு என்ற அளவுக்கு அது இடம் பெற்றது. ஆனால், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, இதர பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவது என்பது மத்திய அரசால் எளிதாக ஏற்றுக்கொள்ளப்படாமலே இருந்த ஒரு கொள்கை ஆகும். மண்டல் குழு அமைக்கப்பட்டு, அந்த மண்டல் குழு தந்த பரிந்துரைகள் மத்திய அரசால் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட முடியாமல் இருந்து, இந்தியாவினுடைய பிரதமராக மாண்புமிகு வி.பி. சிங் அவர்கள் அமர்ந்த அந்தக் காலகட்டத்தில் இந்தக் கொள்கையிலே உறுதிபடைத்த நம்முடைய தமிழகத்தினுடைய இன்றைய முதல்வர், கலைஞர் அவர்கள், அந்த மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென்று வி.பி. சிங் அவர்களை வற்புறுத்தியதன் காரணமாக, அவர்களும் அதனுடைய அவசியத்தை உணர்ந்து, அகில இந்தியாவிற்கும் செய்யப்படுகிற ஒரு சிறந்த முற்போக்குத் திட்டம் என்ற உணர்வோடு மண்டல் குழு பரிந்துரைகளை ஏற்று, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவதற்கு ஆணை வழங்கினார்கள். அதனால், சமூக நீதிக் காவலர் என்ற பெருமையும்கூட வி.பி. சிங் அவர்களுக்கு உரித்தானது. இந்தக் கொள்கையை முதன் முதலாக நிறைவேற்றியதன் காரணமாக தன்னுடைய ஆட்சியையே இழக்க நேரிட்டபோதும்கூட, வி.பி. சிங் அவர்கள், 'இந்த உயர்ந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நான் என்னுடைய ஆட்சியை இழந்தாலும்கூட அதை நான் பெரிதாகக் கருதவில்லை, என்னுடைய இந்தச் சாதனையைத்தான் நான் பெரிதாகக் கருதுகிறேன்' என்று தமது எண்ணத்தை வெளியிட்டார்கள்.

உண்மையாகவே இந்த நாட்டினுடைய வரலாற்றிலேயே தாழ்த்தப்பட்ட மக்கள் ஒருவகையான கொடுமைக்கு ஆளானார்கள் என்றால், பிற்படுத்தப்பட்ட மக்கள், இன்னொரு வகையான கொடுமைக்கு ஆளானார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் பள்ளிக்கூடம் இருக்கிற தெருவிலேயே நடக்கக் கூடாது; கோயில் இருக்கிற தெருப் பக்கமே நடக்கக் கூடாது. பிற்படுத்தப்பட்ட மக்கள், பள்ளிக்கூடத்திற்கு உள்ளே

வந்து படிக்கக் கூடாது என்ற நிலை இருந்தது. வெள்ளைக்காரன் ஆட்சி ஏற்பட்ட காரணத்தினாலேதான், பிற்படுத்தப்பட்ட மக்கள் பள்ளிக்கூட வாசற்படியிலே அடியெடுத்து வைத்து உள்ளே நுழையக்கூடிய வாய்ப்பைப் பெற்றார்கள். அதற்குப் பின்னர் ஓரளவு கல்வி கிடைத்த காரணத்தாலேதான், நீதிக் கட்சியினுடைய பெரிய தலைவர்கள் முதன்முதலாக சமுதாயத்திலே பின்தங்கி இருக்கிற மக்களுடைய உரிமையைக் காப்பாற்றுவதற்கு என்னென்ன வழி என்று எண்ணி, அதிலே ஒன்றாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் கல்வி நிலையங்களிலே இடம் கிடைப்பதற்கு வழி கண்டார்கள்.

தமிழ்நாட்டிலே ஓர் ஆணை, ஒரு காலத்திலே பிறப்பிக்கப்பட்டது. என்ன ஆணை என்றால், தாழ்த்தப்பட்ட மக்கள் சேர்ந்து படிக்க அனுமதிக்காத பள்ளிக்கூடங்களுக்கு அரசாங்கம் அங்கீகாரம் தராது என்று அறிவிக்கப்பட்டது. பல கிராமங்களிலே பிற்படுத்தப்பட்ட மக்கள்கூட பள்ளிக்கூடங்களுக்கு உள்ளே சென்று படிக்கக்கூடிய வாய்ப்பைப் பெறாத ஒரு காலம் இருந்தது. பள்ளிக்கூடம் இல்லாத காலம் நீண்ட காலம். பிற்படுத்தப்பட்ட மக்கள் கல்வியே பெறத் தேவையில்லை என்று வைதீக ஆணைகள் தமிழ்நாட்டிலே நிலவிய காலம் ஒன்று உண்டு. படிப்பதற்குரிய மொழியே சமஸ்கிருதம் மட்டும்தான் என்று மதித்த ஒரு காலம் இருந்தது. தமிழ் மொழியைப் படிக்கக்கூடிய பள்ளிக்கூடமே எங்கேயும் இல்லாத ஒரு காலம் இருந்தது. வேண்டுமானால், திண்ணைப் பள்ளிக்கூடத்திலே மனப்பாடமாக ஆத்திச்சூடி படித்தார்களே தவிர, வேறு எதையும் படிப்பதற்கு தனிப்பட்ட புலவர்கள் இடத்திலே தனித் தனியாகச் சென்று பயில்வதைத் தவிர, முறையான கல்வி, தமிழ்க் கல்வி, தமிழ்நாட்டில் நீண்ட நெடுங்காலம் இல்லை. எனவே, இவையெல்லாம் சேர்ந்து பிற்படுத்தப்பட்ட மக்களை பல்வேறு வகையிலே பாதித்துவிட்டது. இல்லையென்றால், அறிவாற்றலில் மனித இனத்தில் எந்த மனிதனும் தாழ்ந்த அறிவு உடையவனாகப் பிறப்பதில்லை. எந்த ஒரு தனிப்பட்ட குலத்தைச் சேர்ந்தவனும் அறிவிலே தாழ்ந்து இருப்பதாகச் சொல்வதற்கு எந்த ஆதாரமும் இல்லை. மிக மிகத் தாழ்ந்த குலத்திலேயிருந்து, மிகப் பெரிய genius–அறிவாளிகள் பிறக்கக்கூடிய நிலையும் உண்டு. மிக உயர்ந்த குலத்திலேயிருந்து சமையல் கலையிலேகூட வல்லவன் ஆகாதவனும் உண்டு. ஆகவே, பிறவியினாலே எவனும் தாழ்ந்தவன் அல்ல. ஆனால், நடைமுறையில் பிற்படுத்தப்பட்ட ஜாதியைச் சார்ந்தவனாக இருக்கிற காரணத்தாலேயே பல உரிமைகள் மறுக்கப்பட்டன, தடுக்கப்பட்டன. நாட்டில் வர்ணாஸ்ரம தருமக்



கொள்கை வேரூன்ற, வேரூன்ற, பலபேர் தங்களுக்கு இழைக்கப்பட்ட அந்த அநீதிகளிலிருந்து விடுதலைபெற முடியாதவர்களாகவே இருந்தார்கள். எனவே, இவற்றையெல்லாம் எதிர்த்து தமிழ்நாட்டில் ஒரு போராட்டம் நீண்டகாலம் நடைபெற்று, அதற்கு மக்களுடைய நல்லாதரவு கிடைக்கக்கூடிய அளவிற்கு தந்தை பெரியார் அவர்கள் அதை சுய மரியாதை இயக்கத்தோடு இழைத்து, சேர்த்து மக்களிடத்திலே பரப்பி, அதற்குப் பின்னர் பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட இயக்கத்தினுடைய உயர்ந்த நோக்கமாகவே, இலட்சியமாகவே அதை உருவாக்கி, அதற்கு பெருந்தலைவர் காமராஜர் முதலானோர் சமூக நீதி கிடைக்கிற அளவிற்கு, அந்த இயக்கத்தினுடைய கொள்கையை ஏற்றுக்கொண்டவர்களாக இருந்து தமிழ்நாட்டிலே ஒரு வரலாற்றையே ஏற்கெனவே நாம் படைத்திருக்கிறோம்.

*முற்பகல் 11–40*

அகில இந்திய அளவில் இந்தக் கொள்கைக்கு தகுந்த அளவிற்கு விளக்கம் தந்து, மக்களிடத்திலே அதை எடுத்துச் சொல்லி வாதாடுகிற தலைவர்கள் பலபேர் இல்லை. தென்னாட்டிலே இருந்தது போல— ஒரு காலத்திலே மராட்டியத்திலேகூட இருந்தது. மற்றொரு காலத்திலே மைசூரிலே இருந்தது. தமிழ்நாட்டிலே இருந்ததுபோன்று ஓரளவிற்கு கேரளத்திலே இருந்தது. ஆனால், வடக்கே அதிகமாக இந்தக் கருத்துகள், சமூக நீதிக்கான விளக்கங்கள் அதிக அளவிற்கு இடம்பெறவில்லை. அதனுடைய விளைவாகக்கூட இன்றைக்கும் மாணவர்களில் ஒரு சாரார் இந்த இட ஒதுக்கீட்டை எதிர்த்துப் போராடுகிற—அவர்கள், இட ஒதுக்கீட்டை எதிர்த்துப் போராடுகிறபோது ஏதோ தரம் குறைந்துவிடும், தகுதி குறைந்துவிடும், அதனாலே நம்முடைய பிள்ளைகள் மிகச் சிறந்த ஆற்றல் பெற்றவர்களாக இருந்து சமூகத்திற்கு ஆற்றுகிற பணி அதனாலே பாதிக்கப்பட்டுவிடும் என்ற ஒரு கருத்தைத் தெரிவிக்கிறார்கள். நான் அறிந்தவரையில், எல்லா அறிவாளிகளும் சமூகத்திற்குப் பயன்பட்டது இல்லை. மிக உயர்ந்த அறிவாளிகளாக இருப்பவர்கள் சமூகத்தை மறந்தவர்களாகவே இருந்திருக்கிறார்கள். மிகச் சாதாரண அறிவு கொண்டவர்கள்தான் சமூகத்தோடு தங்களை முழு அளவிலே ஒப்படைத்துக்கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவு என்பதைவிட, மனிதத் தன்மை என்ற வகையிலேதான் தகுதி உயர வேண்டும். அதைத்தான் நாம் மிகவும் மதிக்க வேண்டும். எனவே,

அடித்தட்டு மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், அவர்களிடத்திலே இருக்கக்கூடிய மனிதாபிமான உணர்வு, மனித நேய உணர்வு, மற்ற எந்த மனிதனையும் தன்னிடமிருந்து பிரித்துக் கருதாத அந்த உணர்வு, ஒதுக்கி வைக்காத உணர்வு, பிறரைப் பார்க்கிறபோது அவர்களைவிட தான் உயர்ந்தவன் என்ற மனப்பான்மை காரணமாக அவர்களை அசிங்கமாக எண்ணாத அந்த உணர்வு, தொடுவதற்குக் கூச்சப்படாத அந்த உணர்வு, அதுவேகூட அந்தச் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுடைய தகுதி, திறமையை உயர்த்தும் என்பதிலே சந்தேகம் இல்லை. இன்னும் சொல்லப்போனால், தாழ்த்தப்பட்ட, மிக மிகப் பின்தங்கிய சமூகத்திலே பிறந்தவர்கள், இந்த உலகத்திற்கு, நாட்டிற்கு, மக்களுக்கு எவ்வளவு பெரிய தொண்டு ஆற்றியிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது அவர்களுடைய தொண்டு மகத்தானது என்பது விளங்கும். மகாத்மா காந்திகூட மேல் ஜாதி அல்ல. டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்டவர். பெரியார் அவர்கள் தன்னை சூத்திரன் என்றுதான் உலகம் கருதுகிறது என்று சொல்லிக்கொண்டுதான் இந்தத் தொண்டிலே ஈடுபட்டவர்கள். அறிஞர் அண்ணா அவர்கள் தன்னை ஒரு சாமானியன் என்று சொல்லிக்கொண்டவர்கள். அவர் வழியிலேதான் கலைஞரும்கூட தன்னை இந்த அவையிலேயே நான் நான்காம் தர மக்களைச் சார்ந்தவன் என்று அறிவித்துக்கொண்டவர். எனவே, அந்த அடித்தட்டு மக்கள் அறிவாற்றல் பெற்று, சமூக மாற்றத்தை விளைவிக்கக்கூடிய நல்வாய்ப்பை உருவாக்குவதற்கு கல்வித் துறையிலேயும் அவர்களுக்கு நியாயமான இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். உயர் கல்வித் துறையிலே இருக்கின்ற உயர் கல்விக்காக இருக்கின்ற அந்த நிறுவனங்கள் தாழ்த்தப்பட்ட மக்களையும், மிக மிகப் பின்தங்கிய மக்களையும் உள்ளே அனுமதிக்காமல் இருக்கக்கூடிய ஒருவிதமான தகுதித் திரை என்னும் திரை இருக்குமானால் அந்தத் தகுதி, திறமை என்ற திரை கிழிக்கப்பட்டு, நீதி, நியாயம் என்ற திரை தொங்கவிடப்பட்டு, அவர்களுக்கு இட ஒதுக்கீடு சட்டப்படி வழங்குவதற்கு மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கிற அந்த முயற்சி தொடர்ந்து நடைபெற வேண்டும், அது வெற்றிகரமாக நடைபெற அதற்கான சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று இந்த அவையின் ஆதரவுடன் இந்தத் தீர்மானத்தின் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

முற்பகல் *11–4.5*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள்.





**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களால் முன்மொழியப் பெற்றிருக்கிற இந்தத் தனித் தீர்மானத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் முழு மனதோடு வரவேற்கிறேன்.

இங்கே மாண்புமிகு பேராசிரியர் அவர்கள், இந்தத் தீர்மானத்தினுடைய நோக்கத்தைப் பற்றியும், இந்தத் தீர்மானம் கொண்டு வரப்படவேண்டிய அவசியத்தைப் பற்றியும், இந்தத் தீர்மானத்திற்குரிய கருப் பொருளாக இருக்கிற இந்தச் சமுதாயத்திலே இருக்கிற ஏற்றத்தாழ்வுகள், அதனால் ஏற்பட்ட இடையூறுகள், அதன்மீது ஏற்பட்ட பாதிப்புகளைப் பற்றியெல்லாம் மிகச் சிறப்பாக இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இட ஒதுக்கீட்டுக் கொள்கை என்று சொல்கிறபோது நமது இந்தியாவிலே கிட்டத்தட்ட அது 80 ஆண்டுகளுக்கு முன்னதாகவே தோன்றிய ஒரு கொள்கை என்று சொல்லப்பட்டாலும், அது திரும்ப இந்திய அரசமைப்புச் சட்டத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக அறிவிக்கப்பட்டு, அது தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டுமே இட ஒதுக்கீடு என்ற கொள்கை இந்திய அரசமைப்புச் சட்டத்திலே உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்பு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, முற்படுத்தப்பட்டவர்களுக்கு என்ற இட ஒதுக்கீட்டுக் கொள்கையை உருவாக்குவதற்குரிய அந்தத் தொலைநோக்குப் பார்வையோடுகூடிய புதிய சிந்தனை, செயல்பாடுகளை, அதைச் சட்டமாக்கி இந்த நாட்டு மக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்குரிய முயற்சியை இந்தியாவிலேயே முதன்முதலாக எடுப்பதற்குரிய முயற்சியை எடுத்தது என்று சொன்னால், அது திராவிட முன்னேற்றக் கழகத்தைத்தான் சாரும் என்பது மறுக்க முடியாத ஒன்று.

இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிற மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், இந்தச் சமூக நீதிக் கொள்கையைப் பற்றிப் பேசுகிறபோது கடல் மடை திறந்ததைப் போன்று அவர்களும் பேசுவார்கள். அதையொத்தே பேராசிரியர் அவர்களும் சொன்னார்கள். அதைப்போலவே, நம்முடைய மூத்த அரசியல் கட்சி, திராவிட இயக்கத்தினுடைய பாரம்பரியம் மிக்க கட்சித் தலைவர்கள் எல்லாம் இந்தச் செய்திகளை பட்டிதொட்டியெல்லாம் பரவச் செய்த வரலாறு உண்டு. அப்படி இந்தச் செய்திகளைப் பற்றி இந்தத் தமிழக மக்கள் மிகப் பெரும் அளவிலே ஏற்றுக்கொண்ட காரணத்தினால்தான் தமிழகத்தினுடைய அரசியல் நீரோட்டம் என்பது தேசிய நீரோட்டத்திலிருந்து திராவிட இயக்கத்தினுடைய வரலாற்றிற்குரிய நீரோட்டமாக மாறி இருக்கிறது என்பது ஓர் அடிப்படையான கருத்து.

[திரு. வை. சிவபுண்ணியம்] [2006 மே 31

இதிலே, குறிப்பாக இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பற்றி தமிழகத்திலே பேசுகிறபோது, நாம் தலைநிமிர்ந்து பேசுவதற்குரிய வாய்ப்பினைப் பெற்றவர்களாக இருக்கிறோம் என்பதுதான் மகிழ்ச்சிக்குரிய ஒன்று. இந்தியாவிலேயே, தமிழகம் இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்காக அதற்குரிய சட்டங்களைச் செய்த மாநிலம். அதைப்போலவே, இரண்டாவதாக மகாராஷ்டிரா மாநிலத்தைச் சொல்லலாம். அதற்குப் பின்னாலே பல இடங்களிலே இந்தக் கருத்துகள் வந்திருக்கலாம்.

இங்கே மாண்புமிகு முன்னவர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதுபோல, இட ஒதுக்கீட்டுக் கொள்கையை அமல்படுத்துவதற்கான ஒரு திட்டத்தைத் தயாரிப்பதற்குரிய முன்முயற்சியாக மத்திய அரசின் சார்பிலே அதற்குரிய ஒரு தொலைநோக்குப் பார்வையோடு அந்தத் திட்டத்தை முன்வைத்து அதற்காக மண்டல் அவர்களுடைய தலைமையில் ஒரு Commission-ஐ அமைத்து அதற்குரிய தீர்வுகாணச் செய்வதற்குரிய மிகப் பெரிய முயற்சியை எடுத்தவர் மரியாதைக்குரிய முன்னாள் பாரதப் பிரதமர் வி.பி. சிங் அவர்கள் ஆவார்கள். இங்கே அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அநேகமாக சமூக நீதிக் காவலர் என்ற பெருமைக்குரியவராக அவர் இன்றைக்கும் விளங்கிக் கொண்டிருக்கிறார். ஆகவே, நமது தமிழக மக்களாலே மரியாதைக்குரிய வி.பி. சிங் அவர்கள் பாராட்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அது மிகையாகாது. அப்படிப்பட்ட சிறப்புக்குரியவர் அவர். அவர் அமைத்த இந்த மண்டல் குழுவினுடைய தீர்வின் அடிப்படையில்தான், இந்த 27 சதவிகித இட ஒதுக்கீட்டுக் கொள்கை அமல்படுத்தப்படுவதற்கான உத்தரவு போடப்பட்டது. ஆனால், அடுத்ததாக இந்தியாவினுடைய பாரதப் பிரதமராகப் பொறுப்பேற்றுக்கொண்ட மரியாதைக்குரிய நரசிம்ம ராவ் அவர்களுடைய காலத்திலே, அதிலே ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டது. அந்தத் திருத்தம் என்பதே அதற்குரிய தடைக் கல்லாக இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. குறிப்பாக, அவர் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையிலே பார்த்தால், creamy layer என்ற ஒரு புதிய கருத்தைப் புகுத்துவதற்கான முயற்சி எடுக்கப்பட்டுவிட்டது. அப்படியானால், பிற்படுத்தப்பட்டவர்களிலேயே வசதி வாய்ப்பு உள்ளவர்கள் எப்படியிருக்கிறார்கள், கல்வித் தரத்திலே மேம்பட்டவர்களாக, முதல் வகுப்பு, இரண்டாவது வகுப்பு நிலையிலே பணியாற்றக்கூடியவர்களுடைய அந்தக் குழந்தைகளுக்கு இந்த வாய்ப்பை அளிக்கக் கூடாது; இலட்ச ரூபாய்க்கு மேலே பெறுமானமுள்ள சொத்துகள் அதிகமாக இருக்கும்பட்சத்தில், அவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யக் கூடாது. ஒரு குறிப்பிட்ட சட்டத்திற்குட்பட்டு இருக்கக்கூடிய நிலத்தைத் தாண்டி



2006 மே 31] [திரு. வை. சிவபுண்ணியம்]

அவர்கள் கூடுதலாக நிலம் பெற்றிருந்தால், அவர்களுடைய குடும்பத்திற்கு இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கை பொருந்தாது என்பதைப் போன்ற, இந்தமாதிரியான உள் திருத்தங்களைச் சொல்லி, அதை creamy layer என்ற பெயராலே அதை அமல்படுத்துவதற்கான ஒரு Commission-ஐ அமைத்ததனுடைய விளைவாகத்தான் இந்த 27 சதவிகித இட ஒதுக்கீட்டுக் கொள்கை என்பது நடைமுறைப்படுத்த முடியாத ஓர் இக்கட்டான நிலைக்கு ஆட்பட்டிருக்கின்றது. ஆகவே, இதைத் திருத்தி, ஒரு புதிய வகையிலான சட்டத்தை உருவாக்க வேண்டுமென்று, மத்திய அரசாங்கம் முயற்சி எடுத்திருப்பது என்பது மிகச் சிறந்த, பாராட்டுக்குரிய ஒன்றாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-50

இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலமாக இந்த 27 சதவிகித இடஒதுக்கீடு என்பது அமல்படுத்தப்பட வேண்டும். இதற்கு முதன்முதலில் இந்தியா முழுவதிலும் எதிரான போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதை நடத்துவதற்கான முயற்சி எடுக்கின்றபோது, தேசிய அளவிலே இப்போது தலைநகர் டெல்லியிலே தினசரி போராட்டம், இந்தச் சட்டம் வரக்கூடாது என்று போராடிக் கொண்டிருக்கின்றார்கள். மருத்துவ மாணவர்களும், அதற்கு ஆதரவாக மருத்துவர்களும், மற்றவர்களும் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். இது எந்த வகையிலும் பொருத்தமில்லாத ஒன்று.

அதேநிலையிலே, தமிழகத்தை நாம் எண்ணிப் பார்க்கின்றபோது, இந்தப் போராட்டத்தை இங்கே வலுவாக நடத்திவிட முடியுமா என்றால், கண்டிப்பாக முடியாது. அதை நடத்த முடியாது என்பதற்குரிய காரணத்தை நான் அடக்குமுறைச் செய்தியாகச் சொல்லவில்லை. தமிழகம் என்பது தந்தை பெரியாருடைய கொள்கையை ஏற்று, பேரறிஞர் அண்ணா வழியில் வந்திருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே ஆண்டு கொண்டிருக்கின்ற காரணத்தாலே, (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட போராட்டங்களை இங்கே நடத்த முடியாது. அதுதான் இங்கேயிருக்கின்ற பெருமைக்குரிய ஒன்றாக நாங்கள் கருதுகின்றோம். ஆனால், அதையும் மீறிக்கூட இங்கே அதைக் கொண்டு வருவதற்கான சில தீய சக்திகள் அதற்கான முயற்சிகளை எடுக்கக் கூடும். ஆகவே, அந்த சக்திகளை இனம் கண்டு, அதற்குரிய காரியங்களை முறியடிப்பதற்கான முயற்சி எடுக்க வேண்டுமென்று சொன்னாலும், அதிலே இருக்கின்ற உண்மை நிலைகளையும், தேவையான

கருத்துகளையும் உணர்வுபூர்வமாக அவர்களுக்கு உணர்த்துவதற்கான முயற்சியாக, இந்த மாமன்றமே இப்படி ஒரு தனித் தீர்மானத்தை நிறைவேற்றுவது என்பது நம்முடைய தமிழ்நாட்டினுடைய சட்டமன்ற வரலாற்றிலேயே சிறப்புக்குரிய ஒன்றாக நாங்கள் கருதுகின்றோம்.

இந்தத் தீர்மானம் என்பது நமது மத்திய அரசாங்கம் இயற்றவிருக்கின்ற அந்தச் சட்டத்திற்கு மிகப் பெரிய வலுவாக, ஊன்றுகோலாக, ஆதரவாக, எல்லா வகையிலும் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய வாய்ப்பாக அமைவதற்காக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட இருக்கின்றது என்ற அந்த மகிழ்ச்சியான செய்தி நமது தமிழ்நாட்டு மக்களுக்கு சிறப்புக்குரிய ஒன்றாக நாங்கள் கருதுகின்றோம். அந்த வகையிலே, இந்தச் சட்டம் என்பது சிறப்புக்குரிய சட்டம். இந்தச் சட்டத்தின் மூலமாக 27 சதவிகித இட ஒதுக்கீடு மத்திய அரசாங்கத்தினுடைய உயர் கல்வி நிறுவனங்களிலே மர்ணவர்களுக்கும், மற்றவர்களுக்கும் வேலைவாய்ப்புகள் கிடைக்கச் செய்வதற்கான முயற்சியாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வரச் செய்வதற்கான ஒரு தீர்மானமாக நாம் செயல்வடிவம் கொடுத்து, அதற்கு மத்திய அரசாங்கத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து, இந்தச் சட்டத்தை நிறைவேற்றச் செய்வதற்குரிய உந்து சக்தியாக நமது தமிழக சட்டமன்றம் விளங்கி இருக்கின்றது என்று சொன்னால், எல்லாவற்றிலும் சிறப்புக்குரியதாக, சமூகக் கண்ணோட்டத்தை நிலைநாட்டுவதற்குரியதாக அதற்குரிய கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கின்ற ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட இருக்கின்றது என்பது மிகச் சிறப்புக்குரிய ஒன்று. எனவே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இந்தத் தீர்மானத்தை மனதார வரவேற்று, மத்திய அரசாங்கம் அதை விரைவாக இந்தக் கண்ணோட்டத்தின் அடிப்படையில், வருகின்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடரிலேயே இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

அதோடு, இந்தச் சட்டத்தை எதிர்ப்பதற்குரிய முயற்சியை எடுக்கின்றவர்களுக்கு அது எச்சரிக்கையாகவும் அமையும். அப்படிச் செய்கிறபோது, நான் பணிவான வேண்டுகோளாகக் கேட்டுக்கொள்வது, அதற்குரிய எதிர்ப்புகள் வருவது என்பது, அது ஒரு சாதாரண விஷயமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று சொன்னாலும், அதிலே ஆழமான உணர்வுகளை உள்ளடக்குகின்ற சக்திகள் தலையிடுகின்றன என்ற காரணத்தினாலே, அந்த உணர்வுகளைப் புரிந்துகொண்டு அதற்கு



ஏற்றார்போல தமிழகத்திலும் அந்த எதிர்ப்பு சக்திகளுக்கான போராட்டங்கள் தேவைப்படுமானால் அதை தலைவர் கலைஞர் அவர்களே தலைமையேற்று நடத்துவார்கள். அதற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுதுணையாக இருக்கும் என்ற அந்த உத்தரவாதத்தைச் சொல்லி, இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே முழுமனதோடு வரவேற்று அமைகின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர், நிதியமைச்சர், பேரவை முன்னவர் க. அன்பழகனார் அவர்கள் முன்மொழிந்துள்ள அரசினர் தனித் தீர்மானமாகிய இட ஒதுக்கீடு குறித்த தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்று அமைகின்றேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி.

*முற்பகல் 11–55*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர், இனமான பேராசிரியர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தனித் தீர்மானம் மற்றும் தனியார் சுய நிதிக் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு வேண்டுமென்ற அந்தத் தீர்மானத்தின் மீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துகளை நான் இங்கே கூற விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் பிறந்த பூமியில் சமூக நீதிக்குச் சோதனை வந்த காலமெல்லாம் மாறி, பெரியார் கொள்கை வெற்றி பெறுகிறது. அதிலும் குறிப்பாக எங்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் உயிர் மருத்துவர் அய்யா அவர்களின் மூச்சுக் கொள்கையான சமூக நீதிக் கொள்கை, இட ஒதுக்கீட்டுக் கொள்கை இன்று இந்த மாமன்றத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் இங்கே நிறைவேற்றப்படுகிறது என்பதைப் பெருமையோடு இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதிலும் குறிப்பாக, தந்தை பெரியார் பிறந்த மண்ணில் சமூக நீதிக்குச் சோதனை என்று குறிப்பிட்டதற்குக் காரணம், கடந்த ஆட்சி.

[திரு. ஜி.கே. மணி] [2006 மே 31

அந்த ஆட்சியில் இருந்தவர்கள் சமூக நீதி காத்த வீராங்கனை என்றெல்லாம் போற்றப்பட்டார்கள். ஆனால், அவர்களுடைய காலத்திலேதான் சமூக நீதி, சமூக நீதியின் பிறப்பிடமான தமிழ் மண்ணிலே குழி தோண்டிப் புதைக்கப்பட்டது என்பதையும் இங்கே சுட்டிக்காட்டி, குறிப்பாக, இந்தத் தனித் தீர்மானத்தில் முன்மொழியப்பெற்றிருக்கிற மண்டல் குழு பரிந்துரை, 1980 ஆம் ஆண்டு அன்றைய உள் துறை அமைச்சராக இருந்த திரு. பூட்டா சிங் அவர்களிடம் மண்டல் அவர்களுடைய தலைமையில் குழு பரிந்துரை செய்தது. அந்தப் பரிந்துரையிலே அவர்கள் சொன்னது, மண்டல் அவர்கள் அந்த அறிக்கையைக் கொடுத்துவிட்டு வெளியிலே வந்து சொன்னது, 'நம்முடைய கடமையை நாம் முறையாக நிறைவேற்றியிருக்கிறோம்; ஆனால், இந்த அரசு எங்கே இந்த அறிக்கையை தூங்குகிற அலமாரியிலே போட்டுவிட்டு, இதை நிறைவேற்றாமல் போய்விடுவார்களோ என்ற அச்ச உணர்வு எனக்கு இருக்கிறது. அதிலும் குறிப்பாக, காகா கலேல்கர் கமிஷன் குறிப்பிட்ட மாதிரி, 70 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கக்கூடிய இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு மட்டுமே வழங்குவதற்கு நாம் பரிந்துரை செய்திருக்கிறோம். இதுவும் நிறைவேறாமல் போய்விடுமோ என்ற அச்ச உணர்வு இருக்கிறது' என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே, இந்த மண்ணிலே, நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், சுதந்திரம் பெற்று 58 ஆண்டு காலம் ஆனாலுங்கூட, இந்திய அரசமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற அந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கை நிறைவேறவில்லை; அதற்கு எதிர்ப்பாக இங்கே கிளர்ச்சி வந்து கொண்டிருக்கிறது.

இப்போது 27 விழுக்காடு கேட்கிறோம். ஆனால், அன்று மண்டல் குழுவிற்கு முன்பு காகா கலேல்கர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அப்போதே சொல்லப்பட்ட நிலையை இங்கே நான் சொல்கிறேன். இது 1955-லே, அன்று ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவிலே சொன்னது, "In accordance with this provision, the Government of India constituted the First Backward Classes Commission popularly known as Kaka Kalelkar Commission by a Presidential order under Article 340 of the Constitution of India on 29th January 1955. Two of the most noteworthy recommendations of this Commission were ..." என்று சொல்லி, அந்த இரண்டு பரிந்துரைகளைச் சொல்கிறார்கள். அதிலே அவரால் சொல்லப்பட்டிருப்பது, முதல் பரிந்துரை "that to bring this people to the national mainstream, reservation of



2006 மே 31] [திரு. ஜி.கே. மணி]

70 per cent seats in all educational, technical and professional institutions for their qualified sons and daughters.." என்று. ஆக, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு காகா கலேல்கர் கமிஷனில் சொல்லப்பட்டிருப்பது 70 சதவீத இட ஒதுக்கீடு. மண்டல் அவர்கள் சொன்னது 70 விழுக்காடு கொடுக்கக் கூடியவர்களுக்கு 27 விழுக்காடு மட்டுமே என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், 70-க்கு 27 வழங்க மத்திய அரசு முன்வந்திருக்கிற இந்த வேளையில், தமிழ்நாட்டிலே மிகப் பெரிய போராட்டம். அதிலேதான் அவை முன்னவர் மாண்புமிகு இனமான பேராசிரியர் அவர்கள் திருத்தங்களையும் கொண்டுவந்து இங்கே முன்மொழிந்தார்கள்.

இப்படிச் சொல்லியிருக்கிற வேளையில், திரு. வி.பி. சிங் அவர்கள், வேலை வாய்ப்பிலே 27 விழுக்காடு என்று அறிவித்தார்கள். அதை நிறைவேற்றுவதிலே எவ்வளவு சங்கடங்கள்? நாடு முழுவதும் நடந்த கிளர்ச்சி நமக்குத் தெரியும், 1990-லே. அதற்குப் பிறகு தந்தை பெரியார் பிறந்த மண்ணிலேயிருந்து கல்விக் கொள்ளையர்கள், கல்வி வியாபாரிகள் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அந்த உச்ச நீதிமன்றத்தில் 2005 ஆம் ஆண்டு தீர்ப்பு. என்ன தீர்ப்பு தெரியுமா? இட ஒதுக்கீடு வேண்டும் என்று தனியார் கல்வி நிறுவனங்களில் அரசு இடங்களைக் கேட்கக் கூடாது என்று இட ஒதுக்கீட்டிற்கு, சமூக நீதிக்கு எதிர்ப்பான ஒரு தீர்ப்பை உச்ச நீதிமன்றம் அறிவித்தது. அந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்த இரண்டாவது நாள் ஒரு குரல் தமிழகத்திலேயிருந்து மேலோங்கியது. அந்தக் குரல் என்னவென்று சொன்னால், இட ஒதுக்கீடு வேண்டும், இந்த உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு மக்கள் உரிமைக்கும், சமூக நீதிக்கும் புறம்பானது. இந்திய அரசமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானது என்று சொல்லி தமிழ்நாட்டிலே, அதிலும் குறிப்பாகச் சென்னையில் சமூக நீதிக் காவலர் என்று போற்றப்படுகிற எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள் தலைமையில் சட்ட வல்லுநர்களான மரியாதைக்குரிய நீதியரசர் திரு. கே.எம். நடராஜன், இன்னும் பல நீதியரசர்களும், மூத்த வழக்கறிஞர்களான மாசிலாமணி போன்ற பல்வேறு மூத்த வழக்கறிஞர்களை எல்லாம் பங்கேற்கச் செய்து, இந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு எதிரானது; ஆகவே, உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு மாறாக அரசமைப்புச் சட்டத்தில் இருக்கிறவாறு இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீட்டை வழி வகுக்கக்கூடிய வகையில் நாடாளுமன்றத்திலே சட்டத் திருத்தங்கள் கொண்டு வரவேண்டும் என்கிற குரல் தமிழகத்திலேயிருந்து மருத்துவர் அய்யா அவர்களாலே முதன்முதலிலே இந்தியத் துணைக் கண்டத்திலே வலுப்பெற்றது.

*நண்பகல் 12–00*

அதற்கு அடுத்து அந்தக் குரலுக்கு வலு சேர்த்தவர் இன்றைய மாண்புநிறை தலைவர், மகத்தான தலைவர் முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய குரல். மூன்றாவது குரல் தமிழ்நாட்டிலேயிருந்து வந்தது திராவிடக் கழகத்தினுடைய தலைவர் மதிப்பிற்குரிய ஆசிரியர் வீரமணி அவர்களிடமிருந்து. இதுதான் முதல் குரல். இதற்குப் பிறகுதான் தமிழ்நாட்டினுடைய பல்வேறு இடங்களிலேயிருந்து வந்தது.

அதற்குப் பிறகு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் யாருக்கு வாக்களிக்கலாம் என்று ஆதிக்க வர்க்கத்தால் ஒரு துண்டுப் பிரசுரம் வழங்கப்பட்டது. அந்தத் துண்டுப் பிரசுரத்திலே சொல்லப்பட்டிருந்தது இன்று உயர் கல்வி நிறுவனங்களில் 90 விழுக்காடு இடம் முற்பட்டவர்கள், வசதி படைத்தவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். யாரால் இந்த இடம் கிடைத்திருக்கிறது என்று சொன்னால், ஆட்சியாளர்களாக இருந்த அ.இ.அ.தி.மு.க.-வால் கிடைக்கப்பட்டிருக்கிறது. அ.இ.அ.தி.மு.க. என்று குறிப்பிடுவதற்குக் காரணம், தனியார் கல்லூரிகளில் நூற்றுக்கு நூறு இடங்களை முன்னேறியவர்கள், வசதி படைத்தவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு அ.இ.அ.தி.மு.க. அரசு உறுதுணையாக இருந்து கொண்டிருக்கிறது. ஆக, நடைபெறக்கூடிய சட்டமன்றத் தேர்தலில்—தனியார் கல்லூரிகளை ஊக்குவித்துக் கொண்டிருப்பது நமக்கு வரப்பிரசாதம். அதனால் அ.இ.அ.தி.மு.க.-விற்கு வாக்களிக்க வேண்டும் என்ற குரல் வந்திருந்தது.

ஆக, முன்னேறியவர்கள் பேராசிரியர் பெருந்தகை அவர்கள் குறிப்பிட்டது மாதிரி, அந்த ஆதிக்க சக்திகள் இட ஒதுக்கீட்டிற்கு எதிராக அ.இ.அ.தி.மு.க.-விற்கு வாக்களிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். ஆகவே, இந்தச் சூழ்நிலையில் அ.இ.அ.தி.மு.க. அரசுக்கு ஒரு கடிதம் வருகிறது. என்ன கடிதம் தெரியுமா? இப்படித் தமிழ்நாட்டிலேயிருந்து குரல், இந்திய நாட்டின் பல மாநிலங்களிலிருந்து குரல் வந்த பிறகு, இந்திய அரசமைப்புச் சட்டத்திலே 93-வது திருத்தம் வருகிறது. அதன்படி இட ஒதுக்கீட்டிற்கு வழி வகுக்கப்படுகிறது. அதனடிப்படையில் மத்திய அமைச்சர் மாண்புமிகு அர்ஜுன் சிங் அவர்களாலே ஒரு கடிதம் எல்லா மாநில அரசுகளுக்கும், முதலமைச்சர்களுக்கும் எழுதப்படுகிறது. என்னவென்று சொன்னால், இந்த இட ஒதுக்கீட்டிற்கு வழி வகுத்திருக்கிற சட்டத் திருத்தத்தின்படி அந்தந்த மாநிலங்களின் நிலைமைக்கேற்ப மாநில அரசு இட ஒதுக்கீட்டை



வகுத்துக்கொள்ளலாம். இது ரொம்பப் பொருத்தமானது. ஏனென்றால், ஒவ்வொரு மாநிலத்தின் மக்கள் தொகையில் வேறுபாடு இருக்கிற காரணத்தினாலே மத்திய அமைச்சரவை, மாண்புமிகு அர்ஜுன் சிங் அவர்கள் இந்தக் கடிதம் எழுதுகிறார். இந்தக் கடிதத்திற்குப் பிறகு தமிழ்நாட்டிலேயிருந்து ஒரு பதிலும் வரவில்லை. அன்று நாங்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள். சட்டமன்றத்திலே பேசினோம். எது எதற்கோ அவசரச் சட்டம் கொண்டு வந்த, சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்திய அன்றைய முதலமைச்சர் இதை வற்புறுத்தியும், பேசியும்கூட எடுத்துக்கொள்ளவில்லை. கிடப்பிலே போட்டுவிட்டார். அதற்குப் பிறகு, உடனடியாக பஞ்சாப் மாநிலத்திலேயிருந்து முதல் ஆதரவுக் கடிதம். ஆந்திர மாநிலத்திலேயிருந்து இரண்டாவது, மூன்றாவதாக கர்நாடக மாநிலத்திலிருந்து, தொடர்ந்து மராட்டிய மண்ணிலேயிருந்து ஓர் அவசரச் சட்டமும் கொண்டு வரப்பட்டது. அதற்குப் பிறகு, தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சரான பிறகுதான் இன்று அதற்கு ஆதரவாக இங்கே சட்டமுன்வடிவு வந்திருப்பது நமக்கெல்லாம் பெருமையாக இருக்கிறது. ஆகவே, சமூக நீதிக்கு எதிராக மத்திய அரசின் கடிதத்திற்குப் பதில் கொடுக்காத, அந்தத் திட்டத்தை நிறைவேற்றாத ஓர் அரசாக, அன்றைய அரசு இருந்தது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டுகிறேன்.

*பிற்பகல் 12–05*

அதைத் தொடர்ந்து கடந்த வாரம், மத்திய அரசுக்குச் சொந்தமான அந்த I.I.T., I.I.M., போன்ற உயர்க் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு வேண்டும் என்று மத்திய அரசு பொறுப்பேற்றிருக்கிற ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டணிக் கட்சித் கூட்டத்திலேதான், அந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தமிழ்நாட்டிலேயிருந்து சென்ற மருத்துவர் அய்யா அவர்கள் தமிழ்நாட்டின் சார்பாக ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அந்தக் கருத்து நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களால் வலுப்பெற்றது. நிறைவேறக்கூடிய சூழ்நிலைக்கு வந்திருக்கிறது என்பதை இங்கே பெருமையோடு சுட்டிக்காட்டுகிறேன்.

அன்று வந்த செய்தியை நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் ஒப்புதலோடு காண்பித்துவிட்டு, இங்கே அதைச் சுட்டிக்காட்டிப் படிக்கிறேன். அந்தச் செய்தி தினமணி நாளிதழிலே 24 ஆம் தேதி வந்தது. அதிலே தலைப்பு, "ராமதாஸ் ஆவேசம்; தில்லியில் மாறியது

[திரு. ஜி.கே. மணி] [2006 மே 31

காட்சி" "புதுதில்லி மே 24: பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு அளிக்கும் பிரச்சினையில், பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் எஸ். ராமதாஸ் தில்லி தலைவர்களிடம் காட்டிய ஆவேசம் காரணமாக நிலைமை தலைகீழாக மாறியது. அதன்மூலம், 27 சதவீதம் இட ஒதுக்கீடு அளிப்பது எனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

பிரதமரின் இல்லத்தில் செவ்வாய்க்கிழமை காலை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடந்தது. அதில் இட ஒதுக்கீடு தொடர்பாக ஒரு திட்டத்தை முன்வைத்தார் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி.

அதாவது, படிப்படியாக இட ஒதுக்கீட்டை அமல்படுத்தலாம் என்றும், பிற்படுத்தப்பட்டோரில் வசதி படைத்தவர்களுக்கு இந்த ஒதுக்கீட்டிலிருந்து விலக்கு அளிக்கலாம் என்றும் அவர் யோசனை சொன்னார்." இது பிரணாப் முகர்ஜி சொன்னது. அதுதான் creamy layer. "அந்தத் திட்டத்தைப் படித்துப் பார்த்த ராமதாஸ், 'இதை நிச்சயமாக ஒருபோதும் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். 27 சதவீதம் இட ஒதுக்கீடு அளிக்க உடனடியாக அவசரச் சட்டம் கொண்டு வந்தே ஆக வேண்டும்' என்று மிகுந்த ஆவேசமாகப் பேசினார்.

அவரது உரத்த குரலைக் கேட்ட தலைவர்கள் ஒரு நிமிடம் அதிர்ச்சி அடைந்தனர். அந்த நேரத்தில், நாடாளுமன்றம் செல்வதற்காக அக்கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டிய நிலை வந்தது.

அப்போது காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி அம்மையார் ராமதாஸை அழைத்து 'நீங்கள் கோபப்பட வேண்டாம். இந்தப் பிரச்சினை பற்றி மாலையில் விரிவாக விவாதிக்கலாம்' என்று கூறி அவரை சமாதானப்படுத்தினார்.

வெளியில் வரும்போதே, லாலு பிரசாத் யாதவ் உள்பட பல தலைவர்கள் ராமதாஸிடம், 'உங்களுக்குத்தான் ஆதரவு' என்றனர்.

ராமதாஸ் மதிய உணவுக்கு வரும்போதே — முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய பெயர் இருக்கிறது — முதல்வர் கலைஞரைத் தொடர்புகொண்டு பேசினார். உடனே பிரதமரைத் தொடர்புகொண்டு பேசி, அவசரச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்று கூறுங்கள் என்று தலைவர் கலைஞர் அவர்களிடத்திலே ராமதாஸ் கேட்டுக் கொண்டார்.



2006 மே 31] [திரு. ஜி.கே. மணி]

சாப்பிட்டுக்கொண்டிருந்த நேரத்தில் பிரதமர் அலுவலகத்தில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. பிற்பகல் 3 மணிக்கு ராமதாஸை பிரதமர் சந்திக்க விரும்புகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, பிரதமரைச் சந்தித்தார் ராமதாஸ். அப்போது பிரணாப் முகர்ஜியின் திட்டத்தை மீண்டும் கூறி அதைப் பற்றி விளக்கம் சொல்ல முயன்றார். ஆனால், ராமதாஸ் தனது முடிவை மாற்றிக்கொள்ளத் தயாராக இல்லை. அவரைச் சமாதானப்படுத்திய பிரதமர், மாலையில் சுமுகத் தீர்வு காண முயற்சிக்கலாம் என்று கூறினார்.

அதன்பிறகு, இடதுசாரிக் கட்சித் தலைவர்களைத் தனியாகச் சந்தித்துப் பேசிய ராமதாஸ், அவர்களது முழுமையான ஆதரவைக் கோரினார்.

மாலையில் நடைபெற்ற கூட்டத்தில், பிரகாஷ் காரத், சீதாராம் யெச்சூரி, பரதன், டி. ராஜா ஆகிய இடதுசாரிக் கட்சித் தலைவர்கள் எல்லோரும் ராமதாஸின் நிலைக்கு ஆதரவு தெரிவித்தனர். மற்ற தலைவர்களும், ராமதாஸ் சொல்வது சரிதான் என்று அவரது நிலையைச் சுட்டிக்காட்டிப் பேசினர்.

சுமார் மூன்று மணி நேரத்துக்கும் மேலாக காரசாரமான விவாதம் நடைபெற்றது. அரசு தனது நிலையில் இருந்து பின்வாங்கினால் மிக மோசமான விளைவுகள் ஏற்பட்டுவிடும் என்றும் ராமதாஸ் தனது அச்சத்தை வெளியிட்டார்.

இறுதியாக, மத்திய அரசின் உயர் கல்வி நிறுவனங்களில் 27 சதவீதம் இட ஒதுக்கீடு அளிக்க ஒப்புக்கொள்ளப்பட்டு, தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. கூட்டம் முடிந்து வெளியே வரும்போது, அமைச்சர் தயாநிதி மாறனின் செல்போன் மூலம் ராமதாஸைத் தொடர்பு கொண்ட முதலமைச்சர் கலைஞர், 'இப்போது மகிழ்ச்சிதானே?' என்று கேட்டார். 'இது பெரிய வெற்றி, மிகுந்த மகிழ்ச்சி' என்றார் ராமதாஸ்". (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–10

ஆக, அந்த நிலைமையை இங்கே சுட்டிக்காட்டியதற்குக் காரணம், இந்த 27 சதவிகித இட ஒதுக்கீடு மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் வருகின்ற வேளையில், மத்திய அரசிலே இருந்த ஒருசிலரால், சில ஆதிக்கச் சக்திகளின் துணையோடு அங்கே

பிற்படுத்தப்பட்டோரில் முன்னேறியவர் என்ற Creamy layer முறை புகுத்துவதாக இருந்தது. அந்த Creamy layer என்பது சாதாரண ஒரு கடைநிலை ஊழியர், அலுவலக உதவியாளர் அல்லது குறைவான சம்பளம் பெறக்கூடியவர் என்று சொன்னாலும்கூட, அவர் சம்பளத்தின் வாயிலாக ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெறுகின்றபோது, அவர் பிற்படுத்தப்பட்ட சாதியிலே பிறந்திருந்தாலும் இந்த இட ஒதுக்கீட்டுச் சலுகைகளை அனுபவிக்க முடியாது. ஆகவே, அப்படிப்பட்ட நிலை பிற்படுத்தப்பட்டவர்களிலேயே முன்னேறியவர் என்ற நிலையை உருவாக்கி, பொருளாதார அளவுகோல் என்ற காரணத்தால் இந்தச் சமூக நீதிக்கு பங்கம் ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தால்தான், மருத்துவர் அய்யா அவர்கள் கொதித்துப் போனார்கள். அப்படிக் கொதித்துப் போனதற்கு ஆதாரமாக, அச்சாரமாக இதை வென்று எடுக்கக் காரணமாக, பேருதவியாக இருந்தவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இங்கே நான் பெருமையோடு மீண்டும் ஒரு முறை சுட்டிக்காட்டுகிறேன்.

மத்திய அரசால், அந்தத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவசரச் சட்டம் கொண்டு வருவதற்குக் காரணம் தந்தை பெரியார் பிறந்த பூமியான தமிழகத்திலே இருந்த மருத்துவர் அய்யா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் என்பதை இங்கே நான் மீண்டும், மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இந்தச் சூழ்நிலையில் இந்தத் தீர்மானத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே முழு மனதோடு வரவேற்கிறேன், பாராட்டுகிறேன் என்பதைச் சொல்லி, அதேவேளையில் மத்திய அரசு சொன்ன, தமிழ்நாட்டிலே இருக்கிற, சுயநிதி தனியார் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு இல்லாமல் இருந்து வந்தது. உச்ச நீதிமன்றம் அவர்களுக்கு ஆதரவாக இருந்தது. அந்த அடிப்படையில் 93-வது சட்டத் திருத்தத்தின்படி, அன்றைய அரசு கிடப்பிலே போட்டு இருந்தாலும்கூட, அதையெல்லாம் தட்டி எழுப்பி மீண்டும் ஒதுக்கப்பட்ட மக்களான, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, மிகப் பிற்படுத்தப் பட்டவர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு வழங்கக்கூடிய வகையில், இந்தச் சட்டமன்றத்தில் சட்டம் கொண்டு வந்திருப்பதை, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அதையும் வரவேற்று, பாராட்டி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.





**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் பேராசிரியர் அவர்களினுடைய, இடஒதுக்கீட்டை வலியுறுத்தி வரவேற்றிருக்கின்ற, தமிழக சட்டப் பேரவையினுடைய இந்தத் தீர்மானத்தினை வழி மொழிந்து, காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில கருத்துகளை இந்த அவையிலே பதிவு செய்ய வாய்ப்புத் தந்த தங்களுக்கு நான் முதலில் நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

ஒரு மிகப் பெரிய சமூக நீதியினுடைய வரலாற்றில், ஒரு முக்கியமான மைல் கல்லாக இன்றையதினம் மத்திய அரசு, தனியார் கல்வி நிறுவனங்களை, மத்திய அரசின் கல்வி நிறுவனங்களை, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் திறந்துவிட்டிருக்கிறது. மண்டல் கமிஷனுடைய சிபாரிசை அன்றையதினம் அரசு ஏற்றுக் கொண்டாலும்கூட, அரசு வேலைவாய்ப்புகளில் மட்டுமே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு இருந்தது. கல்வி நிலையங்களில் அந்த இட ஒதுக்கீடு தரப்படவில்லை. டாக்டர் கலைஞர் அவர்கள் 9 ஆண்டுகளுக்கு முன்பே கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு வேண்டும் என்று பதிவு செய்த வரலாற்றை எல்லாம் இங்கே நான் வைத்திருக்கிறேன். ஆனால், நேரமின்மை காரணமாக, அவற்றையெல்லாம் விரிவாகச் சொல்ல முடியவில்லை.

இன்றையதினம், மத்திய அரசு கையிலே இருக்கின்ற மத்திய அரசுக் கல்வி நிறுவனங்களான Indian Institute of Management—I.I.M,. I.I.T.—Indian Institute of Technology இதைப்போன்ற முதல் தரக் கல்வி நிறுவனங்களிலே ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்கிற கோரிக்கைக்கு, அரசு இன்று ஒரு வடிவம் கொடுத்து, அந்த நிறுவனங்களுடைய கதவுகளைத் திறந்துவிட்டிருக்கிறது. எதற்காக இந்த இட ஒதுக்கீடு என்று சிலர் கேட்கிறார்கள்? இன்னும் சிலர் இந்த இட ஒதுக்கீட்டின் காரணமாக திறமையும், தகுதியும் பாழாகிவிடாதா என்று கேட்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் நாம் ஓர் உதாரணத்தைத்தான் சொல்ல முடியும்.

பிற்பகல் 12–15

1927-லிருந்து இட ஒதுக்கீட்டை பல்வேறு கட்டங்களில் பின்பற்றி சமூக நீதியினுடைய அத்தனை பரிசோதனைகளுக்கும் தன்னைத்தானே சோதனைச் சாலையாக உட்படுத்திக்கொண்ட தமிழகம்தான் அதற்கு முன்னுதாரணமாக இருக்க முடியும். இந்த இட ஒதுக்கீட்டைப் பின்பற்றி

வந்ததினால் இன்று தமிழகத்தில் இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் மிகப் பெரிய பதவிகளிலே, படிப்புகளிலே நின்று மிகத் திறமை வாய்ந்தவர்களாக தங்களை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். எந்தத் தகுதிக்கும், எந்தத் திறமைக்கும் இந்த இட ஒதுக்கீட்டினால் பங்கம் வரவில்லை என்பதற்கு இந்தியாவிலே இருக்கின்ற ஒரே உதாரணம் தமிழகம்தான். இன்று இட ஒதுக்கீட்டுக்கு அகில இந்திய அளவிலே எல்லா அரசியல் கட்சிகளிடையேயும் ஓர் ஒருமித்த கருத்து உருவாகியிருக்கிறது என்று சொன்னால், அதற்கு தமிழகம்தான் வழிகாட்டி என்பதை நாம் பெருமையோடு சொல்லிக்கொள்ள முடியும்.

இன்றைக்கு இதே போராட்டம் டெல்லியிலே நடக்கிறது, இதே போராட்டம் பெங்களூரிலே நடக்கிறது. ஆனால், இட ஒதுக்கீட்டை எதிர்க்கின்ற போராட்டம் தமிழகத்திலே ஏன் நடக்கவில்லை என்று கேட்கின்றபோது எல்லோரும் சொல்கிறார்கள், இங்கேதான் பெரியார் பிறந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கேதான் தலைவர் காமராஜர் வாழ்ந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கேதான் கலைஞர் போராடினரார். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கேதான் அண்ணா வாழ்ந்தார் என்கிற அந்தச் சரித்திரம். கட்சிகளைக் கடந்து இங்கே இருக்கின்ற இந்த மண்ணும், இந்த மண்ணின் குணமும், இந்த மண்ணின் பண்பாடும் இந்தச் சமூக நீதியினுடைய நியாயத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய மனப் பக்குவத்திற்கு ஏறக்குறைய ஒரு 70 ஆண்டுகாலப் போராட்டச் சரித்திரம் இருக்கிறது என்பதுதான் அதற்கு மிகப் பெரிய காரணம். எனவேதான், இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிட இந்திய மாநிலங்களிலேயே எந்த மாநிலத்திற்கு அதிக தகுதி இருக்கிறது என்று சொன்னால், இன்று டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற தமிழகத்திற்குத்தான் அதிக தகுதி இருக்கிறது என்று நான் கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று இந்தத் தீர்மானம் வேண்டுமென்று நாங்கள் கேட்டோம். காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக இருக்கின்ற அண்ணன் சுதர்சனம் அவர்கள் இந்தத் தீர்மானம் வேண்டுமென்று கலைஞர் அவர்களிடம் கேட்டார்கள். இன்று இந்தத் தீர்மானம் வந்திருக்கிறது. நாங்கள் உள்ளபடியே வரவேற்கிறோம்.

நான் ஒரே ஒரு தகவலை மட்டும் சொல்லி, இந்த அவையிலே எதற்காக தீர்மானம் வேண்டுமென்பதற்காக, ஒரே ஒரு புள்ளிவிவரத்தை மட்டும் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். சென்னையிலே ஒரு



I.I.T. இருக்கிறது. Indian Institute of Technology சென்னையிலே இருக்கிறது. இதிலே 450 துறைத் தலைவர்கள் இருக்கிறார்கள். Heads of Departments. இந்த 450 துறைத் தலைவர்களில் 2 பேர் மட்டுமே தாழ்த்தப்பட்டவர்கள். 50 பேர் மட்டுமே பிற்படுத்தப்பட்டவர்கள். அங்கு தலித் பழங்குடியினர் இடஒதுக்கீடு 22.5 சதவிகிதத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தியிருந்தால், 105 இடங்களுக்கு தலித் பழங்குடியினர் பிரதிநிதித்துவம் இருந்திருக்க வேண்டும். 27 சதவிகித இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தியிருந்தால், 121 பேருக்கு மேல் பிற்படுத்தப்பட்டோர் இருந்திருக்க வேண்டும். சென்னையிலே இருக்கின்ற I.I.T.–ல் இட ஒதுக்கீடு இல்லாத காரணத்தினால், 450 துறைத் தலைவர்கள், Heads of Departments, Professors —இந்தப் பள்ளியிலே படித்துப் போகிற மாணவர்களுக்கு என்ன சம்பளம் தெரியுமா? 15 நாட்களுக்கு முன்னால் Times of India–லே அந்தத் தகவலை வெளியிட்டிருந்தார்கள். நம்முடைய Indian Institute of Management–ல் படித்த ஒரு மாணவனுக்கு ஆண்டு ஒன்றுக்கு சம்பளம் one million dollar. நாமெல்லாம் இதை கற்பனை செய்து பார்க்க முடியுமா? ஒரு மாணவனுடைய முதல் துவக்கச் சம்பளமே ஒரு வருடத்திற்கு one million dollar என்று சொன்னால், அந்த நிலை, என்று தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அந்தக் கதவு திறக்கப் போகிறது? இன்று அறிவியல் முன்னேற்றம் இந்தியா முழுவதையும் தழுவியிருக்கிறது. பெங்களூரைச் சுற்றி, சென்னையைச் சுற்றி, ஹைதராபாத்தைச் சுற்றி, மிகப் பெரிய I.T. Centres — Information Technology Centres, அங்கே வேலை பார்க்கிற இளைஞர்களைப் போய் பாருங்கள். எத்தனை பேர், அந்த நிறுவனங்களிலே ஆயிரக்கணக்கான பேர் வேலை செய்கிறார்கள். ஒவ்வொருவரும் சம்பளத்தைத் துவக்குகின்றபோதே இலட்சம் ரூபாய்க்கு சம்பளம் வாங்குகிறார்கள். அவர்களிலே பிற்படுத்தப்பட்டவர்கள் எத்தனை பேர், தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர், ஒடுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் என்று அங்கு வேலையைவிட்டு வெளியே வருகின்றபோது வாசலில் நின்று எண்ணிப் பார்த்தால் நமக்குத் தெரியும் இந்த இட ஒதுக்கீட்டினுடைய அவசியம்.

என்னுடைய சொந்த வாழ்க்கையில் ஓர் அனுபவம் உண்டு. 1971–ல் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சர். நான் சட்டக் கல்லூரி மாணவர் பேரவையினுடைய பொதுச் செயலாளராக இருந்தேன். ஒரு மாணவர் போராட்டம். அண்ணன் துரைமுருகன் அவர்களுக்குத் தெரியும். நாங்கள் இரண்டு பேரும் அணி மாறி பல சண்டைகள் போட்டிருக்கிறோம். தலைவர் கலைஞர் அவர்கள் எங்களை அழைத்துப்

பேசினார். சென்னை மாவட்டத்திலே இருக்கின்ற மாணவர் தலைவர்களை அழைத்துப் பேசினார். பேசுவதற்கு முன்னாலே ஒரு கேள்வி கேட்டார். நாங்கள் 20 பேர் அன்றிருந்தோம், முதலமைச்சர் அறையிலே. நேற்று நடந்ததுபோல இன்னும் நினைவுகள் எனக்குப் பசுமையாக இருக்கின்றன. அவர் எங்களிடம் கேட்டார், எங்கள் கோரிக்கைகளை எல்லாம் ஏற்றுக்கொண்ட பிறகு எழுந்திருந்தோம், எல்லோரும் போய் வருகிறோம் என்று சொல்லி எழுந்தோம். உடனே, உட்காருங்கள் என்று சொல்லிவிட்டு அவர் கேட்டார், உங்களில் எத்தனை பேர் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று கேட்டார். நாங்கள் எல்லோரும் கை தூக்கினோம். உங்களில் யாராவது முற்படுத்தப்பட்ட மாணவர்கள் இருக்கிறர்களா என்று கேட்டார். ஒருவரும் இல்லை. அவர் சொன்னார், நீங்கள் எல்லோரும் கல்லூரிக்குப் போக வேண்டும், சட்டம் படிக்க வேண்டும், புகழ்பெற்ற வழக்கறிஞர்களாக வரவேண்டும் என்று பெருந்தலைவர் காமராஜரும் நானும் தெருவெல்லாம் போராடினோம். நீங்கள் வீணாக, தேவையற்ற விஷயங்களுக்குப் போராடி கல்வி வாய்ப்பை இழந்துவிடாதீர்கள் என்று சொன்னார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–20*

இதை எதற்கு நான் இங்கே நினைவுகூர்கிறேன் என்று சொன்னால், இப்படியொரு நீண்ட நெடிய சரித்திரத்தை, ஒரு மனப் பக்குவத்தை தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை அறிவியல் ரீதியாகச் சிந்திக்கச் செய்து, அறிவுபூர்வமாக அணுகச் செய்து, உலகினுடைய முன்னேற்றத்தின் தாழ்வாரங்களைத் திறந்துவிடுவதற்கு இட ஒதுக்கீடு மிகப் பெரிய அவசியம் என்பதைத்தான் இன்று சொல்கிறோம்.

இன்று இந்தப் பேரவையில் நம்முடைய அருமைக்குரிய நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர் அண்ணன் மணி அவர்கள் சொன்னதுபோல, தமிழகத்தினுடைய தலைவர்கள் முன்னின்று எடுத்த வெற்றிகரமான ஒரு சமூக நீதியினுடைய சாதனை, இந்தச் சாதனை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

நான் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இந்தப் போராட்டத்தைத் தொடந்து முன்னெடுத்துச் சென்ற டாக்டர் ராமதாஸ் அவர்களுக்கும் *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்று மத்தியிலே ஆளுகின்ற பொறுப்பை ஏற்று, மிகப்பெரிய எதிர்ப்புகளை, பத்திரிகைகள் உருவாக்கி வைத்திருக்கிற எதிர்ப்பைப் பார்த்தால் நமக்கே பயமாக இருக்கிறது. ஒன்று மட்டும்





நிச்சயம். டில்லியிலே மருத்துவ சேவையே ஸ்தம்பித்து நிற்கிறது. நீங்கள் ஒன்றை மட்டும் இதில் உணர்ந்துகொள்ள வேண்டும். அப்போது அங்கே இருக்கின்ற அத்தனை டாக்டர்களும் முற்போக்கு சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்றுதானே அர்த்தம்? அந்தப் போராட்டம் நியாயமில்லை என்று சொல்வதற்குக்கூட அங்கே பிற்படுத்தப்பட்டவர்கள் இல்லையே? 60 ஆண்டுகள் சுதந்திரத்திற்குப் பிறகு, தலைநகரில் இருக்கின்ற மிகப்பெரிய மருத்துவ நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டிற்கு எதிராக ஒரு போராட்டம் நடத்தி, தலைநகரிலே இருக்கின்ற மருத்துவ «ê¬ õ¬ ò«ò â¾ halt, ஒரு grinding halt, ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடிகிறது என்று சொன்னால், அந்த மருத்துவ, அந்த விஞ்ஞான உலகத்திற்குள்ளே எவ்வளவு பெரிய ஆதிக்க சக்தி இருக்கிறது? எத்தனை ஆண்டுகாலமாக நாம் போராடிப் பெறவேண்டிய உரிமையை இழந்திருக்கிறோம்? அந்தப் போராட்டம் தவறு என்று சொல்வதற்குக்கூட அங்கே டாக்டர்கள் இல்லையே, பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்களிடம். இதுதான் வித்தியாசம். அதே போராட்டம் ஏன் சென்னையிலே வரவில்லை? அப்படியொரு போராட்டம் சென்னை மருத்துவக் கல்லூரியிலே நடக்கும் என்று சொன்னால், எத்தனை பிற்படுத்தப்பட்ட டாக்டர்கள் அதற்கெதிராகக் குரல் கொடுத்திருப்பார்கள்? எனவேதான், இட ஒதுக்கீடு அவசியம் என்று சொல்கிறோம். இப்பொழுதாவது வந்ததே இந்த இட ஒதுக்கீடு.

அந்த இட ஒதுக்கீட்டை ஆதரிக்கின்றபோது இன்று நம்முடைய அருமைக்குரிய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் சகோதரர் மணி அவர்கள் குறிப்பிட்டார்கள். நம்முடைய கூட்டணிக்குள்ளேயே சில எதிர்ப்புகளெல்லாம் இருந்தன என்று சொல்லி. இது ஒன்றும் புதிதல்ல. ஆனால், இவை எல்லாவற்றையும் மேல் வாங்கி, இதைச் சட்டமாக நிறைவேற்றக்கூடிய அரசியல் தைரியம் இன்று மத்தியிலே ஆளுகின்ற பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கும் இருக்கிறது, *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்று அதை வழி நடத்திச் செல்கின்ற அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும் இருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இன்று காலையிலே பத்திரிகைகளைப் படிக்கும்போது நாம் பார்க்கிறோம், ஒரேயொரு கட்சிக்குள்ளேதான் குழப்பம் இருக்கிறது. நேற்றையதினம் கூடிய பா.ஜ.க.-வினுடைய தலைமைச் செயற் குழுவிலே நடுநிலை வகிக்கப் போவதாக முடிவு எடுத்திருக்கிறார்கள், இட ஒதுக்கீட்டிற்கு எதிராக. அப்போது, இது எங்கேயிருந்து இந்த யுத்தம் ஆரம்பிக்கிறது என்பதற்காக நான் இதைச் சொல்கிறேன்.

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2006 மே 31

நேற்றுமுன்தினம் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுக்கிறார்கள். சிறுபான்மை மக்களுக்கு இட ஒதுக்கீடுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்கின்றபோது, அவர்கள் மனமுவந்து அதை ஆதரிக்கிறேன் என்று சொல்லத் தயாராக இல்லை. அரசு கொண்டு வரட்டும், அப்போது என் நிலையைச் சொல்கிறேன். அவர் சொன்ன பதில். அரசு அந்தத் தீர்மானத்தினைக் கொண்டு வரட்டும். நடவடிக்கை எடுக்கட்டும், அப்போது நான் சொல்கிறேன் என்றுதான் சொல்கிறார்களேயொழிய, சிறுபான்மை மக்களுக்கு இட ஒதுக்கீட்டை நான் ஆதரிக்கிறேன் என்று சொல்லத் தயாராக இல்லை. எனவே, இந்த இட ஒதுக்கீட்டினுடைய நியாயத்தை ஆதரிக்கின்ற அதே நேரத்திலே நான் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு ஒரு கோரிக்கையை வைக்க ஆசைப்படுகின்றேன்.

சிறுபான்மை மக்களுக்கான இட ஒதுக்கீட்டிற்கான பூர்வாங்க ஏற்பாடுகளையும் நீங்கள் துவங்க வேண்டும். அதற்காக ஒரு economic survey எடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். சிறுபான்மை மக்கள் மத்தியில் பின் தங்கியவர்கள் யார் என்பதை அதிகாரபூர்வமாக ஓர் ஆணையம் நியமித்து — அந்த ஆணையம் விசாரணை செய்து அவர்களுடைய backwardness, அவர்களுடைய பிற்படுத்தப்பட்ட தன்மையை நிரூபித்தால்தான் அவர்களுக்கு இட ஒதுக்கீடு செல்லும் என்று உச்ச நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. அந்த ஆணையத்தை நீங்கள் நியமனம் செய்து — அந்த சர்வே எடுப்பதற்கான ஏற்பாடுகளை நீங்கள் செய்ய வேண்டுமென்றும், நிச்சயமாக சிறுபான்மை மக்களுடைய காவலராக இருக்கின்ற நீங்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களோடு சமூகத்தினுடைய பாதுகாப்பு சிறுபான்மை மக்களுக்கும் வேண்டும் என்கிற அந்த நியாயத்தினை உணர்ந்து அவர்களுக்கான முறையான அதிகாரப் பங்கீட்டிற்கு வழி செய்ய வேண்டும். எனவே, இட ஒதுக்கீடு என்பது தர்மம் அல்ல. Reservation is not charity. It is birth right. இது எங்கள் பிறப்புரிமை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், சிறுபான்மை மக்களுக்கும், இட ஒதுக்கீடு என்பது யாரும் யாருக்கும் தருகிற தர்மம் அல்ல. அது இந்த நாட்டில், இந்த மண்ணில் பிறந்த எங்களுக்குக் கிடைக்க வேண்டிய முறையான அதிகாரப் பங்கீடு. அந்த அதிகாரப் பங்கீட்டை உறுதிசெய்யக் கூடிய மகத்தான இடத்தில் இருப்பது மட்டுமல்ல, அந்த மகத்தான மனநிலையும் கொண்டவராக நீங்கள் இருப்பதால்தான், உங்களிடம் நாங்கள் கேட்கிறோம். அதை நீங்கள் செய்து தர வேண்டுமென்று சொல்லி, அவை முன்னவர் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தினை காங்கிரஸ் கட்சியினுடைய சார்பாக வழிமொழிந்து அமைகின்றேன், நன்றி, வணக்கம்.



2006 மே 31]

*பிற்பகல் 12–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தனித் தீர்மானத்தின்மீது உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துகள் எனக்கும் ஏற்புடையது. எனவே, எனது ஆதரவான கருத்தினையும் இத்துடன் இணைத்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: முக்கியமான விஷயம். ஐந்தே நிமிடத்தில் முடித்து விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாளைப்பற்றி என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்வதற்காக எழுந்து நிற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே உரையாற்றும் போது, வடக்கே உள்ளவர்கள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, தாங்கள் பிரதிநிதித்துவம் வகிக்கிறோம் என்பதைப் புலப்படுத்தவில்லை, உறுதிப்படுத்தவில்லை என்று குறைபட்டுக் கொண்டார்கள்.

தமிழ்நாட்டிலே உள்ள நம்மைப்போல நாங்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று கூறிக்கொள்ளவே பலர் அங்கே வெட்கப்படுகிறார்கள். அதற்கு அவர்கள் தயாராக இல்லை. அதனால்தான் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக நடைபெறுகின்ற ஒரு பெரிய போராட்டத்திற்கு, எழுச்சிக்கு எதிராக முன்னேறிய மக்களுடைய தூண்டுதலின் காரணமாக, தீ குளிப்பு போன்ற நாடகங்கள் அங்கே நடைபெறுகின்றன; போராட்டங்கள் நடைபெறுகின்றன. இனியும் மத்திய அரசு வேடிக்கை பார்க்காது என்பதுபோல செய்திகள் வருகின்றன. வேடிக்கைப் பார்க்கக் கூடாது என்று நாம் இங்கிருந்து அவர்களுக்குச் செய்தி அனுப்பத் தயாராக இருக்கின்றோம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், ஆண்டாண்டு காலமாக நாம் நம்மை பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்று கூறிக்கொள்வதில் பெருமை அடைகிறோம். அதற்குக் காரணம், தந்தை பெரியார் போன்றவர்கள் நமக்கு ஏற்படுத்திய அந்த விழிப்புணர்வுதான். இதே அவையில் பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நினைவு இருக்கும் என்று கருதுகின்றேன். திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பார்த்து எதிர் வரிசையிலே இருந்த ஒரு நண்பர் இது மூன்றாம் தர அரசு என்று சொன்னார். உடனடியாக ஆளுந்தரப்பிலே உள்ள என்னுடைய நண்பர்கள் எல்லாம் எழுந்து கொதித்துப் போய் 'என்ன சொன்னாய், என்ன சொன்னாய்' என்று அலறியபோது நான் அவர்களையெல்லாம் அமைதிபடுத்திவிட்டு, நண்பர் சொன்னபடியே, இது மூன்றாம் தர அரசு அல்ல, இது நான்காம் தர அரசு என்று சொன்னேன். சொல்லிவிட்டு சொன்னேன். பிராமண,

க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்ற நான்கு பிரிவுகளில் இது நான்காவது பிரிவு, சூத்திரனுடைய அரசு என்றுதான் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு திருச்சியிலே இருந்து எனக்கு பாராட்டுத் தந்தி வந்தது. தந்தை பெரியார் அவர்கள் அந்த நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டு, தன்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்து எனக்குத் தந்தி அனுப்பினார். இதெல்லாம் நம்முடைய பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான போராட்டத்திலே வரலாற்றுத் துளிகள். இன்று மகிழ்ச்சிகரமான நாள் என்று நான் சொன்னதற்குக் காரணம், இந்த நாள் நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வரலாற்றுச் சிறப்புமிக்க நாட்களிலே ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

நேற்றைய தினம் நம்முடைய சட்டமன்றத்தைப்பற்றிக் குறிப்பிட்ட ஒருவர் 'கறுப்பு நாள்' என்று சொன்னதாக நம்முடைய ஞானசேகரன் அவர்கள் ரொம்பவும் வருத்தப்பட்டார். நீங்கள் அதை 'கற்பு நாள்' என்று எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகவே, நாம் கற்போடு நடந்துகொண்டோம். ஜனநாயகக் கற்போடு நடந்து கொண்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) அது ஒரு proof mistake. பிழை திருத்தி 'கற்பு நாள்'தான் நேற்றைய தினம் நடைபெற்றது என்பதை நாம் அவர்களுக்கு விளக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். தமிழ்நாடு சட்டப் பேரவையின் வரலாற்றுச் சிறப்புமிக்க நாட்களில் இன்றைய நிகழ்ச்சி இணைக்கப்படும் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் *12–30*

தமிழ்நாட்டிலே உள்ள பள்ளிகளிலே பயிலும் மாணவ, மாணவியர் மாநிலத்தில் ஆட்சி மொழியாகவும், உலகின் மூத்த மொழிகளில் ஒன்றாகவும் உள்ள தமிழ் மொழியைப் பாடமாகக்கூடப் பயிலாமல் தேர்ச்சிபெற்று, வெளியே வரக்கூடிய அவல நிலையைப் போக்கிட தமிழறிஞர்களும் நீண்ட நாளாகக் குரல் எழுப்பி வருவதையொட்டி, தமிழ்க் கல்வியைக் கற்று மாணவ, மாணவியர் மன வளம் பெற்றிடும் வகையிலும், தமிழை கட்டாயப் பாடமாக்கும் சட்டமுன்வடிவு இந்த அவையிலே இன்று நிறைவேற்றப்பட்ட நிகழ்ச்சி சிறப்பு மிகுந்த தமிழ் என்பதை நிலைநிறுத்துகின்ற நிகழ்ச்சியாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

இரண்டாவதாக, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்கள் நீண்டகாலமாக எதிர்பார்த்து வந்த சட்டமுன்வடிவு இன்று கொண்டுவரப்பட்டு, அதாவது தமிழ்நாட்டிலே உள்ள சுய நிதிக் கல்லூரிகளில் 69 சதவிகித இட





ஒதுக்கீட்டிற்கு வழிவகை செய்யும் வரலாற்றுச் சிறப்பு மிக்க சட்டமுன்வடிவு இங்கே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மூன்றாவதாக, மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பயனடையும் வகையில், சமூக நீதிக் காவலர் வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்தபோது மத்திய அரசுப் பணிகளில் வேலைவாய்ப்புக்கு மட்டும் இருந்த மண்டல் கமிஷன் பரிந்துரைகளில் ஒன்றான 27 சதவிகித இட ஒதுக்கீட்டை மத்திய அரசின் கல்வி நிறுவனங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நீண்டகாலமாக நாம் வேண்டுகோள் விடுத்து வருகிறோம். அந்த வேண்டுகோள் தற்போது மத்தியிலே அமைந்துள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால் நிறைவேற்றப்படும். வேளையில் சில இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த இடையூறுகளைக் களைந்து, நமது வேண்டுகோளை நிறைவேற்றித் தரவேண்டும் என்ற சிறப்புமிக்க தீர்மானத்தை இன்றைக்கு நாம் இங்கே மகிழ்ச்சியோடு நிறைவேற்ற இருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

நான்காவதாக, சிறுபான்மையினர் மிகுந்த ஆர்வத்தோடு எதிர்பார்த்து வந்த மதமாற்றத் தடைச் சட்டத்தை முழுவதுமாக நீக்குகின்ற சட்டமுன்வடிவு இன்றைக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஐந்தாவதாக, அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர்கள் தாங்கொணா துயரத்திற்கும், கொடுமைக்கும் ஆளாகக் காரணமாக இருந்த டெஸ்மா சட்டத்தை இன்றைக்கு உடைத்து, நொறுக்கிப் போட்டிருக்கின்றோம், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலே ஒரு தீர்மானத்தின் மூலமாக. எனவே, இந்நாள், நன்னாள், பொன்னாள் என்று கூறி அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களால் முன்மொழியப்பெற்ற கீழ்க்கண்ட திருத்தப்பெற்ற அரசினர் தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது:

*"மண்டல் குழு அளித்த பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு மைய அரசின் கீழுள்ள குடிமுறைப் பதவிகள் மற்றும் பணிகளில் உள்ள 27 விழுக்காடு காலியிடங்கள் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கீடு செய்யப்படும் என்று மைய அரசு 1990 ஆம் ஆண்டு ஆணை பிறப்பித்தது.*

மண்டல் குழு, கல்வி நிலையங்களிலும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டினைப் பரிந்துரை செய்த போதிலும் மேற்குறிப்பிட்ட இட ஒதுக்கீட்டினை மைய அரசின் கட்டுப்பாட்டின் கீழுள்ள கல்வி நிலையங்களுக்கான சேர்க்கைக்கு நீட்டிக்கவில்லை. அரசின் உதவிபெறும் மற்றும் உதவிபெறாத தனியார் கல்வி நிலையங்கள் உள்ளிட்ட அனைத்து கல்வி நிலையங்களிலும் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு வழங்க அரசுக்கு வழிவகை செய்யும் அரசியலமைப்புச் சட்டம் 93-வது திருத்தம் கொண்டு வந்ததன் விளைவாக ஐஐடி. மற்றும் ஐஐஎம். உள்ளிட்ட உயர்கல்வி நிலையங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்க மைய அரசு தற்போது உத்தேசித்துள்ளது. இந்த ஒதுக்கீடு அவர்களது முன்னேற்றத்தினை உறுதி செய்யும் என்பதாலும், அவர்களை சமுதாயத்தில் உள்ள மற்றவர்களோடு சமநிலைக்குக் கொண்டுவரும் என்பதாலும், மைய அரசால் கட்டுப்படுத்தப்படும் மற்றும் நிதி உதவி வழங்கப்படும் அனைத்து கல்வி நிலையங்களிலும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீட்டினை வழங்க தொடர்ந்து செயலாற்றுமாறு இந்த அவை மைய அரசைக் கேட்டுக்கொள்கிறது. இந்த ஒதுக்கீட்டினை செயல்படுத்த ஓர் அவசரச் சட்டத்தினைக் கொண்டுவருமாறும் இந்த அவை ஆலோசனை வழங்குகிறது.

மேலும் பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியமான சமூக நீதி வழங்கும் இட ஒதுக்கீட்டிற்கு எதிராகப் போராடும் மாணவர்கள் குறித்து உச்ச நீதிமன்றம் எச்சரித்த பிறகும், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. மன்மோகன் சிங் அவர்கள் பலமுறை வேண்டுகோள் விடுத்த பிறகும், சில ஆதிக்க சக்திகளின் தூண்டுதலினால் மாணவர்கள் தொடரும் போராட்டத்தைக் கைவிட்டு, அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என்றும் இந்த அவை கேட்டுக்கொள்கிறது"

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே 'இல்லை' என்று கருதுகிறேன்.

மறுப்போரே 'இல்லை'.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.



## 6. அறிவிப்பு

### ஓய்வுபெறும் சட்டமன்றப் பேரவை அலுவலருக்குப் பாராட்டு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்செயலகத்தில், 32 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு நிலைகளில் பணியாற்றி, பேரவை தொடர்புடைய அலுவல்கள் சரிவர நிறைவேற்றப்பட மிகுந்த ஈடுபாட்டுடன் ஒத்துழைப்பு நல்கிய கூடுதல் செயலாளர் திரு. அனீஸ் அஹமத் அவர்கள் இன்று *(31-05-2006)* பணியிலிருந்து ஓய்வு பெறுகிறார். அவருக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

## 4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன்கீழ், பேரவை மீண்டும் கூடும்நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெறுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும்நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12–34 மணிக்கு, மீண்டும் கூடும்நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

4. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 27–10–2005 ஆம் நாளிட்ட 65 ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

6. 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்) [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

—ஏதுமில்லை—

***

31/7/06
1010-3-3

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227075
சென்னை-600 008

அரசு மைய அச்சகம், சென்னை—600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.